MAHAANS
PICK & PRESS OIL MILL
ORGANIC BULK STORE
(416) 293 4010
kathir@mahaanspickandpressoilmill.com
www.mahaanspickandpressoilmill.com
5-5635 Finch Ave East,
Scarborough Ontario, Canada MIB5K9
ORGANIC - HEALTHY - TASTY

# தேசம்

NATION THE THESAM

416-333-6115
PLATINUM
PLATINUM CLUB AWARD IN 2023
Leading with Excellence

SALES REPRESENTATIVE
RAJ NADARAJAH
RE/MAX EXCEL

Issue - 07 Once a Month SEPTEMBER 2024

## “பல கூறுகளாக பிரிந்து நின்ற எமது தமிழினம் ஒரு தேசமாக எழுந்த நின்று இணைந்து குரல் எழுப்பும் வாய்ப்பை ‘ தமிழ் பொதுவேட்பாளர்’ என்னும் எழுச்சி ஏற்படுத்தியுள்ளது”

கனடாவில் நடைபெற்ற ‘ தமிழ் பொதுவேட்பாளர்’ என்னும் எழுச்சிக்கு ஆதரவு வழங்கும் கூட்டத்தில் ராஜா யோகராஜா அழுத்தமாகத் தெரிவிப்பு






உங்கள் அபிமான “தேசத்தின்“ இம்மாத “தேசக்குரல்“

## தமிழரசுக் கட்சியின் சிரேஸ்ட தலைவர்களின் துரோகத்தனங்களுக்கு மத்தியில் தலை நிமிர்ந்து நிற்கும் நமது ‘தமிழ்ப் பொது வேட்பாளர்’



# தனது 'சஜித்' ஆதரவு முடிவை நியாயப்படுத்த சுமந்திரன் எம்.பி.யே தமிழ் மக்களை பழிவாங்கியுள்ளார்.

கே.பாலா

"ஜனாதிபதிவேட்பாளர் சஜித்பிரேமதாசவை தமிழரசுக் கட்சி ஆதரிப்பதன் எதிர்வினையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு வெளிப்படுத்துவார் என்பது சுமந்திரன் எம்.பி.க்கு நன்கு தெரிந்தே தனது தனிநபர் பிரேரணை பாராளுமன்றத்திற்கு வருவதற்கு இரு நாள் முன்பு சஜித் ஆதரவை அறிவித்து ரணில் விக்கிரமசிங்கவை சூடாக்கி அதன்மூலம் தனது தனிநபர் பிரேரணையை தானே தடுக்க வைத்து ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களை பழிவாங்கி விட்டார். அவர் ஒரு மோசமான இனவாதி. எனவே நாம் சஜித்தை ஆதரிக்க எடுத்த முடிவு சரியானது என்ற பிரசாரத்தை சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவாக தொடங்கியுள்ளார்"

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி"

மேலோட்டமாகப் பார்த்தால் இது சாதாரண வேடிக்கை பாடல் போலத் தோன்றும். ஆனால் வாழ்க்கையின் உன்னதமான ஒரு தத்துவத்தை கடுவெளி சித்தர் நான்கு வரிகளில், எளிய வார்த்தைகளில் மிக அற்புதமாக விளக்கி இருப்பார். இது பலரின் வாழ்க்கைத் தத்துவத்தை விளக்குகின்றதோ இல்லையோ தற்போதைய நிலையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட எம்.பி.யான எம்.ஏ.சுமந்திரனுக்கு இப்பாடல் நன்றாகவே பொருந்துகின்றது. அது ஏன் என்று பார்ப்போம்.

மாகாண சபைகளுக்கான காலம் முடிவடைந்தும் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படாமையால் மாகாண சபைகள் செயலிழந்துள்ளன. புதிதாக எல்லைகளை நிர்ணயம் செய்து புதிய முறையில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த முயற்சித்த நிலையிலேயே மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது.இவ்வாறான நிலையிலேயே 25-04-2023 அன்று பழைய தேர்தல் முறையில் மாகாண சபை தேர்தல்களை உடனடியாக நடத்தக் கூடியவாறான தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட எம்.பி.யான எம்.ஏ.சுமந்திரன் தனிநபர் பிரேரணையாக சபையில் சமர்ப்பித்தார்.

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தை திருத்தும் வகையில் இந்த சட்டமூலம் சபையில் முதல் வாசிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டது. சுமந்திரன் எம்.பி. சமர்ப்பித்த இந்த தனிநபர் பிரேரணையை தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் எம்.பி.யுமான மனோ கணேசன் ஆதரித்து வழிமொழிந்திருந்தார். இந்த மாகாணசபை தேர்தல் திருத்தச் சட்டமூலம் தனிநபர் சட்டமூலமாக முன்வைக்கப்பட்ட நிலையில் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

மாகாண சபைத் தேர்தல்களை பழைய முறையில் நடத்தி மாகாண சபைகளை மீண்டும் இயங்க வைப்பதற்காக சுமந்திரன் எம்.பி.சமர்ப்பித்த தனிநபர் பிரேரணை கடந்த ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இரண்டாம் வாசிப்புக்காக எடுக்கப்பட்டு விவாதம் எதிர்ப்பின்றி இந்தச் சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றம் செய்துள்ள பரிந்துரைகளைச் சட்டமூலத்தில் திருத்தங்களாகச் செய்வதற்காக அது பாராளுமன்றத்தின் சட்டங்களுக்கான நிலையியற் குழுவுக்கு அனுப்பப்பட்டது. நிலையியற் குழுவின் திருத்தங்களோடு கடந்த செப்டம்பர் 3 ஆம் திகதி மீண்டும் பாராளுமன்றத்தில் மூன்றாம் வாசிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக நிறைவேற்றப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது.

சுமந்திரன் எம்.பி.யின் இந்த மாகாண சபைத் தேர்தல் தொடர்பான திருத்த சட்டமூல தனிநபர் பிரேரணைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆதரவளித்திருந்ததுடன் அதனை சட்டமாக நிறைவேற்றுவதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவும் உறுதியளித்திருந்தார். இதற்கிடையில் ஜனாதிபதித்தேர்தல் செப்டம்பர் 21 ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டு அதற்கான பிரசாரங்கள் தீவிரப்படுத்தப்பட்டன. இவ்வாறான நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் தமது வெற்றியை உறுதிப்படுத்த தமிழ் ,முஸ்லிம் கட்சிகளை ஆதரவைக் கோரினர்.

இதில் பல தமிழ் ,முஸ்லிம் கட்சிகள் ரணில் விக்கிரமசிங்க ,சஜித் பிரேமதாச ஆகியோருக்கு தமது ஆதரவு அறிவிப்புக்களை வெளியிட்ட நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சி மட்டும் யாருக்கும் ஆதரவளிக்காது இருந்தது. அக்கட்சியின் பேச்சாளரான எம்.ஏ. சுமந்திரன். நாம் தேர்தலுக்கு முதல் நாள் எமது ஆதரவு யாருக்கு என அறிவித்தாலும் தமிழ் மக்கள் அந்த வேட்பாளருக்கு ஆதரவளிப்பார்கள் என அறிவித்திருந்தார்.



இதற்கிடையில் மாகாண சபைத் தேர்தல்களை பழைய முறையில் நடத்தி மாகாண சபைகளை மீண்டும் இயங்க வைப்பதற்காக சுமந்திரன் எம்.பி.சமர்ப்பித்த தனிநபர் பிரேரணை செப்டம்பர் 3 ஆம் திகதி மீண்டும் பாராளுமன்றத்தில் மூன்றாம் வாசிப்புக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக நிறைவேற்றப்படுவதற்கு ஒழுங்குப் பத்திரத்தில் உள்வாங்க இணக்கம் காணப்பட்டிருந்தது. இது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க சுமந்திரனுக்கும் தெரியப்படுத்தியிருந்தார்.

இவ்வாறு சுமந்திரன் எம்.பி.யின் மாகாண சபைத் தேர்தல்களை பழைய முறையில் நடத்தி மாகாண சபைகளை மீண்டும் இயங்க வைப்பதற்கான தனிநபர் பிரேரணை சட்டமாவதற்கான காலம் கனிந்து வந்த நிலையில்தான் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத நிலைமை ஏற்பட்டுள்ளது .அதாவது செப்டம்பர் 3 ஆம் திகதி மீண்டும் பாராளுமன்றத்தில் மூன்றாம் வாசிப்புக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக நிறைவேற்றப்படுவதற்கு ஒழுங்குப்பத்திரத்தில் உள்வாங்க இணக்கம் காணப்பட்டிருந்த சுமந்திரனின் தனிநபர் பிரேரணை அன்றைய ஒழுங்குப் பத்திரத்தில் உள்வாங்கப்படவில்லை.

கடந்த செப்டம்பர் 3 ஆம் திகதி பாராளுமன்றம் கூடிய நிலையில் ஒழுங்கு பிரச்சினை ஒன்றை எழுப்பிய இலங்கை தமிழரசுக் கட்சியின் எம்.பி. யான எம்.ஏ.சுமந்திரன்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அதிகார பகிர்வு விவகாரம் குறித்து எம்முடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். இதற்கமைய 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சர்வகட்சி மாநாட்டை நடத்தினார். எமது பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் அந்த சர்வகட்சி கூட்டத்தின் 5 சுற்று பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டோம்.75 ஆவது சுதந்திரத்துக்கு முன்னர் அதிகார பகிர்வு உள்ளிட்ட அடிப்படை விடயங்களுக்கு தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி வாக்குறுதியளித்தார். ஆனால் ஏதும் நடக்கவில்லை. ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் எம்முடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது வருடக்கணக்கில் தாமதப்படுத்தப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று வலியுறுத்தினோம். இதனை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் உள்ள சட்ட சிக்கலுக்கு தீர்வு காணும் வகையில் தனிநபர் பிரேரணை ஒன்றை நான் கடந்த காலங்களில் முன்வைத்திருந்தேன்.

மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் சட்ட நிலையியல் குழுவில் அவதானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இன்று (செப்டம்பர் 3) மூன்றாம் வாசிப்புக்கு எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்றைய தின (செப்டம்பர் 3) பாராளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் அது சேர்க்கப்படவில்லை. இந்த சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த நிலையில் வெளியக அழுத்தத்தினால் மூன்றாம் வாசிப்புக்கு எடுத்துக் கொள்வது தடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 08 பக்கம்

தேசக்குரல்

## தேசம் குரல் –செப்டம்பர் 2024

Thesam Publishers
தேசம்
தேசம் வெளியீட்டாளர்கள்

EDITORIAL TEAM - THESAM
GRAPHIC: HEVEN
TECHNICAL: Y.INTHUNATHAN
PRINTERS: PRINT TECK
MARKETING & DISTRIBUTION
MANAGER - Ramsankr Sivanathan: 647.891.7725

Phone: 647 848 1113
Unit #201, 3967 Lawrence Ave East, Scarbourough, ON, M1G 1S2
Email: info@thethesam.com www.thethesam.com

# தமிழரசுக் கட்சியின் சிரேஸ்ட தலைவர்களின் துரோகத்தனங்களுக்கு மத்தியில் தலை நிமிர்ந்து நிற்கும் நமது 'தமிழ்ப் பொது வேட்பாளர்'

தமிழ்ப் பொது வேட்பாளரை எமது தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கும் முயற்சியில் ஆரம்பத்தில் பல சவால்களும் சங்கடங்களும் நிறைந்து காணப்பட்டாலும் அந்த முயற்சியில் கடுமையாக உழைத்தவர்களின் தொடர் முன்னெடுப்புகளுக்கு பயனளிக்கும் வகையில் அந்த தேசிய ரீதியிலான வாக்குப் போட்டிக்கு எமது தமிழர் தரப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் அரியநேத்திரன் அவர்கள் அனைவரின் புன்னகையோடு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒருவராக வலம் வந்தவண்ணம் 21ம் திகதிய வாக்கெடுப்பு தன்னை தயார்படுத்திய வண்ணம் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றார்.

எமது தமிழ்ப் பொதுவேட்பாளர் பா. அரியநேத்திரன் அவர்கள் ஈழத்தமிழர்களாலும் புலம் பெயர் தமிழர்களாலும் முழுமனதோடு வரவேற்பைப் பெற்றுள்ளார். அவருக்கான பிரச்சாரக் கூட்டங்கள் மற்றும் வீடு வீடாகச் சென்று மக்களிடம் ஆதரவு கேட்பது போன்ற தேர்தல் பணிகள் சிறப்பாக இடம்பெற்று வருவதைக் காண 'தமிழ்ப் பொது வேட்பாளர் தெரிவு' என்னும் உயரிய நோக்கங்கள் கொண்ட 'சிந்தனையின்' வெற்றியை எமது இனம் எட்டி விட்டதாகவே பார்க்க வேண்டியுள்ளது. சற்று ஆறுதல் அடையவும் செய்கின்றது.

இவ்வாறான நிலையில் . எமது தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிரான கோசங்கள் ஆங்காங்கே எழுந்தவண்ணம் உள்ளன. அது தமிழர் தரப்பிலிருந்து தான். அதற்கு மேலாக நாம் வெட்கப்பட்டு தலைகுனிந்து நடக்க வேண்டிய வகையில் 'எமது தமிழ்ப் பொது வேட்பாளர்' எந்தக் கட்சியைச் சேர்ந்தவரோ அந்த தமிழரசுக் கட்சியிலிருந்தே பாரிய எதிர்ப்புக்கள் தோன்றி எழுந்த வண்ணம் உள்ளன. நாளுக்கு நாள் புதிய புதிய தந்திரமான வார்த்தைகளோடு தமிழரசுக் கட்சியினால் 'மோசமான' விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

மறு பக்கத்தில் தென்னிலங்கை வேட்பாளர்கள் மத்தியிலிருந்து கூட விமர்சனங்கள் பெருமளவில் வெளிவராத நிலையில் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன்- கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா- அவரது புதல்வர்- சி. வி. கே. சிவஞானம் உட்பட சுமந்திரனின் ஏவல் நாய்களாகத் திரியும் பலரும் தென்னிலங்கை வேட்பாளருக்கு ஆதரவு தேடும் கபடத்தனத்தில் ஈடுபட்டு கொண்டு எமது தமிழ்ப்பொது வேட்பாளரையும் வையும் செயலையும் மேற்கொண்டு வருகின்றார்கள். இவர்களுக்கு எதிர்காலத்தில் எமது மக்கள் தகுந்த பாடத்தை புகட்ட வேண்டும் என்பதையும் நாம் இந்த பக்கத்தில் எழுதி வைக்க விரும்புகின்றோம்.

மற்றொரு பக்கத்தில் எமது தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் உள்ள தமிழர் அமைப்புக்கள் தமிழ்ப்பொது வேட்பாளருக்கு தங்கள் இதயபூர்வமான ஆதரவை வழங்கி நிற்கையில், கனடாவிலும் ஏனைய சில நாடுகளிலும் உள்ள தமிழரசுக் கட்சியின் கிளைகைள் பல சுமந்திரன் போன்றவர்களின் பாதகமான செயற்பாடுகளினால் மேற்படி கட்சிக் கிளைகளிலும் பிளவுகளை ஏற்படுத்தி வருகின்றனர். இந்த வகையில் கனடாவிலுள்ள தமிழரசுக் கட்சிக்கிளையினரும் 'சுமந்திரன்' வழியில் பாதாளத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எவ்வாறாயினும். கனடாவிலும் தாயக மண்ணிலும் ஏன்கொழும்பு நகரிலும் கூட தமிழ்ப் பொது வேட்பாளருக்கு நிலையான ஆதரவு இருந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. சில நாட்களுக்கு முன்னர் கனடாவில் நடைபெற்ற தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவு தேடும் கூட்டமொன்றில் உரையாற்றிய ஒரு அரசியல் செயற்பாட்டாளரின் கருத்துக்கள் தற்போது உலகெங்கும் உள்ள அரசியல் ஆர்வலர்களைச் சென்றடைந்துள்ளது.

'தமிழ் பொதுவேட்பாளர்' என்னும் எழுச்சிக்கு ஆதரவு வழங்கும் கூட்டத்தில் உரையாற்றிய ஈபிஆர்எல்எவ் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ராஜா யோகராஜா அழுத்தமாகவும் தெளிவாகவும் தன் கருத்துக்களை முன்வைத்து உரையாற்றினார்.

கடந்த பல வருடங்களாக இலங்கை அரசியலிலும் தமிழர் அரசியலிலும் பல கூறுகளாக பிரிந்து நின்ற எமது தமிழினம் ஒரு தேசமாக எழுந்த நின்று இணைந்து குரல் எழுப்பும் வாய்ப்பை ' தமிழ் பொதுவேட்பாளர்' என்னும் எழுச்சி ஏற்படுத்தியுள்ளது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இந்த முயற்சி ஒரு சாதாரணமான விடயமல்ல. தமிழ் மக்களாகிய எமது எதிர்காலத்தை தீர்மானிக்கவும் திட்டங்களைத் தயாரிக்கவும் ஏற்ற ஒரு ஆரம்பப் புள்ளியாகவே நாம் இந்த ' தமிழ் பொதுவேட்பாளர்' என்னும் முக்கிய கருப்பொருளைக் கருத வேண்டும்.

கடந்த காலங்களில் பல்வேறு கட்சிகள்.போராளி இயக்கங்கள் மற்றும் அமைப்புக்கள் என பிரிந்து நின்ற தமிழ் மக்களாகிய நாம் இந்த அவசியமான தருணத்தில் ' தமிழ் பொதுவேட்பாளர்' என்னும் கருத்தியலின் அடிப்படையில் ஒன்றுபட்டுள்ளோம். இந்த ஒற்றுமையையும் இணைவையும் நாம் இழந்து விடக்கூடாது. அதைக் கட்டிக் காக்க வேண்டும்.

எமக்கான ஒரு பொது வேட்பாளரை தெரிவு செய்த பணியானது ஒரு சாதாரணமான ஒன்றாக இருக்கவில்லை என்பதை இந்த மண்டபத்தில் அமர்ந்திருப்பவர்கள் அனைவரும் அறிவார்கள். சுமார் எட்டு மாதங்கள் பல கலந்துரையாடல்களை நடத்திய பல சவால்களைச் சந்தித்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது. அதன் பின்னரே தமிழ்ப் பொது வேட்பாளரை தெரிவு செய்யும் கட்டம் வந்தது. அதுவும் இலகுவானதாக இருக்கவில்லை. எனவே மிகவும் சிரமங்களையும் சவால்களையும் சந்தித்து முடிவு எடுக்கப்பட்ட ' தமிழ் பொதுவேட்பாளர்' என்னும் கருத்தியல் அழிக்கப்பட்டோ அன்றி ஒதுக்கப்பட்டோ போய்விடக்கூடாது. நாம் அனைவரும் ஒன்று பட்டு இந்த கருத்தையும் எழுச்சியையும் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகளும் தெளிவான கருத்துரைகளும் எமது எதிர்கால ஒற்றுமைக்கு வித்திடும் என்ற நம்பிக்கையோடு. செப்டம்பர் 21ம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் எமது தமிழ்ப் பொது வேட்பாளர் போட்டியிடுவதன் நோக்கம் நிறைவேறு ஒன்றாகவும் ஒரு தேசமாகவும் இயங்குவோம் என்ற வார்த்தைகளோடு, இம்மாத தேசக்குரலை நிறைவு செய்து மீண்டும் எமக்கு சாதகமான செய்திகளோடு இனிவரும் மாதத்தில் சந்திப்போம்.!

# LOGAN KANAPATHI

Member Provincial Parliament ~ Markham - Thornhill

## புதிய மாற்றம்

எமது மாகாண அரசு அவசர சேவைப் பிரிவில் சேவை புரியும் செவிலியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் அவசர உதவித் துறையின் சேவைகளை மேம்படுத்துகிறது. இது காத்திருப்பு நேரத்தை குறைத்தும், சிகிச்சை தரத்தை உயர்த்தியுமுள்ளது. இந்த முயற்சி, சுகாதாரத் துறையில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன், சேவையின் தரத்தையும் மேம்படுத்துகிறது. டொரண்டோவில் உள்ள தமிழ்ச் சமூகத்தினர் இந்த மாற்றங்களால் பெரிதும் பயன்பெறலாம். மேம்பட்ட சுகாதாரச் சேவைகளைப் பயன்படுத்தி, இந்த வாய்ப்புகளை தெரிந்துகொள்ள நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம்.



**மாகாணம் சார்ந்த தேவைகளுக்கு, என்னுடைய அலுவலகத்தை அணுகுங்கள்.**

**For appointments, email**
**logan.kanapathico@pc.ola.org**
**Tel: 905 305 1935**
**www. logankanapathi.ca**

**Constituency Office**
**7380 McCowan Road, Unit 3**
**Markham, ON L3S 3H8**

# ஒரு சர்க்கஸ் கம்பெனியும் பல கோமாளிகளும்

**தயானந்தா**

இதுவரை இல்லாததோர் ஜனாதிபதி தேர்தல் இலங்கையில் நடைபெற உள்ளது. பிரதானமாக இது மூன்று அல்லது நான்குமுனைப் போட்டி என்று சொல்லப்பட்டாலும் , களத்தில் வேஷம் கட்டி 38 பேர் உள்ளனர். ஒருவர் உயிரிழந்ததால் அந்த எண்ணிக்கையில் ஒன்று குறைந்துள்ளது.

இலங்கையின் பாரம்பரியக் கட்சிகளின் சீரழிவைக் காட்டும் ஒரு தேர்தலாக இதைப் பார்க்க முடியும். நாட்டிற்கு விடுதலைப் பெற்றுத்தந்தது என்று கூறிக்கொள்ளும் ஐக்கிய தேசியக் கட்சியும் மக்களிடம் பிரபலமாக இருந்த அதன் யானைச் சின்னத்தையும் இம்முறை காண முடியவில்லை. ஆனை கட்டி போரடித்த கூட்டத்தில் ஒரு தனித்த விவசாயி மட்டுமே களத்தில் நிற்கிறார். அந்தப் பாரம்பரியக் கட்சியின் தலைவராக பல ஆண்டுகளாகக் கோலோச்சி நாட்டின் பிரதமராக ,எதிர்க் கட்சித் தலைவராக, அரகலயவின் புண்ணியத்தில் ,இடைக் கால ஜனாதிபதியாக இருந்த ஒருவர் இன்று சுயேட்சையாக போட்டியிடும் நிலை.

உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையை பெற்றுத்தந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலையோ, அந்தோ ஐபரிதாபம் என்றாகி இருக்கிறது. அது கழுதையாகி அதுவும் தேய்ந்து கட்டெறும்பான நிலை. அக்கட்சியின் சார்பில் விஜேதாச ராஜபக்ச நிற்பதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், அவரோ அவரது கட்சியோ போட்டியிலேயே இல்லை என்று கூறும் சூழல் தான் நிலவுகிறது என்று கள ஆய்வுகள் காட்டுகின்றன. இம்முறை எந்த வேட்பாளரையும் ஆதரிக்கவில்லை ஆதரிக்கப்போவதுமில்லை என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் சொல்லிவிட்டு எங்கோ வாளாதிருக்கிறார்.

சுதந்திரக் கட்சியை உண்டு இல்லை என்று ஆக்கி, அதிலிருந்து பிரிந்து தனக்கென்று ஒரு கட்சியை குடும்ப சகிதம் உருவாக்கியவர் மகிந்த. தேர்தல் பகிஷ்கரிப்பால் ஜனாதிபதியாகி, போர் வெற்றிப் பெருமிதத்தில் தனது தம்பியையும் ஜனாதிபதியாக்கிக் காட்டிய மகிந்த ராஜபக்சவின் மொட்டின் இதழ்கள் உதிரத் தொடங்கி விட்டன. இன்று மொட்டு சின்னத்தில் தனது மகனை நிறுத்தியுள்ளார். உதிர்ந்த அந்தக் கட்சியில் மகிந்தவுடன் கூடி நின்ற பலர் இன்று பல்வேறு கட்சிகளில் ஐக்கியமாகியுள்ளனர்,பலர் தமது சுய அடையாளத்தையும் இழந்துள்ளனர்.

தலைவரும், பிரதித் தலைவரும் மோதிக்கொண்டதில் பிளவுபட்ட ஐக்கிய (மில்லாத) தேசிய கட்சி இன்று அதிகாரபூர்வமான முறையில் போட்டியில் இல்லை. ரணிலுடன் முரண்பட்டு பிரிந்துவந்த சஜித், தனியாக கூட்டணி அமைத்து பழைய தொலைபேசியில் போட்டியிடுகிறார். ஆதரவுக்காக பலருக்கும் மணியடித்த அந்த தொலைபேசிக்கு மக்கள் மணியடிப்பார்களா இல்லையா என்பது இன்னும் இரு வாரங்களில் தெரியவரும்.

நாட்டிற்கு நல்லதொரு திசையை காட்டுகிறேன் என்று கூறி அனுரகுமார திசாநாயக்க, தேசிய மக்கள் சக்தி என்ற ஒரு கூட்டணியை ஏற்படுத்தி களத்தில் நிற்கிறார். அவர் நல்லதொரு திசையை காட்டுவார் என்று பரந்தளவில் நம்பப்படுகிறது. அவர் முன்னர் இருந்த மணி கட்சியில் இப்போது விரிசல் விழுந்து அது ஒலிப்பதை நிறுத்திவிட்டது. அதிலிருந்த மணியான தலைவர்களும் சித்தாந்தம் என்ற ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்று பசையுள்ள பக்கம் சென்றுவிட்டார்கள்.

காழ்ப்புணர்ச்சியின்றி பாரபட்சமற்று பார்ப்பதென்றால், இம்முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுபவர்கள் அனைவருமே ஒரு புதிய கட்சி அல்லது அமைப்பைச் சேர்ந்தவர்கள். ரணில் விக்ரமசிங்க ஜனாதியாக இருந்தாலும், அவருக்குக் கட்சி இல்லை. நாட்டில் கம்பீரமாக உலவி வந்த யானையை இப்போது காட்டில் மட்டுமே பார்க்க முடிகிறது. கையே நம்பிக்கை என்றதும் போச்சு. பாரம்பரியமாக வெற்றிலை கொடுத்து வரவேற்று உபசரிப்பது பண்பாட்டளவில் உள்ளதே தவிர சுவரொட்டிகளில் அதை கண்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. மணியோ இப்போது கோவில்களிலும் தேவாலயங்களிலும் மட்டுமே ஒலிக்கின்றன.

இவற்றுக்கு இடையே வடக்கில் தனி ஆவர்த்தனம். ஒரு புறம் பகிஸ்கரிப்பு பிரச்சாரம், மற்றொருபுறம் குழப்பங்களுக்கு இடையே சஜித்திற்கு ஆதரவு என்ற நிலைப்பாடு. இதற்கு இடையே 'வடக்கு-கிழக்கு சிவில் சமூகம்' மற்றும் 'லெட்டர் பேட் கட்சிகள்' என்று மக்களால் விமர்சிக்கப்படும் கட்சிகள் ஆகியவை இணைந்து பொது தமிழ் வேட்பாளர் ஒருவரை களமிறக்கியுள்ளனர். கிழக்கைச் சேர்ந்த ஒருவரை வடக்கிலுள்ளோர் வேட்பாளர் ஆக்கியுள்ளதே புதிய சிந்தனை, முன்னெடுப்பு என்று ஒரு தரப்பு புளகாங்கிதம் அடைகிறது.

சங்கை கையில் எடுத்துள்ள அரியநேத்திரன் அந்த சங்கொலி ஓங்கி ஒலித்து முழங்கச் செய்வாரா அல்லது மொத்தமாக தமிழ் தேசியம் என்ற கொள்கைக்கு சங்கூதிவிடுவாரா என்ற பேச்சுக்களும் அங்குமிங்குமாக எழுந்துள்ளன.



நாங்கள் எப்போதும் தேசியவாதிகள் என்று கூறிக்கொண்டு சிலர் தேசியக் கட்சிகள் மற்றும் அதன் வேட்பாளர்களை ஆதரிப்பதே தமது தலையாய கடமை என்று உறுதியாகவுள்ளனர்.

மலையகமும் பிளவுபட்டு நிற்கிறது. தமிழ் முற்போக்கு கூட்டணி தொலைபேசி மீது விளக்கொளியைப் பாய்ச்சியுள்ளது, சேவலோ சிலிண்டர் மேலேறி குந்தியுள்ளது. இனியும் எந்த அரசியல் கட்சியையும் நம்பி பிரயோசனம் இல்லை. மலையக மக்களை இரண்டாம்தர பிரஜைகள் என்ற நிலையிலிருந்து மீட்டெடுக்க வேண்டும் என்று மயில்வாகனம் திலகராஜ் களத்தில் இறங்கியுள்ளார்.

இப்படியான பின்னணியிலேயே இந்தத் தேர்தலை பல கோணங்களிலிருந்து பார்க்க முடியும், அல்லது பார்க்க வேண்டும், அல்லது அலச வேண்டும். இதெல்லாம் இன்னும் இரண்டு கிழமை மட்டுமே. 21ஃ22ஆம் திகதிக்கு பிறகு ஆட்டம் வேறு மாதிரியாக இருக்கும்.

சரியாக 14 நாட்களில் ஜனாதிபதித் தேர்தலை நாடு சந்திக்க இருக்கிறது. முன் எப்போதும் இல்லாத வகையில் இனவாதப் பரப்புரைகள் அதிகமற்ற ஒரு பிரசாரத்தை இம்முறை காணக் கூடியதாக இருக்கிறது.

ஜனாதிபதி தேர்தலில் அதிக வாக்குகளைப் பெறக் கூடிய பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியாகி இருகின்றன. ஐந்தாண்டு செயற்பாடு  இயலும் சிறீலங்கா என்கிறார் ரணில் விக்கிரமசிங்க, ஒன்றிணைவோம் அர்ப்பணிப்போம் வெற்றி பெறுவோம் என்று ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தனது சகலருக்கும் வெற்றி என்ற மகுடத்தின் கீழான தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டிருக்கிறார். அழகான வாழ்க்கை வளமான நாடு என்கிறது தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திஸாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனம். நாமல் இலக்கு - உங்களுக்காக முன்னேற்றகரமான நாடு என்ற தலைப்போடு நாமல் ராஜபக்ஷவின் விஞ்ஞாபனம் வெளியாகியுள்ளது.

மறுபுறத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் தேர்தல் அறிக்கையும் வெளி வந்திருக்கிறது. இந்த அறிக்கையின் பேசு பொருளாக நாட்டின் இனப்பிரச்சனை மையப் படுத்தப்பட்டிருக்கிறது.

தென்னிலங்கை வேட்பாளர்களின் விஞ்ஞாபானங்கள் அனைத்திலும் நாட்டின் பொருளாதார நெருக்கடியும் அதனை மீட்பதற்கான தமது திட்ட செயற்பாடுகளுமே பெரிதும் முதன்மை பெற்றுள்ளன. இந்நிலையில் நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி என்பதே இனப்பிரச்சனையை போரினால் முடித்து வைக்கும் முயற்சியில் கடந்த கால அரசுகள் பெற்ற கடன் சுமைதான் என்பதை தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் அறிக்கை சுட்டிக் காட்டி இருக்கிறது.

புரையோடிப் போயுள்ள இனபிரச்சனையும் யுத்த முடிவிற்கு பின்னர் எழுந்துள்ள புதிய பிரச்சனைகளுக்குமான தீர்வுகளாக முக்கியமான விஞ்ஞாபனங்கள் என்ன சொல்லி இருக்கின்றன என்பது கவனத்திற்குரியது.

கடன் சுமையிலிருந்து நாட்டை மீட்பது, மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழி சமைப்பது, புதிய வருமான வழிமுறைகளைக் கண்டறிவது, வரிக்கொள்கைகள். வேலைவாய்ப்புகள்,, கல்வி, சுகாதாரம் , விவசாயம், தொழில்நுட்பம் என பல விடயங்கள் வழமைபோலவே இவற்றில் பேசப்பட்டுள்ளன.

தற்போதைய ஜனாதிபதியும் வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டப்படி மாகாண சபைகளுக்கு அதிகாரம் பகிரப்படும் என்றும் மத்திய அரசாங்கம் மாகாண சபைகளிடம் இருந்து திரும்பப் பெற்றுக்கொண்ட அதிகாரங்கள் மீண்டும் மாகாணசபைகளுக்கு கொடுக்கப்படுவதாகவும் பொலிஸ் அதிகாரம குறித்து புதிய நாடாளுமன்றம தீர்மானம் எடுக்கும் என்பதாகவும் கூறி இருக்கிறார். ஆனால், இதுவரை காலம் பிரதமராகவும் ஜனாதிபதியாவும் இருந்த போது இதெல்லாம் அவர் மனதில் உதிக்கவில்லையா, அல்லது செய்ய மனமில்லையா என்று மக்கள் கேட்பது அவர் காதில் அவசியம் விழுந்திருக்கும்.

மாவட்ட அபிவிருத்தி சபை நிறுவப்படும் அதேவேளை புதிய நாடாளுமன்றத்திடம் புதிய அரசமைப்பை இயற்றும் பொறுப்பு வழங்கப்படும் என்றும் ரணில் தெரிவித்துள்ளார். முன்னாள் போராளிகளுக்கான சுயதொழிலுக்கான நிதி நிவாரணம், போரில் இழக்கப்பட்ட தனியார் காணிகளுக்கான தீர்வை தரும் தேசிய காணி ஆணைக்குழு, காணாமல்போனவர்கள் தொடர்பில் நவாஸ் ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்துதல் அகியவற்றுக்கான உறுதி மொழிகளை தந்திருக்கிறார். இதெல்லாம் வாசிப்பதற்கும் கேட்பதற்கு நன்றாக இருந்தாலும், இரண்டாம் வாசிப்பின் போது புளித்துப்போன பழைய விடயங்களாகவே தோன்றுகிறது.

இதேவேளை தற்போதைய அரசமைப்பு 13வது திருத்தம் உட்பட முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்ற உறுதிமொழியை சஜித் பிரேமதாச தந்திருக்கிறார்.. ஆறு மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என்று சொல்லும் சஜித் அவர்கள், தற்போதைய அரசியல் முறைமை பாராளுமன்ற முறைமைக்கு மாற்றி அமைக்கப்படும் எனக் கூறுகிறார். அதாவது நிறைவேற்று ஜனாதிபதி அதிகார முறை குழி தோண்டி புதைக்கப்படும் என்கிறார் சஜித். இது யதார்த்த ரீதியில் சாத்தியமா என்று அவரது மனசாட்சி பதில் சொல்லும். ஒரு முறை பதவி சுகத்தை அனுபவித்துவிட்டால் அதிலிருந்து வெளிவருவது எவ்வளவு கடினம் அல்லது விருப்பமில்லாதது என்று அனைவருக்குமே தெரியும். அப்படி நடந்தால் மகிழ்ச்சியே.

அரச ஆதரவுடனான இனவிகிதாசாரத்தை மாற்றியமைக்கும் கொள்கைகள் தடுக்கப்படும் என்றும், பாதுகாப்பு தரப்பின் கைகளில் இருக்கும் தேவையற்ற நிலங்கள் காணி உரிமையாளர்களிடம் விரைவில் கையளிக்கப்படும் என்றும் அவர் உறுதி கூறி இருக்கிறார்.

தொடர்ச்சி 06 பக்கம்

# எமது பொது வேட்பாளரை குழி தோண்டிப் புதைக்க எண்ணும் 'வில்லன்'

பொது வேட்பாளருக்கு இதுவரை காலமும் பொது எதிரி என்று யாரும் இருக்கவில்லை. ஆனால் சுமந்திரன் தமிழரசு கட்சியை சஜித்தை நோக்கிச் சாய்த்ததோடு பொது வேட்பாளருக்கு ஒரு வில்லன் கிடைத்துவிட்டார்.

ஒரு நண்பர் பகிடியாகச் சொன்னார், அரியனேந்திரனை சுமந்திரன் எம்ஜிஆர் ஆக்கிவிட்டார்,இனி நடக்கப் போவது எம்ஜிஆருக்கும் நம்பியாருக்கும் இடையிலான சண்டை.தமிழ் கூட்டு உளவியல் என்பது கதாநாயகன்-வில்லன் என்ற துருவ நிலைப்பட்ட மோதலை ரசிப்பது. நமது புராணங்களில் இருந்து திரைப்படங்கள் வரையிலும் அப்படித்தான் காணப்படுகின்றன.இந்நிலையில் தமிழரசுக் கட்சியை தமிழ்க் கூட்டு உணர்வுக்கு மாறாக சஜித்தை நோக்கி திருப்பியதனால் சுமந்திரன் இப்பொழுது வில்லனாக காட்டப்படுவார். அவர் வில்லனாகவும் அரியநேத்திரன் கதாநாயகனாகவும் காட்சிப்படுத்தப்படும் பொழுது அங்கே ஒரு திரைப்படம் ஓடும். அது தமிழ் பொது உளவியலைக் கவரும்.இனி, தமிழ்ப் பொது வேட்பாளருக்கான பிரச்சாரம் தன்பாட்டில் நடக்கும். கதாநாயகனுக்கு வில்லனுக்கு இடையிலான மோதல் .அது அரியனேத்திரனை நோக்கி அதிகம் வாக்குகளை ஈர்க்கும்" என்று.

ஆனால் அரியநேத்திரனை ஒரு பொது வேட்பாளராக முன்னிறுத்திய பொதுகட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மக்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் தெளிவாகக் கூறுகிறார்கள்...தமிழ் மக்களைத் திரட்டுவது அல்லது ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் மக்களை ஒன்றிணைப்பது அல்லது தேசத்தைக் கட்டி எழுப்புவது என்பது ஒரு நபருக்கு எதிராகவோ ஒரு கட்சிக்கு எதிராகவோ செய்யப்படும் விடயம் அல்ல என்று. ஒரு நபருக்கு எதிராகவோ ஒரு கட்சிக்கு எதிராகவோ தேசத்தைக் கட்டி எழுப்ப முடியாது. தேசத்தைக் கட்டி எழுப்புவது என்பது ஆக்கபூர்வமானது. அது எதிர்மறையானது அல்ல. இந்த இடத்தில் வில்லர்களை முன்வைத்து அவர்களுக்கு எதிராக ஒரு மக்கள் கூட்டத்தை கட்டமைப்பது நிரந்தரமானது அல்ல.சரியானதுமல்ல என்பது தமிழ் மக்கள் பொதுச்சபைக்குள் அங்கம் வகிக்கும் கருத்துருவாக்கிகளின் நிலைப்பாடாகும்.

ஆனால் தேர்தல் களம் அந்த நிலைபாட்டிற்கு மாறாக கதாநாயகன் வில்லன் துருவ நிலைப்படத் தொடங்கி விட்டது.அதாவது தமிழ்ப் பொது உளவியலின் பொதுவான வாய்ப்பாட்டுக்குள் அது விழத் தொடங்கிவிட்டது.. இதனால் அரியநேத்திரனை நோக்கி குவியும் வாக்குகளின் தொகை அதிகரிக்கலாம்.



தமிழரசுக் கட்சியில் உள்ள சுமந்திரன் அணியின் இந்த முடிவு ஓரளவுக்கு எதிர்பார்க்கப்பட்டது. அதில் புதிதாக ஒன்றும் இல்லை. ஏற்கனவே கட்சியின் இரண்டு மாவட்டக் கிளைகள் பொது வேட்பாளருக்கு ஆதரவான நிலைப்பாட்டை உறுதியாக எடுத்திருந்த ஒரு பின்னணியில், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு சஜித்தை ஆதரிக்கும் முடிவை எடுத்திருக்கின்றது.

அதை அவர்கள் புத்திபூர்வமாக எப்படி நியாயப்படுத்துவார்களோ தெரியாது. ஆனால் கடந்த வார கட்டுரையில் கூறப்பட்டது போல,அரசியலை கணிதமாக, விஞ்ஞானமாக அணுகும் யாருக்கும் அது தெளிவாகத் தெரியும். சஜித்திடம் 13ஐத் தவிர வேறு எதுவும் இல்லை. அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில்தான் ஒரு புதிய யாப்பை பற்றிச் சிந்திக்கலாம். இந்நிலையில் தமிழரசுக் கட்சி கேட்கும் சமஸ்டித் தீர்வை அவர் தரப்போவதில்லை.

13கூட ஒரு புதிய தீர்வு அல்ல. ஏற்கனவே யாப்பில் இருப்பது. அப்படிப் பார்த்தால் யாப்பை நிறைவேற்றுவேன் என்று கூறும் ஒரு வேட்பாளருக்கு தமிழ் மக்களை வாக்களிக்குமாறு தமிழரசுக் கட்சி கேட்கின்றதா? இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால், ஒரு நாட்டின் அதி உயர் சட்ட ஆவணமாகிய யாப்பை நிறைவேற்றுவது தான் அந்நாட்டின் தலைவர்களுடையதும் அரசாங்கத்தினதும் பொறுப்பாகும். இலங்கைத் தீவு நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி முறைமையைக் கொண்டது. கடந்த மூன்று தசாப் தங்களுக்கு மேலாக எட்டு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிகள் பதவியில் இருந்திருக்கிறார்கள். இவர்களில் யாருமே யாப்பில் இருக்கும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்தவில்லை என்பது எதனைக் காட்டுகிறது? முப்படைகளையும் கட்டுப்படுத்தும் நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதிகள் யாப்பை நிறைவேற்றத் தவறியிருக்கிறார்கள் என்பதை தானே காட்டுகிறது! அதாவது இலங்கைத் தீவின் யாப்பை மீறி அவர்கள் ஆட்சி செய்திருக்கிறார்கள் என்று பொருள். கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக யாப்பை மீறும் ஒரு பாரம்பரியத்தை கொண்ட ஒரு நாட்டில் இப்பொழுது ஒரு தலைவர் யாப்பை அமல்படுத்துவேன் என்று கூறுகிறாராம் அவருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டுமாம்.

சுமந்திரன் அணியின் இந்த முடிவு தமிழரசு கட்சிக்குள் மேலும் பிளவுகளை அதிகப்படுத்துமா? ஏற்கனவே இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. பொது வேட்பாளர் விடயம் தமிழரசு கட்சிக்குள் ஏற்கனவே காணப்படும் தலைமைத்துவ போட்டியை மேலும் ஆழப்படுத்தக்கூடிய வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவான அலையொன்று எழத் தொடங்கியிருக்கும் ஒரு பின்னணியில், சுமந்திரன் அணியின் முடிவு வந்திருக்கிறது. இரண்டு மாவட்டக் கிளைகள் பொது வேட்பாளருக்கு ஆதரவாக தீர்மானத்தை நிறைவேற்றியிருந்த ஒரு பின்னணியில், ஏனைய மாவட்டக் கிளைகளும் அவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதைத் தடுக்கும் நோக்கத்தோடும் அவ்வாறு சஜித்தை ஆதரிக்கும் முடிவு எடுக்கப்பட்டிருக்கலாம்.

இலங்கை போன்ற நாடுகளில் தேர்தலுக்கு முதல் வாரம் அல்லது சில நாட்களுக்கு முன்னர்தான் வாக்களிப்பு அலை தோன்றும். தமிழ்த் தேசிய அரசியலுக்கும் இது பொருந்தும்.

தமிழ் நடுத்தர வர்க்கத்தில் ஆங்கிலம் தெரிந்த ஒரு பகுதியினர் ரணில் மீதும்

# ஒரு சர்க்கஸ் கம்பெனியும் பல கோமாளிகளும்

05 பக்கத் தொடர்ச்சி

மற்றுமொரு முதன்மை வேட்பாளராக கருதப்படும் அனுரகுமார திசாநாய்க்க 2015 2019 ஆட்சிக் காலத்தில் முன் வைக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை துரிதமாக நிறைவு செய்து புதிய அரசமைப்பு இயற்றப்படும் என்ற உத்தரவாதத்தை வழங்கி இருக்கிறார். நாட்டில் கடந்த காலத்தில் இடம்பெற்ற படுகொலைகள், காணாமல் போனோர் மற்றும் ஆட்கடத்தல்கள் பற்றிய உரிய விசாரணைகளும் நீதி வழங்கலும் நிலைநாட்டப்படும் என்றும், அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு அவர்களின் சுதந்திர வாழ்வுக்கு வழிவகுக்கப்படுவதோடு, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உள்ளடங்கலாக அடக்குமுறைசார்ந்த அனைத்துச் சட்டங்களும் இல்லாதொழிக்கப்படும் என்றும் உறுதி அளித்திருக்கிறார்.

அத்தோடு, மத முரண்பாடுகளை தீர்க்கவல்ல சர்வ மதப் பேரவை அமைக்கப்படும் என்றும் அவர் கூறி உள்ளார். தமிழ் பேசும் மக்களின் இடங்களில் தமிழ் மொழியின் பயன்பாட்டை உறுதி செய்தல், காணிகள் மற்றும் வாழ்விடங்கள் தொடர்பான விவகாரங்களுக்காக தேசிய ஆணைக்குழு அமைத்தல், வலிந்த குடியேற்றங்களைத் தடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்த உறுதிப்பாடுகளும் அனுரவின்விஞ்ஞாபனத்தில்வலியுறுத்தப்பட்டுள்ளன.

ஆனால் தமிழர்களின் பிரதான கோரிக்கையான வடக்கு-கிழக்கு இணைப்பு, போர்க்காலங்களில் இடம்பெற்றதாக கூறப்படும் பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்களுக்கு பொறுப்புக்கூறல் ஆகியவற்றை எல்லோருமே சௌகரியமாக மறந்துவிட்டார்கள்.

இலங்கை இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் தேர்தல்கால வாக்குறுதிகள் பெரும்பாலும் சிலுசிலுப்பைகளே தவிர தேர்தல் வெற்றிக்கு பின்னர் அவை பலகாரம் ஆவதில்லை என்பதே அனுபவ அறிவு சொல்லும் பாடம்.

இதெல்லாம் அரசியலில் சகஜமப்பா என்று உங்கள் மனதில் தோன்றினால் அதற்கு நாம் பொறுப்பல்ல. அதே நேரம் நகைச்சுவை இல்லையென்றால் வாழ்க்கையும் இல்லை. ஆக மொத்தம் மக்கள் பையில் இருக்கும் காசை கொடுத்துவிட்டு, சிரிக்க வைக்கும் கோமாளிகளை கண்டு கைதட்டிவிட்டு அடுத்த வேலையைப் பார்க்கச் சென்று விடுவார்கள்.

அடுத்த நாள் அந்த கோமாளிகளைப் பார்க்க வேறு சிலர் வருவார்கள். இப்படித்தான் சர்க்கஸ் கம்பெனிகள் நடைபெறுகின்றன



இம்மாதச் சிறுகதை! இம்மாதச் சிறுகதை! இம்மாதச் சிறுகதை!

# நில்! கவனி! கண்ணீர் விடு!

மலையன்பன்

கோடைவிலகி இலையுதிர் காலம் தோன்றவே, அதனை வரவேற்கவேண்டிய கட்டாயத்திற்கு மக்கள் தள்ளப்பட்டிருந்தார்கள். வீதியில் இருமருங்கும் வளர்ந்திருந்த மரங்களிலிருந்து விழுந்த இலைகள் காற்றின் வீச்சுக்கு அள்ளுப்பட்டுப் போக, எஞ்சியவை கரைக்கு வந்து ஒதுங்கிய மீன் குஞ்சுகளைப் போல தரையெங்கும் ஊசலாடிக்கொண்டிருந்தன..

சற்று குளிரான கால நிலை என்பதால் வெளியில் நடந்து செல்பவர்கள் அரைக்குளிரைத் தாங்கக்கூடிய ஜாக்கட்களை அணிந்து சென்றார்கள். நகரசபை சுத்திகரிப்பு லாறி ஒன்று, ஒரு வீட்டின் முன்பாக வைக்கப்பட்டிருந்த 'பிளாஸ்ரிக் பின்' ஒன்றில் நிறைந்து வழிந்த குப்பைகளை தனது இயந்திரக் கைகளால் தூக்கி பக்குவமாக உள்ளே வீசியது.

வாகனத்தைச் மெதுவாகச் செலுத்தியபடி வீதியால் சென்று கொண்டிருந்த நேசன் ஆரம்ப பாடசாலை அமைந்திருக்கும் சந்தியைக் கடப்பதற்கு முன்பாக சிவப்பு நிற வீதிச் 'சிக்னல்' ஒளிர்ந்தது. அதனால் தனது நிசானை 'பிறேக்' போட்டு நிறுத்திக் கொண்டு வலப் புறமாகப் பார்வையைச் செலுத்தினான்.

சில விநாடிகள் அவனது கைகளுக்கும் கால்களுக்கும் ஓய்வு. ஆனால் மனம் வேகமாக இயங்கிக்கொண்டிருந்தது.. நோய்த் தொற்று தொடர்பான பயம் நேசனையும் பற்றியிருந்தது உண்மைதான். ஆனால் அனைவருமே தங்கள் கடமைகளை கவனிக்கத் தானே வேண்டும்?

அந்தப் பாடசாலைக்குத் தான் நேசனின் இரண்டு பெண் பிள்ளைகளும் சென்று வருகின்றார்கள். வாரத்தில் ஐந்து நாட்களும் இங்கு வந்து அவர்களை வீட்டுக்கு அழைத்துப் போகும் பொறுப்பும் அவனுக்கு இருந்தது.

சாதாரண நாட்கள் என்றால் இந்த நேரத்தில் பெற்றோர் அல்லது உறவினர்கள் கூடி நின்று ஒருவர் இருவராக உரையாடிக் கொண்டிருப்பார்கள். ஆசிரியர்கள் சிலர் வெளியே வந்து வெளியில் விளையாடும் பிள்ளைகளைக் கவனிக்கும் பணியைச் செய்து கொண்டிருப்பார்கள்.

ஆனால் இன்று நிலைமை அப்படியில்லை. உலகத்தையே கலக்கி நிற்கும் 'கொரோனா' இப்போது அவர்களை வீட்டிலிருந்து கற்றலை தொடர வைத்துவிட்டது.

பாடசாலைக்கு வரும் பெற்றோர்களின் எண்ணிக்கையும் குறைந்து விட்டது. ஆனாலும் அரசாங்கத்தின் ஏற்பாட்டின்படி, விருப்பமுள்ள மாணவர்கள் பாடசாலைக்கு நேரடியாக சமூகமளித்து. தமது கற்றலை தொடரலாம் என்ற ஒழுங்கின் பிரகாரம், அந்தப் பாடசாலை மீண்டும் திறக்கப்பட்டிருந்தது. அதன் அறிகுறியாக மாணவர்களும் ஆசிரியர்கள் சிலரும் வெளியே மைதானத்தில் தேகப்பயிற்சி செய்த வண்ணம் நின்றார்கள்.

நேசனின் வாகனத்தின் பின்னால் நின்ற கார்ச் சாரதி ஒங்கி எழுப்பிய "ஹார்ன்" சத்தத்தால் பாடசாலைப் பக்கமிருந்த பார்வையை வீதிச் சிக்னல் பக்கம் திருப்பினான். எதிரே சிவப்பிலிருந்து பச்சைக்குத் திரும்பியிருந்த 'சிக்னல்' விளக்கு நேசனைப் பார்த்துச் சிரித்தது.

பின்னால் வாகனச் சாரதிக்கு கைகளால் சைகை காட்டி மன்னிப்புக் கேட்டுவிட்டு தனது வாகனத்தை மீண்டும் செலுத்தத் தொடங்கினான். சற்றுத் தூரம் கடந்த பின்னர் தான் அவனுக்கு "ஒன்றை மறந்துவிட்டாயே" என்று மனம் சொல்லியது.

கடந்து வந்த பாடசாலைச் சந்தியில் மஞ்சள் நிறத்திலான மேலுடை அணிந்தபடி தனது பணியைச் செய்து கொண்டிருந்த அந்த வீதிப் பாதுகாப்புப் பெண்ணுக்கு வழமை போல கையசைக்க மறந்து விட்டோமே என்று கவலைப்பட்டான்.

பாடசாலையில் கற்றுவரும் பிள்ளைகளை, அவர்கள் வீதியைக் கடந்து செல்லும் போது வேகமாகச் செல்லும் வாகனங்களிடமிருந்து 'பாதுகாக்கும்' பணியைத் தான் அவள் ஏற்றிருந்தாள். ஆனாலும் பெற்றோர்கள் வீதியைக் கடந்து செல்லும் போதும் கூட தனது கவனத்தைச் செலுத்தும் அந்தப் பெண்ணின் கடமையுணர்வு நேசனைக் கவர்ந்திருந்தது.

அதற்காகவே அவன் பாடசாலை செல்லும் போதெல்லாம் அவளருகில் சென்று சுகம் விசாரிப்பதும் வருடத்தில் ஒரு நாள் வரும் 'கிறிஸ்மஸ்' விடுமுறைக்கு முன் வரும் கடைசி நாளில் 'கிவ்ட் காட்ட்' ஒன்றை வாங்கி பிள்ளைகளின் கரங்களால் அவளுக்கு வழங்குவதையும், வழக்கமாகக் கொண்டிருந்தான் நேசன்

சரியாக நான்கு மாதங்களுக்குப் பின்னர் முதன் முதலாக அவளை பார்க்க நேர்ந்தும், வழமையாக செய்யும் ஒன்றை தவறவிட்டது நேசனுக்கு சற்று கவலையாக இருந்தது.

""சரி திரும்பி வீட்டுக்குப் போகும் போது வாகனத்தை நிறுத்தி கதைத்து விட்டுப் போகலாம்" என்று தன்னைக் தேற்றிக்கொண்டான். பின்னால் வந்து கொண்டிருந்த கார்ச் சாரதி மீண்டும் அவனை விடுவதாக இல்லை. மிகவும் வேகமாக நேசனின் வாகனத்தை 'ஓவர்டேக்' செய்தபடி அவனுக்கு 'நடுவிரலை'க் காட்டிவிட்ட திருப்தியோடு சென்று மறைந்தான்.

சாதாரண நாட்களாக இருந்திருந்தால், நேசன் அந்த சாரதியை விட்டிருக்க மாட்டான். இவ்வாறான மரியாதைக் குறைவான காரியங்களைச் செய்பவர்கள் அல்லது தூசண வார்த்தைகளால் திட்டிச் செல்கின்றவர்கள் போன்றவர்களை பல தடவைகள் துரத்திச் சென்றிருக்கின்றான். பலர் வேகமாக ஓடி மறைந்திடுவிடுவார்கள். சிலர் இன்னுமொரு தடவை முன்னர் செய்த 'அதையே' செய்து விட்டுப் போவார்கள். அதற்குள் நேசனுக்கு 'பொத்துக் கொண்டு வந்த கோபம்' மறைந்து விடும்.

ஆனால் இன்று அவன் அவ்வாறு அந்த வாகனத்தை துரத்திக் கொண்டு போகவில்லை. உலகமே 'ஆட்டம்' கண்டுவிட்டது. மனதில் ஒரு பயம். எதிர்காலம் எப்படியிருக்கப்போகின்றது. குடும்பம், உறவுகள், நண்பர்கள் அயலவர்கள் என மகிழ்ச்சியான இந்த வாழ்க்கையை, அச்சுறுத்தும் கொரோனா அழித்து விடுமா என்றெல்லாம் நேசன் நினைத்து கவலைப்படுவதுண்டு.



அவ்வாறு நினைக்கும் போதெல்லாம் தனது மனைவியை பாசத்தோடு பார்ப்பான். குழந்தைகள் அருகில் நின்றால், அள்ளி அணைத்து முத்தம் கொடுப்பான். வீட்டில் பத்திரிகை படித்துக் கொண்டிருக்கும் அம்மாவை பாசத்தோடு கவனிப்பான்...

செய்ய வேண்டிய சில வேலைகளை எழுதிக் கொண்டு வந்த சிறு துண்டை சட்டைப் பைக்குளிலிருந்து வெளியே எடுத்துப் பார்த்தான். முதலில் சைனீஸ் கடைக்குச் சென்று பிள்ளைகளுக்கு பழங்கள் மற்றும் நூடில்ஸ் கோழி இறைச்சி ஆகியவற்றை வாங்கிக் கொள்ளலாம் என்ற நினைப்பில் வாகனத்தை எல்ஸ்மெயர் வீதிக்குத் திருப்பினான்.

வாகனத்திலிருந்து இறங்கிபோது உள் கண்ணாடியில் தொங்கிக் கொண்டிருந்த 'மாஸ்க்' நேசனின் மூக்கையும் வாயையும் சேர்த்து மறைத்துக் கொண்டது. சைனீஸ் கடைக்குள் புகுந்து கொள்வதற்கு முன்பாக அங்கு வைக்கப்பட்டிருந்த சுத்தப்படுத்தும் திரவத்தை எடுத்து கைகளில் நன்கு தடவிக் கொண்டான்.

கடைக்குள்ளே அனைவருமே ஒவ்வொரு நிறத்திலும் டிசைனிலும் 'மாஸ்க்' அணிந்த வண்ணம் பொருட்களை எடுத்து 'சொப்பிங் பாஸ்கட்'டில் போட்டுக்கொண்டிருந்தார்கள்.

நேசன் பதினைந்து நிமிடங்களில் தனது 'சொப்பிங்' கை முடித்துக் கொண்டான். மீண்டும் தனது 'நிசானில்' ஏறியபோது பாடசாலைக்கு செல்ல வேண்டும் என்பதை நினைவுபடுத்திக் கொண்டான்.

கடந்த நான்கு மாதங்களாக நேசன் தனது நிறுவன வேலைகளை வீட்டிலிருந்தே செய்கின்றான். மனைவி ஒரு அறையிலும் இவன் ஒரு அறையிலுமாகஅவர்களது வீடு ஒரு அலுவலகமாகவும் பாடசாலையாகவும் மாறியிருந்தது.

உலகின் கழுத்தைப் 'கொரோனா' பிடித்துக் கொண்டது போல மக்கள் நினைத்துக் கொண்டிருந்தாலும் அதற்கு அஞ்சுவதாக இல்லை. அரசாங்கங்கள் விடுக்கும் அறிவித்தல்களை அது அவர்கள் 'கடமை' என்று எண்ணிக்கொண்டு தங்கள் எண்ணப்படி அல்லவா மக்கள் நடந்து கொள்கின்றார்கள். தொடர்ந்து கொண்டிருக்கும் மரணங்கள் வெறும் எண்ணிக்கை என்று எண்;ணுபவர்கள் ஏன் அவற்றை உயிர்கள் என்று மதிப்பதில்லை.

வழமையாக காரில் ஏறியவுடன் உடனேயே 'மாஸ்க்' கை முகத்திலிருநது அகற்றிவிடும் நேசன், இன்று அவ்வாறு செய்யவில்லை.

நேசனுக்கு இன்னும் அரை மணி நேரம் இருந்தது. கொம்பியூட்டரின் முன்னால் அமர்ந்து மீண்டும் தனது அலுவலக வேலையைத் தொடருவதற்காக. எனினும் பாடசாலைக்குச் சென்று அந்தப் பெண்மணியை சுகம் விசாரித்து விட்டுச் செல்வோம் என்ற அந்த முடிவை மாற்ற விரும்பவில்லை.

வழமைபோல, பாடசாலையின் வேலிக்கு வெளியே வீதிக் கரையோரமாக தனது வாகனத்தை நிறுத்திவிட்டு அந்த பெண் நிற்கும் இடத்தை கவனித்தான்.

கையில் சிவப்பு நிற "ஸ்டொப்" என்று அச்சிடப்பட்ட வட்டமான பலகை ஒன்றை கைகளில் வைத்துக்கொண்டு அவள் வீதி ஓரமாக நின்கின்றாள், .சற்று தூரம் நடந்த பின், 'ஹாய் ஹவ் ஆர் யூ? என்று கேட்டவண்ணம் அவளுக்கு அருகில் செல்லாமல் தூரத்தே நின்றான் நேசன்.

" 'ஐ ஏம் குட்' என்று சொல்லிவிட்டு,அவள் சாதாரணமாக நின்றாள்

சில வினாடிகளுக்குள், தான் வழமையாகச் சந்தித்துப் பேசும் ஜெனி அல்ல இவள் என்று சில வினாடிகளுக்குள் நேசன் புரிந்து கொண்டான். அதே நேரத்தில் அவளும், நேசனுக்கு அருகில் சென்று அமைதியாகக் கூறினாள்.

"மன்னிக்க வேண்டும். நீ ஜெனியைத் தான் தேடி வந்துள்ளாய் என்பதை நான் புரிந்து கொண்டேன். அவள் இனிமேல் வரமாட்டாள்."

ஒரு வினாடி மௌனத்திற்குப் பின்னர் தொடர்ந்து பேசினாள்.

"ஜெனி. இரண்டு மாதங்களுக்கு முன்பாக சுகயீனம் காரணமாக இறந்து விட்டாள்.. ஆனாபடியால் தான் நான் வேலை செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது. அவளுக்காக நாங்கள் பிராத்தனை செய்வோம்"

நேசனை அதிர்ச்சியும் கவலையும் ஏமாற்றமும் ஒரே நேரத்தில் வந்து தாக்கின. பேச்சற்றவனாக சில நிமிடங்கள் நின்றான்.ஜெனியின் சிரித்த முகமும் அழகான ஆங்கில உச்சரிப்பும் நேசனுக்கு எப்போது உற்சாகத்தைத் தருவன.

வேறு நாடுகளிலிருந்து வந்து குடியேறிய பெற்றோரையும் அவர்களது பிள்ளைகளையும் அன்பாக சுகம் விசாரித்து மகிழும் பக்குமான பண்பும் கொண்ட பெண் அல்லவா அவள்

'நீங்கள் எல்லாம் உங்கள் நாட்டை விட்டு வந்தது எவ்வளவு நல்ல விடயம் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும். நீங்கள் கவலைப்பட வேண்டாம்.. இந்த நாடு உங்களை நல்லாப் பார்த்துக் கொள்ளும்."

ஜெனி தன்னொடு உரையாடுகின்ற போதெல்லாம் தனது குடும்பத்தையும் உறவினர்களையும், அது மட்டுமல்லாது ஊரில் யார் யார் உறவினர்கள் இருக்கின்றார்கள்? அவர்கள் பாதுகாப்பாக இருக்கின்றார்களா என்று அக்கறையோடு விசாரித்த அந்த நாட்கள் நேசனின் நினைவில் வந்தன.

தனது வீதிப் பாதுகாப்பு பணியைச் செய்து கொண்டிருந்த அந்த புதிய பெண், ஒரிரு மாணவர்கள் வீதியைக் கடந்து செல்ல காத்திருந்தபடியால் அவர்களை நோக்கிச் சென்றாள்

தனது வாகனத்தை நோக்கி நடந்தான் நேசன். அவன் கண்களிலிருந்து நீர் வழிந்தோடியது. தனக்கு நெருக்கமான ஒரு நண்பியை பறிகொடுத்தது போன்று அவனது இதயம் துடித்தது.

வீட்டு வாசலில் வாகனத்தை நிறுத்திவிட்டு கடையில் வாங்கிய சாமான்களை கைகளில் எடுத்தபடி சென்று மெதுவாக கதவைத் திறந்தான்.

வழக்கம் போல சாமான்களை அவனிடமிருந்து பெற்றுச் செல்வதற்காக வாசலுக்கு வந்த மனைவி நேசனின் முகத்தில் தென்பட்ட மாற்றத்தைக் கவனித்து விட்டு அவனிடம் கேட்டாள்.

"என்னப்பா ஒரு மாதிரி இருக்கிறியள்?"
"பள்ளிக் கூடத்தில பிள்ளைகள றோட்டை கடக்கிறதுக்கு துணையாப் போற ஜெனி செத்துத்திட்டாவாம். இப்ப வேறு ஒரு ஆள் வந்திருக்கின்றா"

மீண்டும் அவனை மீறி வழிந்த கண்ணீரை அவனால் நிறுத்த முடியாமலிருந்தது. மனைவியும் பிள்ளைகள் இருவரும் அமைதியாக அவனையே பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

# தனது 'சஜித்' ஆதரவு முடிவை நியாயப்படுத்த சுமந்திரன் எம்.பி.யே தமிழ் மக்களை பழிவாங்கியுள்ளார்.

02 பக்கத் தொடர்ச்சி

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கடந்த ஞாயிற்றுக்கிழமை (செப்டம்பர் 1) வவுனியாவில் கூடியது. சுமார் ஐந்து மணித்தியாலங்கள் கலந்துரையாடி, தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்க போவதில்லை என்ற தீர்மானத்தை திட்டவட்டமாக எடுத்தோம். எமது மக்களையும். தேசியத்தையும் கருத்திற் கொண்டு இந்த துணிச்சலான தீர்மானத்தை எடுத்தோம்.

இந்த தீர்மானம் வாக்கெடுப்பின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மூன்று பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை முழுமையாக ஆராய்ந்து பார்த்ததன் பின்னர் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானம் எடுத்தோம். யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை எமது மக்களுக்கு குறிப்பிடும் பொறுப்பு எமக்கு உண்டு.இவ்வாறான பின்னணியில் தான் இன்று (செப்டம்பர் 3) மூன்றாம் வாசிப்புக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த மாகாண சபைகள் திருத்தச் சட்டமூலம் தடுக்கப்பட்டுள்ளது. இதனையே அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிட வேண்டும். இந்த ஒரு செயற்பாட்டின் ஊடாக தான் யார் என்பதை ஜனாதிபதி மீண்டும் நிரூபித்துள்ளார். வாய் சொல்லால் பல வாக்குறுதிகளை வழங்குவதும், அதை நடத்துவதை போன்று காண்பிப்பதும், இறுதி தருவாயில் வழங்கிய வாக்குறுதியை செயற்படுத்தாமல் இருப்பதும் ரணில் விக்கிரமசிங்கவின் சுபாவம் என்பதை இந்த தருணத்திலும் காண்பித்துள்ளார்.

பிரதான தமிழ் கட்சி தனக்கு ஆதரவு வழங்காமல் இருக்க எடுத்த தீர்மானத்தால் தமிழ் மக்களை தண்டிக்க வேண்டும் என்பதற்காக அரைகுறை தீர்வாகவுள்ள மாகாண சபை தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு மிக மோசமான நடவடிக்கையில் ரணில் விக்கிரமசிங்க இறங்கியுள்ளார்.ஜனாதிபதியின் இந்த செயற்பாடு நாங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை எடுத்த தீர்மானம் சரி என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த செயலால் ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்கள் முன்னாலும் நாட்டு மக்கள் முன்னாலும் இனவாதியாக காட்டப்படுவார். நான் செய்ய இருந்த விடயம் என்றும் அதற்கு அனுமதி வழங்குவதாகவும் கூறிவிட்டு கடைசி நேரத்தில் எங்கள் மீது காட்டும் வெறுப்பாகவே நாங்கள் இதனை பார்க்கின்றோம். நாட்டில் மிக மோசமான இனவாதியாக ஜனாதிபதி செயற்படுகின்றார் என்பதற்கான வெளிப்பாடே இது. தமிழ் மக்கள் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். ராஜபக்ஷக்களுடன் கூட்டு சேர்ந்து மாகாண சபைகள் தேர்தல் நடத்தப்படக் கூடாது என்று ஜனாதிபதி தடுக்கும் இனவாத செயற்பாடாகவே இதனை நாங்கள் பார்க்க வேண்டும் "என்று கூறியிருந்தார்.

மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூல தனது தனிநபர் பிரேரணையை நிறைவேற்றவிடாது தடுத்து தமிழ் மக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பழிவாங்கிவிட்டார் .அவர் ஒரு மோசமான இனவாதி என சுமந்திரன் குற்றம்சாட்டுகின்றார்.ஆனால் மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூல தனது தனிநபர் பிரேரணையை செப்டம்பர் 3 ஆம் திகதி ஒழுங்குப்பத்திரத்தில் உள்வாங்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்து அதனை சுமந்திரனுக்கும் தெரிவித்திருந்த நிலையில் அவசரம் அவசரமாக செப்டம்பர் 1 ஆம்திகதியே கட்சியின் தலைவருக்கு கூட தெரியாமல் இலங்கை தமிழரசுக்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கின்றதென சுமந்திரன் அறிவித்ததன் பின்னணி என்ன?

தேர்தலுக்கு முதல் நாள் நாம் எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவென அறிவித்தாலும் தமிழ் மக்கள் அவருக்கு வாக்களிப்பார்கள் எனத் தெரிவித்திருந்த சுமந்திரன் எம்.பி, இரு நாட்களுக்குள் தனது தனிநபர் பிரேரணை பாராளுமன்றத்தில் எடுக்கப்படவிருந்தது தெரிந்தும் 20 நாட்களுக்கு முன்னரே ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கின்றோம் என அறிவித்தது ஏன் ?

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை தமிழரசுக்கட்சி ஆதரிப்பதன் எதிர்வினையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு வெளிப்படுத்துவார் என்பது சுமந்திரன் எம்.பி.க்கு நன்கு தெரிந்தே தனது தனிநபர் பிரேரணை பாராளுமன்றத்திற்கு வருவதற்கு இரு நாள் முன்பு சஜித் ஆதரவை அறிவித்து ரணில் விக்கிரமசிங்கவை சூடாக்கி அதன்மூலம் தனது தனிநபர் பிரேரணையை தானே தடுக்க வைத்து ரணில்விக்கிரமசிங்க தமிழ் மக்களை பழிவாங்கி விட்டார். அவர் ஒரு மோசமான இனவாதி என்ற பிரசாரத்தை சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவாக தொடங்கியுள்ளார்.

சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவளிகும் இலங்கை தமிழரசுக்கட்சியின் நிலைப்பாட்டை ஒரு சில தினங்கள் தாமதித்து அறிவித்திருந்தால் ஒன்றும் குடிமுழுகிப்போய்விடாது. ஆனால் சுமந்திரன் நன்கு திட்டமிட்டே தனது தனி நபர் பிரேரணை பாராளுமன்றத்திற்கு வருவதற்கு இரு நாட்கள் முன்னர் தமிழரசுக்கட்சியின் சஜித் ஆதரவு முடிவை அறிவித்துள்ளார். கட்சியில் உள்ள சிலர் கூட இந்த முடிவை முதலில் அறிவிப்பதனால் உங்களின் தனிநபர் பிரேரணைக்கு ஆபத்து வரலாம் என சுட்டிக்காட்டியதாக கட்சியின் உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

ஆகவே சஜித்துக்கு ஆதரவளிப்பதற்கான ஒரு காரணத்தை உருவாக்கவும் ரணிலை எதிர்ப்பதற்கான தனது முடிவை நியாயப்படுத்தவுமே சுமந்திரன் எம்.பி. தனது தனிநபர் பிரேரணைக்கு எதிராக தானே குழிபறித்து ரணில் விக்கிரமசிங்க தமிழர்களை பழிவாங்கிவிட்டார் எனக்கூறி தமிழ் மக்களை முட்டாள்களாக்கப் பார்க்கின்றார் .பிரதான தமிழ் கட்சி தனக்கு ஆதரவு வழங்காமல் இருக்க எடுத்த தீர்மானத்தால் தமிழ் மக்களை தண்டிக்க வேண்டும் என்பதற்காக அரைகுறை தீர்வாகவுள்ள மாகாண தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு மிக மோசமான நடவடிக்கையில் ரணில் விக்கிரமசிங்க இறங்கியுள்ளார்.ஜனாதிபதியின் இந்த செயற்பாடு நாங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை எடுத்த தீர்மானம் சரி என்பதை உறுதிப்படுத்தியுள்ளது என்று தமது தமிழர் விரோத முடிவையும் நியாயப்படுத்த முயற்சிக்கின்றார்.

ஆகவே, தனது மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூல தனிநபர் பிரேரணை செப்டம்பர் 3 ஆம் திகதி மூன்றாம் வாசிப்புக்கு எடுத்துக் கொள்ளப்படாமைக்கு சுமந்திரன் எம்.பி.யே காரணம். தனது சஜித் பிரேமதாச ஆதரவுக்காக தமிழ் மக்களை பழிவாங்கியவர் ரணில் விக்கிரசிங்கவல்ல. தனது சஜித் ஆதரவு முடிவை நியாயப்படுத்த சுமந்திரன் எம்.பி.யே தமிழ் மக்களை பழிவாங்கியுள்ளார்.

# சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி மாதங்கியின் கின்னஸ் உலக சாதனை

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் க.பொ.த சாதாரண தரம் பயிலும் மாணவியான மாதங்கி கனகசுந்தரம் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

வேகமாக அதிக எண்ணிக்கையான பாதணிகளை அடுக்குதல் என்னும் தலைப்பின் கீழான போட்டியிலேயே இந்த சாதனையை படைத்துள்ளார்.



இணையத்தளம் ஊடாக விண்ணப்பித்து 10 பாதணிகளை ஒன்றன்மேல் ஒன்றாக 59 செக்கன்களில் அடுக்கி முடித்தே குறித்த சாதனையை புரிந்துள்ளார்.

கடந்த மே மாதம் 20 திகதி கொடிகாமத்தில் தனது வீட்டில் இரு சாட்சிகள் முன்னிலையில் கின்னஸ் உலக சாதனை சட்டதிட்டங்களுக்கு அமைவாக குறித்த சாதனை நிகழ்வு காணொளியாக பதிவு செய்யப்பட்டு இணையத்தினுடாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

மூன்று மாதங்களின் பின் றழசடன பரைநெளள யளளநளளஅநவெ உழஅஅவைவந மூலம் இதன் உண்மைத்தன்மை ஆராயப்பட்டு 28ஃ8ஃ2024 அன்று நிகழ்வு கின்னஸ் சாதனையாக அங்கீகரிக்கப்பட்டு அதற்கான சான்றிதழ் குறித்த மாணவிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த கின்னஸ் சாதனைக்கான விண்ணப்பம் முதல் அனைத்து விடயங்களையும் குறித்த மாணவியே தனது சுய முயற்சியில் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை கின்னஸ் சாதனை படைத்த மாணவியை அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரடியாக அழைத்து சாதனை சான்றிதழைப் பார்வையிட்டு பாராட்டியிருந்தார்.



# பத்து ஆண்டுகளுக்கு முன்னர் விண்ணுலகை அடைந்திட்டாலும் இன்றும் பக்கத்தில் அமர்ந்திருப்பது போன்ற உணர்வோடு...

த.சிவபாலு

## 'அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் பற்றியது

ஆதிபர் மறைந்து பத்து ஆண்டுகள் மறைந்தோடிவிட்டனஎன்பதைநம்பமுடியளாதுள்ளது. அவரின் நினைவாக நண்பர்களால் நாட்டப்பட்ட பெருமரக் கன்றொன்று இன்று வளர்ந்து அவரதுநினைவை நிழலாக்குகின்றது. அவரின் நினைவாக ஏதாவது செய்யவேண்டும் என்பதை ஆவரோடு நெருங்கிப்பழகியவர்களுள் ஒருவரான பொறியியலாளர் குமார் புனிதவேல் முன்மொழிந்தார். கதிர்துரைசிங்கம் வழிமொழிந்தார் ஒப்பேற்ற கவிநாயகர் வி.கந்தவனம், முனைவர் சிவகடாட்சம், சிவா சின்னையா, த.சிவபாலு, ஆகியோர் சேர்ந்து ஸ்காபுறோ மல்வேர்ண் நூல்நிலையக் வளாகத்தில் மரக்கன்றை 2016ல் நட்டுவைத்தோம். அதனடியில் அதற்கு அண்மையாக 2016ல் மகாஜனக் கல்லூரியினர் ஒரு இருக்கைக்கான வாங்கு ஒன்றை அமைத்துள்ளனர். வருடா வருடம் நாங்கள் அந்த மரத்தடியில் கூடி நின்று அஞ்சலி செலுத்துவது வழக்கமாகக் கொண்டுள்ளோம். அதில் அவரது பிள்ளைகளும் கலந்துகொள்ளுவர். இது அவரை நினைவிருத்த மேற்கொள்ளப்படும் ஒரு நினைவிடமாகவே கருதப்படுகின்றது.



நல் ஆலோசகனாய், நண்பனாய், தந்தையாய், சகோதரனாய், உற்ற நற்தோழனாய் கனடாவில் கால்பதித்தநாள்முதலாய் எக்கு மட்டுமல் பழகியோர் அனைவருக்கும் மேலாக மகாஜன மாணாக்கர்களுக்கும் ஆசிரியர் குழாத்துக்குமே என்றென்றும் அதிபராய் வாய்ந்தவர் மறைந்தும் மறையாத மேதை அதிபர் பொ.கனகசபாபதி அவர்கள். இறுதி நாட்களை இன்றுந்தான் மறக்கமுடியவில்லை. அவருக்கு இருந்த குருதி மாற்றவேண்டிய நோய்க்காக மருத்துவமனைக்குச் செல்வதை வழக்கமாக் கொண்டிருந்தார். அவரோடு உடனிருந்த பெண்பிள்ளைகள் இருவரும் அவுஸ்திரேலிய திரும்பும் வழியில் பெரியபிரித்தானியாவில் நிற்கின்றார்கள் என்பதை அறியமுடிந்தது. மூத்த மகன் அப்புவும் மருகள் தர்சினியும் அடிக்கடி உணவு கொண்டுவந்து கொடுத்துச் செல்வார்கள். அன்றும் உணவோடு வந்த தர்சினிக்கு கதிரையில் இருந்தபடியே தூங்கிக்கொண்டிருந்த காட்சிதான் முதலில் கண்ணில் பட்டது. எழுப்பியபோது அவரை அசைக்கமுடியவில்லை. அவசர வைத்தியப்பிரிவினர் வந்து அவர் உயிர் பிரிந்துவிட்டது என்பதனை அறிந்து பரிதவித்தார்.

பொ.கனகசபாபதி அவர்கள் கனடிய மண்ணில் வாழுகின்ற நம்மவர்களில் முதலில் வைத்து எண்ணப்படும் ஒருவர். நல்லவற்றை நினைத்தல் வேண்டும், நல்லவற்றை செய்தல்வேண்டும், நல்லவையே நடத்தல் வேண்டும் என நினைந்து செயற்படும் ஒரு பண்பாளர். மகாஜனக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி ஆகியவற்றின் அதிபராகப் பணியாற்றியவர். உயிரியல் கற்பிப்பதில் அவருக்கு நிகர் அவரே எனப் பலராலும் புகழப்பட்ட தனது கற்பித்தல் திறனால் மாணவர்களை நெறிப்படுத்தி வழிப்படுத்திப் பல்கலைக் கழகம் புகுவதற்குக் காரணராகத் திகழ்ந்தவர். சண்டிலிப்பாய்க் குக்கிராமத்தில் 1935 செப்டம்பர் 4ந்திகதி பொன்னையா, ஆச்சிமுத்துத் தம்பதியினர் பெற்றெடுத்த பிள்ளைகள் ஐவரில் இளைய மகனாகப் பிறந்த அவருக்கு இரு ஆண்சகோதரர்களும் இரண்டு பெண்சகோதரிகளும் இருந்தனர். மூத்த சகோதரரின் வீடு சண்டிலிப்பாயில் உள்ள மாகியப்பிட்டியில் எனது மனைவியின் தாய்மாமன் ஆயர்வேத வைத்தியர் நமசிவாயம் அவர்களின் வீட்டிற்கு அண்மையாக உள்ளது. முருகேசு ஆசிரியர் என்றால் எல்லோருக்கும் தெரியும். கனெக்ஸ் இந்தியா சென்று படிப்பதற்கு வழிவகுத்தவர் அவரே என அதிபர் பலதடவைகள் என்னிடம் கூறியுள்ளார். அதிபரின் தந்தையார் மூத்த மனைவி இறந்தபின்னர் இரண்டாவது திருமணம் செய்துகொண்டவர். அதிபர் இரண்டாவது மனைவியின் மகன். ஆனால் அண்ணன் முருகேசு அவர்கள் தம்பி மீது அலாதியான பிரியம் உடையவர். அவரின் உயர்வுக்கு அயராது உழைத்தவர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கற்கும் காலத்தில் அங்கு அதிபராயிருந்த ஒறேற்றர் சுப்பிரமணியத்தின் எளிமை, கண்டிப்பு, நிருவாகத்திறமை என்பனவற்றால் பெரிதும் கவரப்பட்டவர். உயர்கல்விக்காக தமிழ்நாடு சென்று கிறிஸ்தவக் கல்லூரியில் உயிரியலைச் சிறப்புப்பாடமாகக் கற்று உயர்விருதினையும் தனதாக்கிக்கொண்டவர்.

அன்பு நிறைந்த ஆசானாகவும், கண்டிப்பு நிறைந்த அதிபராகவும் அவர் பணியாற்றியமையால் அவர் அனைவராலும் நன்கு மதிக்கப்படும் ஒரு வழிகாட்டியாக, நல்லதோர் எடுத்துக்காட்டாக, மானுடம்போற்றும் மகானாக வகுப்பறைகளில் மட்டுமன்றி வாழ்க்கை முழுமையும் பவனிவந்துள்ளார். தாரமும் குருவும் தலைவிதிப்படி என்பார்கள். எனவே குருவாக அமைய மாணவர்கள் கொடுத்து வைத்திருக்கவேண்டும். மகாஜனக் கல்லூரி தனது வாழ்வின் பொற்காலம் என்று அவர் பலதடவைகள் குறிப்பிட்டுள்ளமையை அவரோடு நெருங்கிப் பழகுபவர்களுக்கு நன்கு தெரியும். இருப்பினும் அவர் அதிபராக இருந்து வளர்த்த ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரியையும் அவர் தன் இரு கண்களாகவே கருதிவந்துள்ளார். ஏழாலை மகாவித்தியாலயத்திற்கு அதிபராக அனுப்பப்பட்ட அவர் அங்கிருந்து பட்டப் பின்படிப்பிற்காகப் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்றார். ஓரிருமாதங்கள் அங்கு பணியாற்றியவர் கற்கை விடுமுறையில் சென்றமையால் அங்கு அவர் பணி நீடிக்கவில்லை. இதன்பின்னர் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் ஒருநாள் அதிபராக இருந்தும் உள்ளார்.

பல்கலைக் கழகக் கல்வியை இந்தியாவில் முடித்துக் கொண்டு நாடுதிரும்பிய அவர் ஆசிரியத்தொழில் தேடி தான் கற்ற ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்குச் சென்று ஒறேற்றர் சுப்பிரமணியத்தை நாடினார். அங்கு இடம் இல்லாமையால் ஒறேற்றர் அவரை அழைத்துக்கொண்டு மகாஜனாவிற்குச் சென்று அங்கு அதிபராக விருந்த ஜெயரட்ணம் அவர்களிடம் இந்தப் பொடியன் கெட்டிக்காரன் உனது பாடசாலையில் இடம்கொடு என்று கேட்டுக்கொண்டதனால் அவருக்கு அங்கு இடம்கிடைத்தது. மகாஜனவிலேயே தனது கற்பித்தலைத் தொடங்கினார். பின்னர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு வரும்படி அதிபர் சுப்பிரமணியம்கேட்டபோதுமகாஜனா அவரை அனுப்ப மறுத்துவிட்டது. அவ்வளவிற்கு மாணவர்களையும் அதிபர், ஆசிரியர்களையும் கவர்ந்திழுத்த கற்பித்தல் ரகசியம் மட்டுமல்ல மற்றவர்களைக் கவரும் வசீகரமும் அவரிடம் குடிகொண்டிருந்ததே காரணம் எனலாம். பயிலும் மாணவர்களையும், தனது தொழிலையும் நன்கு நேசித்தவர் அவர். அந்த நேசிப்பும் அர்ப்பணிப்பு மனமும் அவருக்கு மாணவர் மனம்பற்றிச் சிந்திக்கத் தூண்டியதில் வியப்பில்லை. அது மட்டுமன்றி மாணவப் பராயத்து மனதைத் தூண்ட அவரது உயிரியல் விஞ்ஞான அறிவும், மாணவர்களுடன் ஊடாடிய பட்டறிவும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பெற்றுக்கொண்ட உளவியல் அறிவும், கற்றல், கற்பித்தல் பற்றிய நோக்கும் அவருக்குத் துணைநின்றுள்ளன. இவற்றிற்கு மேலாக அவர் பல்துறை வித்தகராகத் திகழ்வதற்கு கண்டதும் திண்டு பன்றிபோலாகாது கண்டதும் கற்று பண்டிதராக அவர் தன்னை மிக அடக்கத்தோடு வளர்த்துக் கொண்டுள்ளார். கனடிய மண்ணில் அவரை ஒரு நடமாடும் நூலகம் என்றே குறிப்பிடத்தக்க அறிவுப் பெட்டகமாகத் திகழ்கின்றார். எவற்றையும் அறிவுபூர்வமாக நோக்கும் மனப்போக்கும், சரி எனப்பட்டதை ஆணித்தரமாக எடுத்துரைக்கும் மனவைராக்கியமும் அவரிடம் உண்டு. நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என இடித்துரைக்கும் நேர்மைத்தனமும் அவரை உயர்த்தி வைத்திருக்கும் பாங்குகள். அவர் ஒரு சாமானியனாக அன்றி மாணவர்களின் உள்ளங்களில் புகுந்து அவற்றைக் கல்லி (தோண்டி) எடுப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்தமையே அவரது கற்பித்தல் வெற்றிக்கு வழிவகுத்தது.




கல்வி எடுப்பது அறிவின் ஊற்று. அந்த அறிவூற்றை மாணவர்களிடையே பெருக்கெடுக்க வைத்தவர். அதற்காக என்னென்ன உத்திகளைக் கையாளமுடியுமோ அவற்றைக் கையாண்டு மாணவர்களுக்கு இலகுவாக தான் கொடுக்கவேண்டியவற்றை புரிய வைத்து வெற்றி கண்டவர். இதனை அவரது மாணவர்களே பெருமையுடன் கூறி அவரின் இழப்பைத் தாங்கொண்ணாது கேவிக் கேவி அழுததைக் கண்டுள்ளேன். மனித உள்ளுறுப்புக்களை வண்ணச் சோக்குக்கட்டிகளால் மிக நேர்த்தியாக வரைந்து விளக்கமளிப்பது அவரது கைவந்து கலை. அன்று விளக்கப்படங்களே ஆசிரியர்களுக்குக் கைகொடுத்தன். அதனை உயிரியல் விஞ்ஞானத்தில் கையாண்டுள்ளமைமாணவர்களைபல்கலைக்கழகம் நோக்கி நகர்தியது மட்டுமல்ல மருத்துவத்துறையை அவரது மாணாக்கர் அக்கிரமித்துக்கொள்ளவும் வழிவகுத்தது. இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் மகாஜனக்கல்லூரியை நாடி மாணவர்கள் வரவைப்பதற்கு இவ்வித கற்பித்தல் உத்திகளோடு உதைபந்தாட்டம், கரபந்து, துடுப்பாட்டம் போன்றவற்றிலும் முன்னணி வகுத்து வந்தமை அகில இலங்கை மட்டத்தல் பேரும் புகழும் நிலவக்காரணமாகியது.


அடுத்த மாதம் தொடரும்.....

# உணவே மருந்து
## வாழ்வில் இயற்க்கையும் உணவையும் தேடி ஒரு பயணம்

பஞ்சபூத மருத்துவம் இதை ஒரு நலம் விரும்பி குழுவில் பகிர்ந்து இருந்தார். மக்களுக்கு நல்லன என்பதை யார் சொன்னால் என்ன. உலக மக்களுக்கு ஆரோக்கிய விஷயத்தில் நன்மை நடந்தால் நல்லது. ஆகையால் அந்த நபர் அனுப்பியதை இங்கு பகிர்ந்துள்ளேன். இதை பகிர்ந்த அந்த நல்ல உள்ளத்திற்க்கு பல கோடி நன்றிகள். அவர் பெயர் தெரிந்து இருந்தால் இந்நூலில் பகிர்ந்து இருப்பேன். இதில் உள்ள அத்தனை கருத்துகளும் உண்மை.

1.நுரையீரல்,,,காற்று
2.கல்லீரல்,,,,,விண்
3.மண்ணீரல்,,,நிலம்
4.இருதயம்,,,, நெருப்பு
5.சிறுநீரகம்,,,நீர்
இந்த ராஜ உறுப்புகள் ஆற்றலை உள் இழுக்கும்

1.நுரையீரல் ஜோடி உறுப்பு,,,, பெருங்குடல்
2.கல்லீரல் ஜோடி உருப்பு,,,பித்தப்பை
3.மண்ணீரல் ஜோடி உறுப்பு,,,,இரைப்பை
4.இருதயம் ஜோடி உறுப்பு,,,,சிறுகுடல்
5.சிறுநீரகம் ஜோடி உறுப்பு,,,,யூரினரி பிளாடர்






ராஜ உறுப்புகளின் ஜோடி உறுப்புகள் கழிவுகளை வெளியேற்றும்.

1.கல்லீரல் பாதிப்பை தெரிவிக்கக் கூடிய உருப்பு -கண்.
2 மண்ணீரல் பாதிப்பை தெரிவிக்கக் கூடிய உருப்பு -வாய்.
3.நுரையீரல் பாதிப்பை தெரிவிக்கக் கூடிய உருப்பு -மூக்கு.
4.இருதயம் பாதிப்பு தெரிவிக்கக் கூடிய உருப்பு -நாக்கு.
5.சிறுநீரகம் பாதிப்பை தெரிவிக்கக் கூடிய உருப்பு -காது.

1.கல்லீரல் பாதிப்பு அடைந்திருந்தால் அவருக்கு (புளிப்பு) சுவை பிடிக்கும்.
2.மண்ணீரல் பாதிப்பு அடைந்திருந்தால் அவருக்கு (இனிப்பு) சுவை பிடிக்கும்.
3.நுரையீரல் பாதிப்பு அடைந்திருந்தால் அவருக்கு (கார சுவை) பிடிக்கும்.
4இருதயம் பாதிப்பு அடைந்திருந்தால் அவருக்கு (துவர்ப்பு) கசப்பு சுவை பிடிக்கும்.
5.சிறுநீரகம் பாதிப்பு அடைந்திருந்தால் அவருக்கு (உப்பு) சுவை பிடிக்கும்.

அறுசுவையும் சமநிலையில் இருந்தால் ராஜ உறுப்புகள் சீராக இயங்கும். பற்றாக்குறையாக இருந்தாலும் இந்த ராஜ உறுப்புகள் நோயை உண்டாக்கும்.

1.கல்லீரலை பாதிக்கக்கூடிய உணர்வுகள் (கோபம் டென்ஷன்)
2.மண்ணீரலை பாதிக்கக் கூடிய உணர்வு (கவலை). இந்த கவலைப்படுபவர்கள் பசி இல்லாமல் இருக்கும்போது சாப்பிடுவார்கள்.
3.நுரையீரலை பாதிக்கக் கூடிய உணர்வு (துக்கம்). வாழ்க்கையில் நடந்த எந்தவித செயலையும் துக்கத்தையும் கவலையும் வெளியே சொல்லாமல் தனக்குள்ளே வைத்து புலம்பி கொள்வார்.
4.சிறுநீரகத்தை பாதிக்க கூடிய உணர்வு (பயம்).
5.இருதயத்தை பாதிக்க கூடிய உணர்வு (பெருமை) (பொறாமை )




## சிறுதானிய வகை

இருதயத்திலிருந்து ஆற்றல் மண்ணீரலுக்கு செல்லும். மண்ணீரலிருந்து ஆற்றல் நுரையீரலுக்கு செல்லும். நுரையீரலிலிருந்து ஆற்றல் சிறுநீரகத்திற்கு செல்லும். சிறுநீரகத்திலிருந்து ஆற்றல் கல்லீரலுக்கு செல்லும். கல்லீரலிலிருந்து ஆற்றல் இருதயத்திற்கு செல்லும்.

நோய் தோன்றுவது மனதில், அது தேங்குவது உயிர் ஆற்றலில்,
அங்கிருந்து தான் உறுப்புகளுக்கு வெளியாகிறது மனம்உயிர் உடல் என சரி செய்வது தான் பஞ்சபூத மருத்துவம். மனதை சரி செய்தால் உயிர் சரியாகும். உயிர் சரியானால் உறுப்புகள் சரியாகும் என்பது (ஹோமியோபதி) மருத்துவம்

உயிரையும் மனதையும் விட்டு விட்டு உடலில் உள்ள உறுப்புகளுக்கு மற்றும் வைத்தியம் செய்வது ஆங்கில மருத்துவம் இதனால் பயனில்லை. மருத்துவம் என்பது மனதை சரி செய்து அதன் மூலம் உயிரை சரி செய்து அதன் மூலம் உடலில் உள்ள உறுப்புகளை சரி செய்வதால் நோய் குணமாவது தான் மருத்துவம்.

மெல்ல அழிந்த இயற்கை உணவுகள்..!

ஆப்பிள் இன்று இந்திய சந்தையினை வியாபித்து நின்றாலும், சில ஆலயங்களின் பிரசாதம் என்ற அளவுக்கு வந்துவிட்டாலும் அப்பழம் உடலுக்கு நல்லதா என்றால் இல்லை.. இறைவன் சில விஷயங்களை மிக அழகாகச் செய்திருக்கின்றான்..குளிர் பிரதேசத்தில் சக்தி கொடுக்கும் காய்கனிகள், பாலை நிலத்தில் வெப்ப நிலத்தில் சக்தி கொடுப்பவை என அந்தந்தப் சூழலுக்கு ஏற்ப படைத்திருக் கின்றான்..

தமிழ்நாட்டு பனை கொடுக்கும் பதநீர் அப்படியானது, அது உடலுக்குக் குளிர்ச்சி. இங்கு விளையும் அரிசி முதல் பயிறு வரை உடலுக்கு ஏற்றது.. அரேபிய பேரீச்சம்பழம் அந்த சூழலுக்கு ஏற்றது.. ஒட்டகங்கள் அங்கு தாக்குபிடிக்கப் படைக்கபட்டிருப்பது போல அங்குவாழும் மனிதருக்கானது அந்தக் கனி. ஆப்பிள் உடலுக்கு சூடு கொடுக்கும் பழம், குளிர் பிரதேசத்தில் அது விளையும் குளிர்பிரதேச மக்களுக்கான பழம் அது.. மா, பலா ,வாழை என தனக்குச் சரியான பழத்தை இப்பூமி இங்கு விளைவித்தது.. இங்கு ஆங்கிலேயர்கள் வரும்வரை எல்லாம் சரியாக இருந்தது... சூடான பூமியில் மேலும் சூடேற்றி உஷ்ண கோளாறை உருவாக்கும் பழமோ உணவோ இங்கு இல்லை. ஆங்கிலேயர்கள் மிளகைத் தேடித்தான் வந்தான்...வந்தவன் மிளகை வாங்கிவிட்டு சத்தற்றதும் நற்காரம் இல்லாததுமான மிளகாய் வற்றலை விட்டுவிட்டுச் சென்றான்... அது வெளிநாட்டில் இருந்து இங்கு இறக்குமதி செய்து வந்தது..

தக்காளியும் உருளையும் அப்படி வந்தது... புகையிலையும் அப்படி வந்ததே. இங்கு காரத்துக்கு நல்லமிளகு பயன்படுத்தும் முறையே இருந்தது. உண்டபின் வெற்றிலையோடு மிளகும் பாக்கும் சுண்ணாம்பும் ஏலமும் வைத்தே தாம்பூலம் தரிக்கும் பழக்கம் இருந்தது. சமையலுக்கு வற்றலைக் கொடுத்தான்,
வெற்றிலைக்குப் பாக்கைக் கொடுத்தான், மிளகை அவன் கொண்டு சென்றான். கருப்பட்டியும் வெல்லமும் இங்கு இனிப்புக்கான பொருளாய் இருந்தன, அதில் சீனியினைத் திணித்தான் , கருப்பட்டி சந்தை மெல்ல சுருங்கியது.




கள் இருந்த இடத்தை தன் நாட்டு ஒயினாலும் இன்னும் எதெல்லாமோ கொண்டு நிரப்பினான். தேங்காய் இருந்த இடத்தை எதுவெல்லாமோ பிடித்தது, தேங்காய் கொடுக்கும் ஆரோக்கியம் கொஞ்ச நஞ்சமல்ல மிளகு, அரிசி, கருப்பட்டி, பாரம்பரிய ரக நெற் பயிர்கள் என்றிருந்த தமிழர் உணவில் புகையிலை, சீனி, மிளகாய் என எதையெல்லாமோ திணித்தான் நோய்கள் பெருகின.. ஆப்பிளை அப்படித்தான் இங்கு பயிரிட்டான்...
ஆப்பிளை மட்டுமா கொணர்ந்தான்? கேரட் , பீட்ரூட் இன்னும் குளிரில் விளையும் பல பயிர்களைக் கொணர்ந்தான், அது அவனுக்குச் சரி.. ஏற்கெனவே உஷ்ணத்தில் வாழும் மக்களுக்கு இவை ஏன்? அவை கூடுதல் உஷ்ணத்தை ஏற்றின.. அத்தோடு விட்டானா? அவன் ஏற்படுத்திய உலகப்போர்கள் (அரிசி)த் தட்டுப்பாட்டை உருவாக்கின. விளைவு..?

ஹெல்த் டிப்ஸ் by



ஜோ.பா. ராஜஸ்ரீ.

அடுத்த மாதம் தொடரும்.....

# தமிழ்த் தேசிய இனத்தின் இருப்புக்காக தமிழ் பொதுவேட்பாளர் பா. அரியநேத்திரனுக்கு வாக்களிப்போம்!

இலங்கைத்தீவில் சிறிலங்காவின் அரசுத் தலைவர் தேர்தலை மையப்படுத்தி, தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பினால் களமிறக்கப்பட்டுள்ள தமிழ்பொதுவேட்பாளருக்கான தோழமையுடன் கூடிய ஆதரவினை புலம்பெயர் கனடா வாழ் தமிழ்த் தேசிய செயல்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றோம்.

முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான காலத்தில் நமது செயற்பாடுகள் அனைத்துமே, தமிழ் மக்களுக்கான நீதி என்பதை இலக்காகக் கொண்டே இருந்தது. பாதிக்கப்பட்ட ஒரு இனத்திற்கான நீதியிலிருந்துதான் அந்த இனம்
மீண்டு எழ முடியும் என்னும் அடிப்படையே நம் அனைவரையும் வழிடத்தியது.

ஒரு இனமாக எங்களால் முடிந்த அனைத்தையும் நாங்கள் செய்திருக்கின்றோம். ஆனாலும் நாம் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. நாம் இன்னும் அதிகமாகவும் கடினமாகவும் உழைக்க வேண்டியிருக்கின்றது. ஆனால் நாம் நமக்குள் தொடர்ந்தும் சிதறிக் கொண்டிருக்கின்றோம். ஒற்றுமையை வலியுறுத்தி வருகின்றோம். ஆனால் எங்களால் ஒன்றுபட்டு செயலாற்ற முடியவில்லை. ஒற்றுமை எப்போதும் எமக்குள் ஒரு ஏக்கமாகவே இருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் தாயகத்தில் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பு உருவாகியிருக்கின்றது. ஒப்பீட்டடிப்படையில் அதிகளவான சிவில் சமூக அமைப்புக்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், பல்கலைக்கழக மாணவர் சமூகம், அநேகமான தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் அனைத்தும் ஓரணியாக ஒன்று பட்டிருக்கின்றனர். அதன் அடையாளமாக, வரலாற்றில் முதல் முறையாக தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்பட்டிருக்கின்றார்.

கட்சிகளாகவும், குழுக்களாகவும், கட்சிகளுக்குள் அணிகளாகவும் பிளவுற்றிருக்கும் தமிழ்த் தேசிய அரசியல் சூழலில், தமிழ்ப் பொது வேட்பாளர் என்னும் அடையாளம் நம் அனைவரையும் ஒன்றுபடுத்தியிருக்கின்றது.




கடந்த பதினைந்து வருடகால தமிழ்த் தேசிய அரசியல் சூழலில், நாம் அதிகம் ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கான களத்தை தமிழ் பொது வேட்பாளர் சாத்தியப்படுத்தியிருக்கின்றார். இதனை பற்றுதியுடன் பற்றி பிடிப்பதன் மூலமாக மட்டுமே நாம் நமக்கா செயற்படவும் சர்வதேச சமூகத்தை நம்மை நோக்கித் திருப்பவும் இயலும்.

ஒரு இனப்படுகொலைக்கு ஆளான மக்கள் கூட்டமானது, தனக்கான நீதியை கோரும் உரித்துடையது. அதற்கான பொருத்தமான பொறிமுறைகளை கோரும் உரித்தும் அந்த மக்கள் கூட்டத்திற்குண்டு.

பொருத்தமா தீர்வு பொறிமுறை என்பது இனஅழிப்புக்கு உள்ளன தமிழினம் தாம் விரும்பும் தீர்வை தாமே தீர்மானிக்கும் பொதுவாக்கெடுப்பாகும்.

தமிழ்ப் பொது வேட்பாளருக்கான, தமிழ் தேசியப் பொதுக்கட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் இந்த விடயங்கள் அனைத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. இலங்கைத் தீவில் இடம்பெறுகின்ற ஒரு ஜனாதிபதித் தேர்தலில் இவ்வாறானதொரு தேர்தல் விஞ்ஞாபனம் முன்வைக்கபட்டிருப்பது இதுதான் முதல் தடவை. இந்த விடயங்கள் தாயகத்திலுள்ள கட்சிகள் மத்தியிலிருந்து ஆணித்தரமாக முன்வைக்கப்பட வேண்டுமென்றே நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக்கின்றோம். அப்போதுதான் களமும் புலமும் இணைந்து, ஒரு புள்ளியில் பணியாற்ற முடியுமென்றும் வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

அது தற்போது சாத்தியப்பட்டிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில், தமிழர் தாயகப் பகுதியில் தமிழ் பொது வேட்பாளரை நோக்கி நமது மக்களை அணிதிரட்ட வேண்டிய கடப்பாடு புலம்பெயர் சமூகமாகிய எங்களுக்குமுண்டு. அதற்காக நாம் அனைவரும் ஒன்றுபட்டு பணியாற்ற வேண்டியிருக்கின்றது. நாம் ஒன்றுபட்டு, ஒரே குடையின் கீழ் பணியாற்றுவதற்காக காலம் நமக்கு தந்திருக்கும் அரிய சந்தர்ப்பமாகவே இதனை நான் பார்க்கின்றேன். இந்த சந்தர்ப்பத்தை நாம் அனைவரும் ஓரணியாக பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதே எனது பணிவான வேண்டுகோளாகும்.

போரின் வடுக்களை சுமந்தவாறு நமது தலைமுறை ஒன்று அன்னிய தேசங்கள் எங்கும் சிதறிக் கிடக்கின்றது. சிதறிக்கிடக்கும் நாம் ஒரு அரசியல் சக்தியானால் நமது குரலை உலகம் கேட்டேயாக வேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்த முடியும்.

நாசிகளின் கொடுமைகளால் உலகெங்கும் சிதறிய யூதஇனம் கனவுகளை சேமித்துக் கொண்டு தனக்கான வாய்ப்புக்களுக்காக செயலாற்றியது. இன்று நிமிர்ந்து எழுந்திருக்கின்றது. இது நம்மாலும் முடியும் - ஆனால் அதற்காக நெடுந்தூரம் நாம் பணியாற்ற வேண்டும். கிடைக்கும் ஒவ்வொரு
சந்தர்ப்பங்களையும் உச்சபட்சமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நமது ஒவ்வொரு செயற்பாடுகளினதும் சரி பிழைகளை பரீசீலித்து முன்னோக்கிச் செயற்படுவதற்கான வலுவான கட்டமைப்புக்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். நமது கட்டமைப்புக்களுடன் அடுத்த தலைமுறையினரை இணைக்க வேண்டும். முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான பதினைந்து வருடங்களில் நம்மால் அதிகம் இந்த விடயங்களை நோக்கிப் பயணித்திருக்க முடியவில்லை. நாம் பல வழிகளில் சேர்ந்தும், தனித்தும் முயற்சித்திருக்கின்றோம் ஆனால் நமக்குள் முதன்மைப் படுத்தப்பட்ட பிளவுநிலை வாதங்கள் கடந்த காலம் தொடர்பான பார்வைகள் நம்மை இணைப்பதற்கு பதிலாக அதிகம் பிரிப்பதாகவே இருந்தது.

ஆனால் இப்போது அவற்றையெல்லாம் புறம்தள்ளி புதுப் பொலிவுடன் எழுச்சி கொள்ள அனைவரும் ஓரணியாக செயலாற்றுவதற்கான களத்தை தமிழ் பொது வேட்பாளர் தந்திருக்கின்றார்.

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தும் விடயத்தில் தமிழ் தேசியப் பொதுக்கட்டமைப்பாக ஒன்றுபட்டிருப்பவர்கள் நம்மை
அணுகுகிய முறையில் நமக்கு சில அதிருப்திகள் இருக்கலாம். ஆனால் இந்த விடயத்தில் ஏற்படும் விளைவுகள் நம் அனைவருக்கும் உரியது. எனவே தமிழ் பொது வேட்பாளர் என்னும் தேரை ஊராகக் கூடி இழுக்க வேண்டிய கடப்பாடு இப்போது நம் அனைவருக்குமுரிய கடப்பாடாக மாறியிருக்கின்றது.

தமிழ் பொது வேட்பாளரின் வெற்றி நம் அனைவரதும் வெற்றியாகும் - அது தோல்வி எனின் அது நம் அனைவரதும் தோல்வியாகும்.
எனவே அன்புக்குரிய செயற்பாட்டாளர்களே, நண்பர்களே ஊர் கூடித் தேர் இழுப்பதற்காக கரம் கோர்க்குமாறு தோழமையுடன் வேண்டுகிறேன்.

தமிழ் தேசியக் கவி புதுவை அண்ணரின் கவி வரியொன்றுண்டு  “காலத்தை தவறவிட்டால் பின்னர் கண்டவரெல்லாம் கதவை தட்டுவார்”

நாம் இந்த காலத்தை தவறவிட்டால் பின்னர் இவ்வாறானதொரு வாய்ப்பு பின்னர் வரும் வரையில் நாம் காத்திருக்க வேண்டி வரும் அதற்குள் பல விடயங்கள் நடந்தேறிவிடும். நாம் உலகிலிருந்து விடைபெறுவதற்கு முன் நமது அடுத்த தலைமுறையிடம் நமது அஞ்சல் கோலை கொடுக்க வேண்டும்.

தமிழ் பொது வேட்பாளர் என்னும் குறியீடு ஒரு தமிழ்த் தேசிய அஞ்சல் கோலாகும்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் உலகெங்குமுள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!

தமிழர்கள் அனைவரும் சங்குச் சின்னத்துக்கு ஒற்றுமையாய் வாக்களிப்போம்



நிமால் விநாயகமூர்த்தி
தமிழ் பொது வேட்பளர் ஆதரவாளர்கள் சார்பாக
செப்டம்பர் 15, 2024, கனடா.

# Markham- Thornhill's MPP Logan Kanapathi hosted his Annual BBQ Get together

# மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி வழங்கிய வருடாந்த ஆதரவாளர் ஒன்று கூடல்

**Markham- Thornhill's Ontario MPP Logan Kanapathi and his staff hosted his Annual BBQ Get together on 15th, September, 2024 at Armadale Park from 3.00 PM onwards.**
**More than 1500 invited Guests were gathered there to grace the event.**
**Many cultural performances from different Ethnic Communities were presented and those beautiful performers were honored by MPP Logan Kanapathi.**
**Markham- Thornhill**


மாகாண அரசுத்தொகுதியின்பாராளுமன்றஉறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் வருடாந்த ஆதரவாளர் ஒன்று கூடல்- யுரெயட டீடீஞ புநவ வழபநவாநச - கடந்த 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் 3.00 மணி தொடக்கம் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்று நடைபெற்றது.

வுாழசொடைட மாகாண அரசுத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் அலுவலகப் பணியாளர்கள் மற்றும் தொண்டர்கள் அனைவரும் அங்கு கூடி நின்று நிகழ்வில் கலந்து கொண்ட அனைரையும் வரவேற்று உபசரித்து உ ரையாடி மகிழ்ந்தார்கள்.

அங்கு வுாழசொடைட மாகாண அரசுத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் பாரியார் வைத்திய கலாநிதி திருமதி லோகன் கணபதி அவர்களும் அங்கு வருகை தந்து அனைவரையும் உபசரித்தார்.

கனடா உதயன் நண்பர்கள் மற்றும் பல வர்த்தக நண்பர்கள் அங்கு கூடி நின்று தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

***Kalapiriya - Local Journalism Initiative Reporter- 1***







# உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 37வது நினைவு தினம் நல்லூரில் அனுஸ்டிக்கப்பட்டது.

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 37வது நினைவு தினம், 15-09-2024 அன்றையதினம் யாழ்ப்பாணம் - நல்லூர் பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் அனுஸ்டிக்கப்பட்டது.

திலீபனின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி, ஈகைச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியதுடன் பலரும் உணர்வுபூர்வமாக கலந்துகொண்டனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், சிறைகளிலும், முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும், என ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, தியாகதீபம் திலீபன் 15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரையான 12 நாட்கள் அகிம்சை வழியில் யாழ் நல்லூரில் நீராகாரம் அருந்தாமல் உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தி சாவைத் தழுவிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.





# சுமந்திரன் ஒரு பொய்யன் என்பது தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல ஏனைய இனம் சார்ந்த மக்களுக்கும் தெரியும் என்கிறார் கஜேந்திரன் எம்.பி!

ஏக்கே ராஜ்ஜியவில் சமஸ்டி இருக்கிறது என தமிழ் மக்களை ஏமாற்றிய சுமந்திரன் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்கிவிட்டு மக்களுக்கு பொய் விளக்கம் கூறுவார் என தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல ஏனைய இனம் சார்ந்த மக்களுக்கும் நன்கு தெரியும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

03-09-2024 திங்கட்கிழமை யாழ்ப்பாணம். காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள அவரது கட்சி அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுமந்திரன் என்கின்ற நபர் யார் என்பது தொடர்பில் தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். நல்லாட்சி அரசாங்கத்தில் ஐ.நாவில் கால அவகாசம் பெற்றுக் கொடுப்பதற்கு சம்பந்தர் தலைமையிலான அணியில் சுமந்திரன் அரசாங்கத்தை காப்பாற்றினார்.

அது மட்டுமல்லாது புதிய அரசியல் அமைப்பை உருவாக்குகிறோம் எனக் கூறிக்கொண்டு ஏக்கே ராஜ்ஜியவில் சமஸ்டி இருக்கிறது என மக்களுக்கு பொய்களை கூறிவந்தவர்.

அதேபோன்று பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் போராட்டத்தை திசைதிருப்பி இலங்கையில் இடம்பெற்ற இன அழிப்புக்கு தமிழ் மக்கள் உள்ளக விசாரணையை வலியுறுத்தி போராட்டம் செய்தார்கள் என பாராளுமன்றத்தில் தெரிவித்தவர்.

அப்போது எமது கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் தெளிவாக குறிப்பிட்டார், எமது போராட்டம் சர்வதேச விசாரணையை கோரி இடம்பெற்றதே அல்லாமல் உள்ளக விசாரணையை கோரி இடம்பெறவில்லை என அழுத்தம் திருத்தமாக கூறினார்.

இந்த விடயம் இந்த போராட்டத்தில் ஏற்பாட்டாளர்களில் ஒருவராக இருந்த வேலன் சுவாமியிடம் நாங்கள் தெரிவித்த போது சுமந்திரன் இவ்வாறாக பேசினாரா என கோபப்பட்டார். ஆனால் ஊடக சந்திப்பில் சுமந்திரன் கூறிய விடயங்களை மறுத்துப் பேச தயங்கிவிட்டார்.

இவ்வாறு பொய்களை உரைத்த சுமந்திரன் தற்போது தமிழ் மக்கள் வடக்கு கிழக்கு இணைந்த சமஸ்டி தீர்வினை கேட்கும் நிலையில் ஒற்றையாட்சி அரசியலமைப்பை தேர்தல் விஞ்ஞாபனத்தில் கொண்ட சஜித் பிரேமதாசாவுக்கு தமிழரசு ஆதரவு வழங்குவதாக சுமந்திரன் அறிவித்திருக்கிறார்.

தமிழ் மக்களிடம் சமஸ்டித் தீர்வை முன் வைப்போம் என தேர்தல் காலத்தில் வாக்குகளை பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒற்றை ஆட்சி சிங்கள வேட்பாளருக்கு ஆதரவை வழங்கியமை ஒட்டுமொத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பும் பொறுப்பேற்க வேண்டும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவு என பொது வெளியில் கூறிக் கொண்டாலும் பாராளுமன்றத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பாகவே பயணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நான் அவர்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன் நீங்கள் தமிழ் மக்களை நேசிப்பவர்களாக இருந்தால் தமிழ் தேசியத்துக்கு எதிராக செயல்படுபவர்களை உதறிவிட்டு தனித்து பாராளுமன்றத்தில் இயங்காதது ஏன் எனக் கேட்க விரும்புகிறேன்.

தமிழ் மக்களை ஏமாற்றி சர்வதேச விசாரணையை உள்ளக விசாரணையாக மாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களை தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றனர்.

இந்த ஏமாற்றத்தின் ஒரு பகுதியாக தமிழரசு கட்சி சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவை வழங்கி தமிழ் மக்களின் தாயகம் தேசியம், சுய நிர்ணய உரிமையை ஒற்றை ஆட்சியின் கீழ் மண்டியிட வைப்பதற்கான முயற்சியாக சஜித்தை ஆதரித்துள்ளனர்.

ஏற்கனவே புதிய அரசியலமைப்புக்கான வேலைத்திட்டங்கள் முடிவுற்ற நிலையில் அதனை நிறைவேற்றுவதற்கான முன்னேற்பாடாக தெற்கு கட்சிக்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.




தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தமிழ் தேசிய நீக்கல் செயற்பாடுகள் தொடர்பில் எமது கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பல தடவைகள் மக்கள் முன் தெரிவித்திருக்கிறார்.

இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் களுக்கேற்ற வகையில் செயற்பாடும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒற்றை ஆட்சியின் கீழ் தமிழர்களை அடி பனிய வைப்பதற்கான வேலை திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

ஆகவே தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காக தமிழ் தேசிய நீக்கத்தை மேற்கொள்வோர் தொடர்பில் அவதானமாக இருப்பதுடன் அவர்களுக்கு தகுந்த பாடத்தை தமது வாக்குகளால் வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அஞ்சல் வாக்களிப்பில் தமிழர் பொதுச் சின்னத்திற்கு வாக்களியுங்கள்

## – முன்னாள் தவிசாளர் நிரோஸ் வேண்டுகோள்

ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல் வாக்களிப்பு நாளை முதல் ஆரம்பமாகவுள்ள நிலையில் வாக்களிக்கவுள்ள அரச உத்தியோகத்தர்கள் தமிழ் மக்களின் பொதுச் சின்னமாகவுள்ள சங்கு சின்னத்திற்கு வாக்களித்து எமது மக்கள் சார்ந்து எமக்குள்ள தேசிய உணர்வையும் பொறுப்பினையும் வெளிப்படுத்த வேண்டும் என முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரும் ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

2ம் திகதி திங்கட்கிழமை கோப்பாய் பகுதியில் அரச சேவையாளர்களை நோக்கிய பிரச்சார நடவடிக்கைகளின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் அரச சேவையில் எமது மக்களுக்கான பணிகளை அர்ப்பணிப்புடன் எமது சகோதரர்கள் ஆற்றி வருகின்றீர்கள். அரச சேவையில் பல்வேறுபட்ட நெருக்கடிகள் இன ரீதியிலும் அரசியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டும் இன்றும் காணப்படுகின்றன. அரச சேவையாளர்கள் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் இன ரீதியில் பழிவாங்கப்பட்டுள்ளீர்கள். தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டமை நாட்டின் இன முரண்பாடுகளுக்கு பிரதான அடிப்படைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது என்றால் அச் சட்டத்தின் காரணமான மிகவும் பாதிக்கப்பட்ட தரப்பினுள் அரச சேவையாளர்கள் உள்ளடங்கினீர்கள்.

பல்கலைக்கழக தரப்படுத்தல்இ அரச சேவையில் சிங்கள மயப்படுத்தல்இ அரச சேவையினை இராணுவ மயப்படுத்தல்இ அரசியல்கட்சி மயப்படுத்தல் என குறிப்பாக வடக்கக் கிழக்கில் பணியாற்றும் நீங்கள் இனரீதியாக மாறி மாறி ஆட்சிக்குவந்த அரசாங்கங்களால் பாதிக்கப்பட்டீர்கள். தற்போது அவை நேரடியாகப் தெரியக்கூடியதாக பிரயோகிக்கப்படவில்லை ஆயினும் மறைமுகமாக இன ரீதியிலான புறந்தள்ளல்கள் இலங்கையின் நிர்வாகசேவைக்கட்டமைப்புஇ இதர சேவைக்கட்டமைப்புக்களில் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இவ்விடயங்கள் எல்லாம் தமிழ் மக்களுக்கு எமது அரசியல் அபிலாசைகளைப் பிரயோகிக்கத்தக்க நிரந்தர அரசியல் தீர்வு கிட்டும் வரையில் தொடர்கதையாகக் காணப்படும் என்பதுவே உண்மை. இந் நிலையில் எமக்கும் பிரச்சினைகள் உண்டு என்பதை இரகசியமாக வாக்களித்து ஒடுக்குமுறையை வெளிப்படுத்துங்கள்.

தமிழ் பொதுவேட்பாளர் என்பது நாட்டினுள் இன நல்லிணக்கத்தினைத் துண்டாடுவதற்கானதல்ல. மாறாக எங்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை வெளிக்காட்டுவதற்கானது. இது ஜனநாயக ரீதியில் சர்வதேசம் ஏற்றுக்கொண்ட உரிமைசார் நடவடிக்கையுமாகும் என்பதை புரிந்து கொண்டு அரச உத்தியோகத்தர்கள்தமிழ் மக்களின் பொதுச் சின்னமான சங்குச் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழு உறுப்பினருமான தியாகராஜா நிரோஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




VIBRANT
HOSPITALITY
GROUP
ONE OF CANADA'S FASTEST GROWING
HOSPITALITY AND DEVELOPMENT GROUPS
OVER
25 Years
IN THE HOSPITALITY
INDUSTRY
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
LOCAL: 905 769 1509
TOLL FREE: 1 888 674 7770
VIBRANTHOSPITALITYGROUP.COM


KT GROUP
An Integrated Facilities Management Services Provider
Providing eco-friendly commercial cleaning services in Ontario to promote sustainability and maintain a spotless environment.
GREEN MAPLES ENVIRONMENTAL
Offering top-tier security solutions to ensure the safety and protection of businesses and properties throughout Ontario.
TOP DEFENCE
Delivering comprehensive employment services to connect job seekers with employers and support workforce development.
ONTARIO EMPLOYMENT SOLUTIONS
Specializing in professional restoration services to repair and rejuvenate properties after damage from water, fire, mold, or other disasters.
ONTARIO RESTORATION SQUAD
+1-866-686-9660
2283 Argentia Rd., Unit 16, Mississauga, ON, Canada, L5N 5Z2


SPECTRONX TECHNOLOGIES
IT Services & Solutions
Empowering Brands Digitally
Web Development
WebApp Development
Search Engine Optimization
Social Media Management
Branding
Data Analytics
Digital Marketing
+1-437-213-9525
info@spectronx.ca

# இலங்கை தமிழரசுக் கட்சியின் தீர்மானம் ஒரு பாரதூரமான விடயம்

## தொழிலாளர் அமைப்பின் பிரதிநிதி சுப்பிரமணியம் கவலை!

தமிழ் பொது வேட்பாளரை புறந்தள்ளிவிட்டு சஜித் பிரேமதாச அவர்களுக்கு நேரடியாக வாக்கினை செலுத்துமாறு இலங்கை தமிழரசு கட்சியானது தீர்மானித்தமை ஒரு பாரதூரமான விடயமாகும் என அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என். வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

செப்டம்பர் 2ம் திகதி வவுனியாவில் நடைபெற்ற இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானம் குறித்து அவரிடம் வினவியவேளை அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில் பல கட்சிகள் சிவில் சமூகங்கள், பொது அமைப்புகள் என 89 அமைப்புக்கள் ஒன்றிணைந்து, மக்களது கருத்துக்களை கேட்டு, அவர்களுடன் கலந்துரையாடி தமிழ் மக்களுக்கான ஒரு பொது வேட்பாளரை தெரிவு செய்துள்ளார்கள்.

இது இவ்வாறு இருக்கும்போது இலங்கை தமிழரசு கட்சியானது மத்திய குழுவின் ஏகமனதான தீர்மானமாக சஜித் பிரேமதாஸ் அவர்களை ஆதரிப்பதான செய்தியை வெளியிட்டுள்ளார்கள். அது ஒரு சிந்தனையில்லாத, பாரதூரமான, மக்களுக்களிடையே அதிர்வலைகளை ஏற்படுத்துகின்ற ஒரு நிலைப்பாடாகும்.

அதுமட்டுமில்லாமல் அவர்களது கட்சியின் மத்திய குழு உறுப்பினரான திரு.அரியநேத்திரன் அவர்கள் இந்த ஜனாதிபதி போட்டியில் இருந்து விலக வேண்டும் என தெரிவித்துள்ளமை மிகவும் பாரதூரமான ஒரு விடயமாகும். இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ள பொது வேட்பாளர் தமிழ் மக்களிடையேயான ஒரு ஜனாதிபதியாக கருதப்படுவாரே தவிர இலங்கையின் ஜனாதிபதியாக வரப்போவதில்லை. இலங்கையின் ஜனாதிபதியாக வரக்கூடிய நிலை சிங்கள பெரும்பான்மையினத்துக்கே காணப்படுகின்றது.

ஒட்டுமொத்த தமிழ் மக்களும் ஒரே அணியில் நிற்கின்றோம், ஒட்டுமொத்த தமிழ் மக்களும் ஒரு இலக்கினை நோக்கி நகர்கின்றோம், ஒட்டுமொத்த தமிழ் மக்களும் இனப் பிரச்சினைக்கும் ஒரு தீர்வை தேடி பயணிக்கின்றோம், சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பயணிக்கின்றோம் என்பதை இலங்கை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் சங்கின் ஊடாக பறைசாற்ற வேண்டிய தேவை எமக்குள்ளது.

இது இவ்வாறு இருக்கையில் ஓரளவாவது அரசியல் ஞானம் இருக்கின்ற ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு மாகாண பொறுப்பாளர் ஒருவர் தான் உட்பட தமிழ் மக்கள் அனைவரும் முதல் வாக்கினை சங்கிற்கு அளித்துவிட்டு ஏனைய விருப்பு வாக்கினை தமது கட்சியின் சிங்கள வேட்பாளருக்கு அளிக்க வேண்டும் என கூறி இருக்கின்றார். அவர் தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள பற்றுதலை ஒரு அரசியல் ஞானத்துடன் கூறி இருக்கின்றார்.

இதே வேளையில் தமிழரசு கட்சியானது ஒட்டுமொத்தமாக நேரடியாக சஜித் பிரேமதாஸ அவர்களுக்கு மட்டும் ஆதரவினை அளத்திருப்பது ஒரு அரசியல் ஞானம் அற்ற, அல்லது தமிழ் மக்கள் மீது பற்றற்ற நிலையை எடுத்துக்காட்டுகின்றது.

இவர்கள் இது குறித்து தமக்குள் கருத்து வேறுபாடு இருந்திருந்தாலும், மக்களுடைய கருத்துக்களை கேட்டிருக்க வேண்டும். அடுத்ததாக தமது மத்திய குழுவை முழுமையாக கூடியிருக்க வேண்டும். மத்திய குழுவில் இருக்கின்ற சிலர் இந்தக் கூட்டம் கூட்டியமை குறித்து தமக்குத் தெரியாது என கூறியிருக்கின்றனர்.

இந்த சந்தர்ப்பத்தில் சி.சிறிதரன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்திருந்ததுடன், சங்கு சின்னத்தை தானே சரி செய்ததாக சிறிதரன் அவர்கள் தெரிவித்துள்ளார். ஆனால் தாங்கள் ஏக மனதாக தீர்மானம் எடுத்ததாக சுமந்திரன் கூறுகின்றார்.

எது அவ்வாறாயினும் சுமந்திரன், அரியநேந்திரனுக்கு வாக்கினை போடுவதற்கு விருப்பமில்லாத விட்டாலும், தமிழ் மக்களுக்காக முதலாவது வாக்கினை சங்கிற்கு போட்டுவிட்டு மத்திய வாக்கினை சஜித் பிரேமதாசாவுக்கு போடுங்கள் என சொல்லி இருக்கலாம்.

ஆனால் தமிழ் மக்களை ஒட்டுமொத்தமாக ஒதுக்கி விட்டு, தமிழ் மக்களுடைய கருத்தினை கேட்காமல், எங்களை அழித்து எமது இனத்திற்கு எதிராக செயற்பட்ட, பிரேமதாசாவின் பரம்பரையில் வந்த, ஜே.ஆர்.ஜெயவர்த்தினவின் வளர்ப்பில் வந்த சஜித் பிரேமதாஸ அவர்களுக்கு வாக்கினை போடுமாறு கூறுவது என்பது மிகவும் ஒரு ஆபத்தான அல்லது தமிழ் மக்களை ஏமாற்றமடைய வைக்கின்ற ஒரு விடயமாகத்தான் நான் கருதுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.



# எங்களை அழிப்பதற்கு பெரும்பான்மை இன மக்கள் தேவையில்லை எங்களது தலைவர்களே போதும்

## அன்னராசா சீற்றம்!

தமிழரசு கட்சியானது செப்படம்பமர் 1ம் திகதி கூடி வவுனியாவில் முடிவு எடுத்ததன் அடிப்படையில், தமிழரசு கட்சியானது ஒற்றுமை இல்லாமல் தமிழர்களை பிரிவுக்கும் அல்லது தமிழர் இந்த நிலைக்கு போவதற்கும் காரணமாக இருக்கின்றது என வடக்கு வடக்கு மாகாண மீனவ அமைப்பின் பிரதிநிதியான அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.

அன்றையதினம் வவுனியாவில் நிறைவேற்றப்பட்ட தமிழரசு கட்சியின் தீர்மானம் குறித்து, சமூகமட்ட பொது அமைப்பின் பிரதிநிதி என்ற வகையில் அவரிடம் இதுகுறித்து கருத்து வினவியபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,



2009 ஆம் ஆண்டுக்கு பிற்பாடு இன்று வரைக்கும் தமிழரசுக் கட்சி தமிழருடைய உரிமைகளை மீட்பதற்கு உளரீதியாக செயல்படவில்லை. வாயால் மக்களுக்கு ஒன்றை சொல்வதும் அரசாங்கத்திற்கு ஒன்றை சொல்வதுமாக இருக்கின்றது.

ஒட்டுமொத்த கட்சியாக இந்த முடிவை எடுத்திருந்தால் நாங்கள் வரவேற்றிருப்போம். ஆனால் கட்சியின் தலைவர் ஒன்றினை கூறுகின்றார், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா ஒன்றினை கூறுகின்றார், பல உறுப்பினர்கள் இதில் கலந்துகொள்ளவில்லை. ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் தமிழ் மக்களின் ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் குலைப்பதற்கான அடித்தளமாகத் தான் நாங்கள் இதனை பார்க்கின்றோம்.

தமிழரசு கட்சியை எடுத்து பார்ப்போமேயானால் சிவஞானம் சிறீதரன், குகதாசன் ஆகியோர் உட்பட்ட கிளிநொச்சி மற்றும் திருகோணமலை கிளைகளினால் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் அதனை எதிர்க்கின்றனர். இவ்வாறு இருந்தால் தமிழர்களுடைய நிலை என்ன?

தமிழர்களை கூறு போட்டு, தமிழர்களுடைய இருப்புகளை அழிப்பதற்கு ரணிலோ, சஜித்தோ, அல்லது நாமல் ராஜபக்சவோ தேவையில்லை, எமது கட்சித் தலைவர்களே போதும்.

தமிழ் சிவில் சமூகமாக நாங்கள் எடுத்த பொது வேட்பாளர் என்ற முயற்சியை ஆதரித்து, எதிர்காலத்தில் இவ்வாறான புல்லுருவிகளையும், முண்டு கொடுப்பவர்களையும் நிராகரிப்பதற்கு நாங்கள் தமிழர் சமூகமாக ஒன்றுபட வேண்டும்.

வாக்குப் போடுவது மக்களாகிய நாங்கள். ஆனால் இவர்கள் எப்போது மக்களை சந்தித்து, மக்களது கருத்துக்களை கேட்டு தீர்மானம் எடுத்தார்கள்? ஆகவே இவர்கள் மக்களது பிரதிநிதிகள் என்று கூறி எவ்வாறு சர்வதேச சமூகங்களிடம் பேசப் போகின்றார்கள்?

வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் கூட்டமானது பிரிவினையை காட்டுகின்றது. எனவே மக்களே நீங்கள் இந்த தமிழரசுக் கட்சியை நம்பாதீர்கள். நாங்கள் சுயமாக சிந்தித்து, எங்களுக்கு இருக்கின்ற வாக்குரிமை பலத்தினால் ஒன்றிணைந்து செயற்படுவோம். எமது கட்டமைப்புக்குள் வருமாறு நாங்கள் இலங்கை தமிழரசுக் கட்சியையும் அழைக்கின்றோம்.

தங்களுடைய சுயலாபத்துக்காகவும், தங்களது மதுபான நிலைய அனுமதிப் பத்திரத்துக்காகவும், தாங்கள் கோடிகளை சம்பாதிப்பதற்காகவும் தமிழ்மக்களை எதிர்காலத்தில் விற்றுப் பிழைப்பது சாத்தியமற்றது. 21ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் அது வெளிச்சத்துக்கு வரும். அப்பொழுது இந்த அரசியல் காட்சிகளும், பேரம் பேசுபவர்களும் புரிந்து கொள்வார்கள்.

எனவேதான் நாங்கள் கூறுகின்றோம். இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு சங்கு சின்னத்திற்கு வாக்களிப்போம், எமது ஒற்றுமை நிலைநாட்டுவோம் அதுவே எமக்கான தீர்வு என அவர் மேலும் தெரிவித்தார்.

# "பல கூறுகளாக பிரிந்து நின்ற எமது தமிழினம் ஒரு தேசமாக எழுந்த நின்று இணைந்து குரல் எழுப்பும் வாய்ப்பை 'தமிழ் பொதுவேட்பாளர்' என்னும் எழுச்சி ஏற்படுத்தியுள்ளது"

## கனடாவில் நடைபெற்ற ' தமிழ் பொதுவேட்பாளர்' என்னும் எழுச்சிக்கு ஆதரவு வழங்கும் கூட்டத்தில் ராஜா யோகராஜா அழுத்தமாகத் தெரிவிப்பு

"கடந்த பல வருடங்களாக இலங்கை அரசியலிலும் தமிழர் அரசியலிலும் பல கூறுகளாக பிரிந்து நின்ற எமது தமிழினம் ஒரு தேசமாக எழுந்த நின்று இணைந்து குரல் எழுப்பும் வாய்ப்பை ' தமிழ் பொதுவேட்பாளர்' என்னும் எழுச்சி ஏற்படுத்தியுள்ளது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இந்த முயற்சி ஒரு சாதாரணமான விடயமல்ல. தமிழ் மக்களாகிய எமது எதிர்காலத்தை தீர்மானிக்கவும் திட்டங்களைத் தயாரிக்கவும் ஏற்ற ஒரு ஆரம்பப் புள்ளியாகவே நாம் இந்த ' தமிழ் பொதுவேட்பாளர்' என்னும் முக்கிய கருப்பொருளைக் கருத வேண்டும்.

கடந்த காலங்களில் பல்வேறு கட்சிகள். போராளி இயக்கங்கள் மற்றும் அமைப்புக்கள் என பிரிந்து நின்ற தமிழ் மக்களாகிய நாம் இந்த அவசியமான தருணத்தில் ' தமிழ் பொதுவேட்பாளர்' என்னும் கருத்தியலின் அடிப்படையில் ஒன்றுபட்டுள்ளோம். இந்த ஒற்றுமையையும் இணைவையும் நாம் இழந்து விடக்கூடாது. அதைக் கட்டிக் காக்க வேண்டும்.

எமக்கான ஒரு பொது வேட்பாளரை தெரிவு செய்த பணியானது ஒரு சாதாரணமான ஒன்றாக இருக்கவில்லை என்பதை இந்த மண்டபத்தில் அமர்ந்திருப்பவர்கள் அனைவரும் அறிவார்கள்.சுமார் எட்டு மாதங்கள் பல கலந்துரையாடல்களை நடத்திய பல சவால்களைச் சந்தித்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது. அதன் பின்னரே தமிழ்ப் பொது வேட்பாளரை தெரிவு செய்யும் கட்டம் வந்தது. அதுவும் இலகுவானதாக இருக்கவில்லை. எனவே மிகவும் சிரமங்களையும் சவால்களையும் சந்தித்து முடிவு எடுக்கப்பட்ட ' தமிழ் பொதுவேட்பாளர்' என்னும் கருத்தியல் அழிக்கப்பட்டோ அன்றி ஒதுக்கப்பட்டோ போய்விடக்கூடாது. நாம் அனைவரும் ஒன்று பட்டு இந்த கருத்தையும் எழுச்சியையும் பயன்படுத்த வேண்டும்.

மறுபக்கத்தில்சுமந்திரன்போன்றவர்கள்இதை எதிர்க்கின்றார்கள். சுமந்திரன் போன்றவர்கள் கடந்த 40 வருடங்களுக்கு முன்னர் எமது போராட்டத்தின் ஆரம்பக் கால கட்டத்தில் றோயல் கல்லூரியிலும் சட்டக்கல்லூரியிலும் படித்துக் கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் உயர் கல்வியை மேற்கொண்டிருந்த எத்தனையோ தமிழ் மாணவர்கள் விடுதலை இயக்கங்களில் இணைந்து போரிட்டு தங்கள் உயிர்களையும் அர்பபணித்துள்ளார்கள் . ஆனால் இவ்வாறான அர்ப்பணிப்பையோ அன்றி தியாகத்தையோ செய்யாத சுமந்திரன் தான் கல்வி கற்று முடித்துவிட்டு எங்கள் வரலாற்றை விளங்கிக் கொள்ளாதது போன்று பொய்களைச் சொல்லி வருகின்றார். அல்லது மறுக்கின்றார். அவ்வாறனவர்களும் நாம் உண்மையை எடுத்துரைக்கும் வண்ணம் ' தமிழ் பொதுவேட்பாளர்' என்னும் கருத்தியல் போராட்டம் வெற்றி பெற உழைக்க வேண்டும். மேலும் எமது தற்போதைய ஒற்றுமையை மேலும் வலுப்பெறச் செய்யவும் நாம் கடுமையாக தொடர்ந்து உழைக்க வேண்டும்"

இவ்வாறு கனடாவில் நடைபெற்ற ' தமிழ் பொதுவேட்பாளர்' என்னும் எழுச்சிக்கு ஆதரவு வழங்கும் கூட்டத்தில் உரையாற்றிய ஈபிஆர்எல்எவ் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ராஜா யோகராஜா அழுத்தமாகத் தெரிவித்தார்.

கனடா மார்க்கம் நகரில் உள்ள கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைமையக கலந்துரையாடல் மண்டபத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் அவரது உரை முக்கியமான ஒன்றாக கருதப்பட்டது.

அங்கு உரையாற்றிய இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு வீர சுப்பிரமணியம் அவர்களும் தனது உரையில் சில முக்கியமான தகவல்களை எடுத்துரைத்தார்.

அவர் தனது உரையில் "இலங்கை தமிழரசுக் கட்சியின் அதிகளவு அங்கத்தவர்கள் ' தமிழ் பொதுவேட்பாளர்' என்னும் கருத்தியல் ஆயுதத்தை தமது கைகளில் கொண்டுள்ளார்கள். மாறாக தன்னலம் கொண்ட சில தமிழ் தலைவர்களே ஏனைய ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களை ஆதரிக்கின்றார்கள். பல தியாகங்களை அரங்கேற்றிய திருகோணமலை மண்ணின் மைந்தர்கள் சேர்ந்து ' தமிழ் பொதுவேட்பாளர்' என்னும் அம்சத்தை வரவேற்று அங்கு தீவிர பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றார்கள். வடக்கு கிழக்கு எங்கும் ' தமிழ் பொதுவேட்பாளர்' என்னும் கருத்தியலுக்கும் அரசியல் எழுச்சிக்கும் ஆதரவு பெருகி வருகின்றது. எனவே நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து தொடர்ச்சியாக உழைத்து எமது இனத்தைக் காப்பாற்றுவோம்" என்றார்.

மேற்படி கூட்டத்தில் நிமால் விநாயகமூர்த்தி உட்பட சிலரும் உரையாற்றினார்கள்.


















# ஜனாதிபதி தேர்தலில் தேசிய ஜனநாயக கட்சி அனுராவுக்கு ஆதரவு வழங்க தீர்மானம்

## கட்சி தலைவர் நாரா அருண்காந் தெரிவிப்பு

தேசிய ஜனநாயக கட்சி இந்த ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அனுரகுமார திசாநாயக்காவிற்கு ஆதரவளிப்பதாக தீர்மானிதுள்ளதுடன் வெற்றிபெறும் அனுராவுக்கு தமிழ் மக்கள் வாக்களித்து அதரவு வழங்க வேண்டும் என கட்சியின் தலைவர் நாரா அருண்காந் தெரிவித்தார்.

கண்டியில் 16-09-2024 திங்கட்கிழமை இடம்பெற்ற தேசிய ஜனநாயக கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய ஜனநாயக கட்சி கடந்த 6 வருடங்களாக மக்கள் மத்தியில் பணியபற்றிவருகின்றது இருந்தபோதும் இந்த நாட்டிலே ஊழல் அற்ற ஆட்சியை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த முறை மாற்றாக சிந்தித்து இந்த ஆதரவை தேசிய மக்கள் சக்திக்கு வழங்க தீர்மானித்தோம்.

கடந்த 4 தேர்தல்களை அவதானித்தால் 2005 ம் ஆண்டு ஜனாதிபதியாக போட்டியிட்ட ரணிலை தோற்கடிக்க வேண்டும் என வடக்கு கிழக்கிலே மிகப் பெரும் குரல் எழுந்ததையடுத்து ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்ததுடன் மகிந்த ராஜபக்ஸ வெற்றி பெற்றார்.

அதனை தொடர்ந்து சரத் பொன்சேக்காவை ஜனாதிபதியாக்க வேண்டும் என சிறுபான்மை மக்கள் மீண்டும் ஒரு தவறான முடிவை எடுத்தனர். ஆனால் அந்த தேர்தலில் பொன்சேக்கா தோல்வி அடைந்தபோதும் மகிந்த ராஜபக்ஸ வெற்றி பெற்றார் ஆகவே தமிழ் மக்களின் வாக்குகள் இரண்டாவது முறையாக வீனடிக்கப்பட்டது

மூன்றாவது முறை தேர்தலிலே தமிழ் மக்கள் ராஜபக்ஸ இனிமேல் தொடர்ந்து ஆட்சியல் இருப்பார்கள் என இன்னும் ஒரு தவறான முடிவெடுத்து முடிவேடுத்து அவருக்கு வாக்களித்தபோதும் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றார். இவ்வாறு தமிழ் மக்கள் எடுக்கின்ற தேர்தல் முடிவுகள் தமிழ் மக்களுக்கு பின்னடைவை ஏற்படுத்தி இருக்கின்றது காரணம் உணர்வு பூர்வமாக முடிவெடுத்தல் காரணமாக கடந்த 15 வருடமாக வாக்குகள் வீனடிக்கப்பட்டது.



எனவே உண்மையில் நாங்கள் உணர்வு பூர்வமாக அன்றி சிங்கள மக்கள் மத்தியில் இருக்கின்ற தேர்தல் அலை மற்றும் பெரும்பான்மை மக்கள் என்ன முடிவு எடுக்கின்றனர் என ஓரளவு ஊகித்து அதற்கு ஏற்றால் போல அறிவு பூர்வமாக முடிவெடுத்தோம் என்றால் யார் வெற்றி பெறுவார் என்று கணித்து அந்த வேட்பாளருக்கு எங்கள் ஆதரவை கொடுப்பதன் ஊடாக தமிழ் மக்களுடைய வள அபிவிருத்தி தேவைகளை அல்லது உரிமை சார்ந்த விடையங்களை வென்று எடுக்க கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

இருந்தபோதும் இன்று நாட்டிலே பல கட்சிகள் இரண்டாக உடைக்கப்பட்டுள்ளதுடன் கட்சிக்கு கட்சியில் தாவியுள்ளனர் எனவே இவ்வாறான சூழ்நிலையில் கட்சிகளின் வாக்குகள் உடைந்துள்ளது ஆனால் இந்த முறை பெரும்பான்மையான சிங்கள மக்கள் அனுரகுமார திசாநாயக்காவை ஆதரிப்பதாக நாடு முழுக்க அலை ஏற்பட்டுள்ளது அதுமட்டுமல்ல பல கட்சிகளுடன் பேச்சு நடாத்தியுள்ளோம் அதில் தேசிய மக்கள் மக்கள் சகத்தி நிறைவேற்று உறுப்பினர் லால்காந் மிகவும் நேர்மறையான கருத்தை தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு பின்னரும் பேச்சு வார்த்தை தொடர இருக்கின்றோம் எமது மக்களுக்கு ஊழல் அற்ற ஆட்சியை கொடுப்பதன் ஊடாக நாட்டின் பொருளாதார கலாச்சார பண்பாடு. அபிவிருத்தியை மேற்கொள்ள பலமாக அமையும் என்ற காரணத்துக்காக நாங்கள் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்க தீர்மானித்தோம். ஏனவே எமது மக்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்து சம்மேளனம் அனுராவுக்கு ஆதரவு தெரிவித்து வாக்களிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

# பாணி விஜேசிறிவர்தன யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு முன்பிருந்து பேசுகின்றார்

"நான் இலங்கையில் 2024 ஜனாதிபதித் தேர்தலின் சோசலிச சமத்துவக் கட்சியின் வேட்பாளர் பாணி விஜேசிறிவர்தன.

இன்று 16-09-2024 .நான் யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு முன்பாக இருந்து உரையாற்றுகிறேன். 1981ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி, அப்போது இலங்கையை ஆண்ட ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன அரசாங்கத்தின், அல்லது ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த குண்டர்கள் குழு, யாழ்ப்பாண நகருக்கு வந்து இந்த நூலகத்தை முற்றாக எரித்தது.

இந்த நூலகத்தில் உலகில் எங்கும் கிடைக்காத பல்லாயிரக்கணக்கான அரிய நூல்கள் இருந்தன. அந்த தீ மூட்டலினால் ஒட்டுமொத்த மனித சமுதாயமும், குறிப்பாக தமிழ் மக்களும், தங்களது கடந்த கால கலாச்சார பாரம்பரியத்தின் மிகவும் மதிப்புமிக்க பகுதியை இழந்தனர். இந்த நூலகத்தை எரித்த பின்னர், இந்த கும்பல் நகரத்தில் தாக்குதல் நடத்தியதுடன், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் அலுவலகத்தையும் எரித்தது.

அதன்பிறகு நகருக்குள் சுற்றித் திரிந்த குண்டர் கும்பல், தமிழ் மக்களின் கலாச்சாரம் சார்ந்த ஏராளமான நினைவுச் சின்னங்களை அழித்தது. இந்தக் குண்டர் நடவடிக்கையின் பின்னணியில் உள்ள வரலாற்று உண்மைகளைப் பற்றி நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த தீ மூட்டல் 1981 இல் நடந்தாலும், அதன் வரலாறு பல தசாப்தங்களுக்கு முந்தையதாகும். 1948 ஆம் ஆண்டில், இலங்கை என்ற இந்த முதலாளித்துவ அரசு ஸ்தாபிக்கப்பட்ட போதே, தமிழ் மக்களுக்கு பாரபட்சம் காட்டுகின்ற, அவர்களின் ஜனநாயக உரிமைகளை ஒடுக்குகின்ற ஒரு பலாத்கார ஒற்றையாட்சி அரசாகவே நிறுவப்பட்டது.

இலங்கையின் கொழும்பை ஆட்சி செய்த ஒவ்வொரு அரசாங்கமும், தொழிலாள வர்க்கத்தை பிளவுபடுத்த, தமிழர் விரோத இனவாதத்தை தொடர்ந்து பயன்படுத்தி வந்தன. 1977ல் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன, 1978 இல், நிறைவேற்று ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்தினார். 1979ல் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற கொடூர சட்டம் கொண்டுவரப்பட்டது. இவற்றுக்குப் பின்னால் இருந்தது என்ன?

குறிப்பாக ஜே.ஆர். ஜயவர்தனவின் அரசாங்கம், இலங்கையின் பொருளாதாரத்தை உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரத்துடன் இணைக்க விரும்பியது. சுதந்திர சந்தை எனப்படும் கொள்கையை இலங்கையில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தது. இந்தக் கொள்கைக்கு எதிராக, தொழிலாள வர்க்கத்தின் மத்தியில் இருந்து எழுந்த பாரிய போராட்டமாக, 1980 வேலை நிறுத்தத்தை நாம் கருதலாம். அந்த வேலை நிறுத்தம் தலைதூக்கிய உடன்தான், 1981ல், இந்த நூலகத்திற்கு தீ வைக்க குண்டர் கும்பலை இந்த யாழ்ப்பாண நகருக்கு அனுப்பினர்.

அப்போது நடைபெறவிருந்த மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில், தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் தடுத்து, அவர்களை அச்சுறுத்தி, அந்தத் தேர்தலில் அனுகூலத்தை தமக்குத் தாமே பெற்றுக் கொள்வதற்காகவே குண்டர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.



ஆனால், 1981 ஆம் ஆண்டு தீ வைப்பில் ஆரம்பிக்கப்பட்ட இந்த தமிழர் விரோத இனவாதப் பிரச்சாரம், புதிய வழியில் முன்னெடுத்துச் செல்லப்பட்டு, 26 வருடங்களாக இலங்கையை மூழ்கடித்த பாரிய அழிவை ஏற்படுத்திய உள்நாட்டு யுத்தத்தை 1983 ஆம் ஆண்டு தொடங்குவதற்கு ஜே.ஆர். ஜயவர்த்தன அரசாங்கத்தை முன்நகர்த்தினார்.

இப்போது மீண்டும், முழு உலகப் பொருளாதாரமும் நெருக்கடியில் சிக்கியுள்ள சூழ்நிலையில், இலங்கையின் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம், தொழிலாள வர்க்கத்துக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் எதிராக, பாரிய தாக்குதலைத் தொடுத்துள்ளது. இந்தநிலையில், தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்கள் மிகப் பெரிய அளவில் வளர்ச்சியடைகின்ற சூழ்நிலையில், தமிழர் விரோத இனவாதத்தை கிளரிவிட வேண்டிய தேவை சிங்களப் பேரினவாதிகளுக்கு உள்ளது.

எனவே, உழைக்கும் வர்க்கத்தை பிளவுபடுத்தும் இந்த தமிழர் விரோத இனவாதப் பிரச்சாரத்திற்கு எதிராக, சிங்களம் பேசும் தொழிலாள வர்க்கமும், அதே போல் தமிழ் பேசும் தொழிலாள வர்க்கமும் ஒன்றுபட்டு, யாழ்ப்பாணத்தில், வடகிழக்கு மாகாணத்தில் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளால் தூக்கிப் பிடிக்கப்படும் தமிழ் தேசியவாதத்திற்கு எதிராக, அதே போல் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு எதிராக சோசலிசக் கொள்கைகளின் அடிப்படையில் ஸ்ரீலங்கா-ஈழம் சோசலிசக் குடியரசைக் கட்டியெழுப்ப வேண்டும், என நாம் உழைக்கும் மக்களுக்கு மிகத் தெளிவாக வலியுறுத்துகிறோம். அதை இந்திய துணைக் கண்ட சோசலிச குடியரசுகளின் ஒன்றியமாகவும், உலக சோசலிசக் குடியரசுகளின் ஒரு பகுதியாகவும் ஸ்தாபிப்பதற்கு, சோசலிச சமத்துவக் கட்சி முன்வைக்கும் வேலைத் திட்டத்துடன் இணைந்துகொள்ளுமாறு அனைத்து பொது மக்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

மிக்க நன்றி.

# டுறம் தமிழர் சங்கம் நடத்திய 'தாயகத்திற்குரிய உதவித் திட்டங்கள்' நோக்கம் கொண்ட இராப்போசன விருந்து

கனடாவில் வெற்றிகரமாக கடந்த பல ஆண்டுகளாக இயங்கிவரும் 'டுறம் தமிழர் சங்கம்' (னுரசாயஅ வுயஅடை யுளளழஉயைவழைெ) நடத்திய 'தாயகத்திற்குரிய உதவித் திட்டங்கள்' நோக்கம் கொண்ட இராப்போசன விருந்து கடந்த 15ம் திகதித ஞாயிற்றுக்கிழமையன்று மாலை பிக்கரிங் நகரில் உள்ள மண்டபத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்று நேர்த்தியாக நகர்ந்து சென்றது..-

இந்த நல்நோக்கம் கொண்ட இராப்போசன விருந்து விழாவை அறிவிப்பாளர் மதிசயன் அவர்கள் தொகுத்து வழங்கினார்





அன்றைய தினம் இராப்போசன விருந்து விழாவில் ஆடல் பாடல் மற்றும் உரைகள் ஆகியனவும் இடம்பெற்றன.

'தாயகத்திற்குரிய உதவித் திட்டங்கள்' நோக்கம் கொண்டதான இந்த விழாவில் திட்டத்தின் நோக்கங்கள் பற்றி சங்கத்தின் தலைவர் ஹரந்தன் மாணிக்கவாசகர் மற்றும் திட்டப் பொறுப்பாளர் திரு சுப்பிரமணியம் ஆகியோர் விபரமாக எடுத்துரைத்தனர். எமது தாயகத்தின் வடக்கு கிழக்கு பகுதிகளில் உதவிகள் தேவைப்படும் மாணவர்கள்- விதவைத் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் - வயதில்





முதிர்ந்தவர்கள் ஆகியோர்க்கு வழங்கி வரும் உதவிகள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் அதிகரித்துள்ள தேவைகள் தொடர்பாகவும் விபரங்களை அவர்கள் வெளியிட்டனர்.

இந்த திட்டத்திற்கு பெரும் நிதி வழங்கி ஆதரவு வழங்கிய கல்வி நிறுவனத்தின் அதிபர் திரு முரளி நாராயணதாஸ் அவர்கள் தனது ஆதரவை தொடர்ந்து வழங்கவுள்ளதாகவும். இந்த நல்ல பணிகளைச் செய்து வரும் 'டுறம் தமிழர் சங்கம்' (னுரசாயஅ வுயஅடை யுளளழஉயைவழைெ) அமைப்பினருக்கு தனது பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்டார்.
மேற்படி நல்நோக்கத்திற்காக அங்கு அனுமதிச் சீட்டுக்கள் வாங்கி சமூகமளித்திருந்த அனைவருக்கும் அங்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.
'தேசம் பத்திரிகை சார்பிலும் அதுன் ஆசிரிய பீடத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

Kalaipiriya; Local Journalism Initiative Reporter



# கனடா வாழ் வர்த்தகத்துறை முன்னோடிகள் கணேசன் சுகுமார்-குலா செல்லத்துரை ஆகியோரின் சேவையைப் பாராட்டி வழங்கப்பெற்ற உயர் கௌரவங்கள்

கனடா வாழ் வர்த்தகத்துறை முன்னோடிகளும் சமூக நலன் விரும்பிகளுமான வர்த்தக வழிகாட்டிகளுமான திருவாளர்கள் கணேசன் சுகுமார்-குலா செல்லத்துரை ஆகியோரின் சேவையைப் பாராட்டி கனடிய அரசாங்கத்தின் சிபார்சின் பேரில் அவர்கள் இருவருக்கும் வழங்கப்பெற்ற உயர் கௌரவங்களை அண்மையில் நடைபெற்ற அரச வைபவம் ஒன்றில் பெற்றுக் கொண்டார்க்ள

மேற்படி உயர் கௌரவங்களை கனடா வாழ் 18 சேவையாளர்கள் பெற்றுக் கொண்டார்கள். மேன்மைதங்கிய இங்கிலாந்து மன்னர் மூன்றாம் சார்லஸ் மன்னரின் முடிசூட்டுப் பதக்கங்களே இந்த பதின்மருக்கு வழங்கப்பெற்றன.

இந்த பதக்கம் வழங்கப்பெற்றமை, மேற்படி இருவரும் ஆற்றிய சமூக சேவை மற்றும் தாராளசிந்தை மற்றும் அவை சார்ந்த பணித்திட்டங்கள் ஆகியவற்றிக்கானது என்பதும் இந்த கௌரவம் மக்கள் பணி ஆற்றும் அவர்களது உறுதிப்பாட்டையும் அங்கீகரிக்கிறது
என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்

இந்த கௌரவம் தொடர்பாக திருவாளர்கள் கணேசன் சுகுமார்-குலா செல்லத்துரை ஆகியோர் வெளியிட்டுள்ள நன்றி தெரிவிக்கும் செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது





"நமது சமூகம், நாடு மற்றும் உலகத்தை எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த இடமாக மாற்ற இந்த அங்கீகாரம் உதவுகின்றது. . இந்த அங்கீகாரத்திற்காக அதன் தேர்வுக் குழுவிற்கும் கனடா அரசாங்கத்திற்கும் நாங்கள் மனப்பூர்வமாக நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்கள் பயணம் முழுவதும் எங்களுக்கு வழிகாட்டும் ஒளியாகவும் வலுவாகவும் இருக்கும் ஒவ்வொருவருக்கும்-எங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர்-அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவிக்க விரும்புகிறோம்.

எங்கள் வாழ்வின் முக்கியமான அங்கமாக விளங்கும் இந்த சாதனையை எங்களுடன் கொண்டாடியதற்கும் மீண்டும் ஒருமுறை நாம் இருவரும் நன்றி தெரிவிக்கின்றோம்".

இவ்வாறு அந்த நன்றி தெரிவிக்கும் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது



# தமிழரசுக் கட்சிக்குள் தேசியத்துக்கு எதிரானவர்கள் இருக்கும்வரை தமிழரசுக் கட்சியை கடவுளாலும் காப்பாற்ற முடியாது”

கே.பாலா

“தலைவர் மாவை சேனாதிராஜா ரணிலுக்கு ஆதரவு ,எதிர்காலத்தலைவர் ஸ்ரீதரன்தமிழ்பொதுவேட்பாளருக்கு ஆதரவு,தலைவர் போட்டியில் தோல்வியடைந்த சுமந்திரன் சஜித்துக்கு ஆதரவு,துணைத் தலைவர் சிவஞானம் சஜித்துக்கு ஆதரவு.ஆனால் மேடையேற மாட்டார்.மத்தியகுழு உறுப்பினர் அரியநேத்திரன் தமிழ் பொது வேட்பாளர்.இதுதான் இன்றைய தமிழரசுக்கட்சி.இந்தக்கட்சியை தமிழ்மக்கள் நம்பினால் தந்தை செல்வா சொன்னதுபோல் “தமிழ் மக்களை இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்.”ஆனால் தமிழரசுக்குள் தேசியத்துக்கு எதிரானவர்கள் இருக்கும்வரை தமிழரசுக் கட்சியை கடவுளாலும் காப்பாற்ற முடியாது”

ஒரு வீட்டுக்குள் நடக்கும் பிரச்சினைகள்,பிணக்குகள் பிளவுகள் வீதிக்கு வந்தால் சந்தி சிரித்து விடும் என்பார்கள் .அதேபோன்றுதான் இன்று தமிழ் தேசியத்தின் தாய்க் கட்சி என பெருமை மட்டும் பேசிக்கொள்ளும் இலங்கை தமிழரசுக்கட்சியின் “வீட்டுக்குள் “ நடக்கும் தலைக்கன அரசியல்,தான்தோன்றித்தன அரசியல்,காட்டிக்கொடுப்பு ,கழுத்தறுப்பு அரசியல்”கூட இருந்தே குழிபறிக்கும் அரசியல்,ஆமாம் சாமி”போடும் அரசியல்,அல்லக்கை அரசியல் ,முதுகெலும்பு இல்லாத அரசியலால் நடக்கும் சண்டையால் தமிழ் மக்கள் மட்டுமன்றி முழுநாடும் பார்த்து கைகொட்டி சிரிக்குமளவுக்கு ‘வீடு” இன்று வீதிக்கு வந்துள்ளது.

ஒரு வீட்டுக்குள் கூட்டுக் குடும்பம் இருந்தால் மாமாவுக்கும் மருமகனுக்கும் அல்லது மாமிக்கும் மருமகளுக்கும் எட்டாப்பொருத்தம் இருக்கும். அல்லது மச்சான்மார் ,மச்சாள்மாருக்குள் பிணக்குகள் இருக்கும் .இல்லாதுவிட்டால் குழந்தைகளினாலாவது பெரியவர்களுக்கிடையில் பிரச்சினைகள் ஏற்படும். அந்த வகையில்தான் இன்று தமிழரசுக்கட்சியின் வீட்டுக்குள்ளும் தமிழ் தேசியத்துக்கு எதிரான சுமந்திரன் அணி,தமிழ் தேசியத்துக்கான ஸ்ரீதரன் அணி என இரு அணிகளுக்கிடையில் நடக்கும் பனிப்போரினால் “வீடு”அதகளப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஒரு வீட்டுக்கு நல்லதொரு ஆளுமையுள்ள குடும்பத் தலைவன் இருந்தால்தான் அந்த வீட்டில் இருப்பவர்களை அயலவர்கள் . ஊர்மக்கள் மதிப்பார்கள்,ஆனால் தமிழரசுக்கட்சியின் வீட்டுக்கு “பல்டி” அடிக்கும் அதுவும் சாதாரண “பல்டி” அல்ல “அந்தர் பல்டி”அடிக்கும் ஒரு தலைவர், பிள்ளைகள் செய்யும் குற்றங்களை தந்தைக்கு மறைத்து பிள்ளைகளை இன்னும் தவறு செய்யத்தூண்டும் மனைவிபோல் இருக்கும் துணைத் தலைவர் போன்றவர்களினால்தான் தடி எடுத்தவன் எல்லாம் சண்டைக்காரன்போல் தமிழரசுக்கட்சியினர் நடந்து கொள்கின்றனர்.

இவ்வாறான நிலையில்தான் எந்த ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பது என்பது தொடர்பில் முடிவெடுக்க தமிழரசின் மத்திய குழு கூட்டப்பட்டது ஆனால் இந்த மத்தியகுழுக்கூட்டத்தில் தலைவர் மாவை சேனாதிராஜாவோ அல்லது புதிய தலைவராக கட்சியின் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்டு “உள்வீட்டு”சதியால் பதவி ஏற்காதிருக்கும் ஸ்ரீதரனோ பங்கேற்கவில்லை . இவர்களுடன் இன்னும் பலர் பங்கேற்காத நிலையில் தான் மத்திய குழுவை துணைத்தலைவர் சிவஞானம் தலைமையில் கூட்டிய சுமந்திரன் அணி, ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிக்க தமிழரசுக்கட்சியின் மத்திய குழு ஏகமனதாக முடிவு என அறிவித்தது.

உடனடியாகவே இந்த தீர்மானத்தை நிராகரித்த தலைவர் மாவைசேனாதிராஜா “இவ்வாறான தீர்மானம் தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது .இது கட்சியின் தீர்மானம் அல்ல” என அறிவித்தார். ஆனால் சுமந்திரன் விசுவாசியான துணைத் தலைவர் சிவஞானமோ “மத்தியக்குழுவின் தீர்மானத்தை தலைவருக்கு அறிவிக்க வேண்டிய தேவை கிடையாது .அவ்வாறு அறிவிக்க வேண்டும் என யாப்பிலும் இல்லை”என விந்தையான காரணம் ஒன்றைக் கூறிவிட்டு சஜித்தை ஆதரிக்கும் தீர்மானத்தை நான் ஆதரிக்கின்றேன். ஆனால் சஜித்துக்கு ஆதரவாக எந்த மேடையிலும் ஏறமாட்டேன் எனவும் விசித்திர அறிவிப்பையும் விடுத்தார்.

இந்நிலையில் தலைவர் மாவை சேனாதிராஜா.மறுநாள் ஜனாதிபதித்தேர்தல் தொடர்பில் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் மத்திய குழுவின் தீர்மானத்துடன் இணங்கிப் போகவேண்டும் என அறிவித்து “பல்டி ”அடித்தார். அடுத்த ஓரிரு தினங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த “பல்டி” தலைவரை யாழ்ப்பாணத்திலுள்ள அவரின் வீடுதேடிச்சென்று சந்தித்த பின்னர் ஊடகங்களை சந்தித்த “பல்டி “தலைவர் ரணில் விக்கிரமசிங்க தான் மீண்டும் ஜனாதிபதியாவார் .அவர் பதவியேற்று 3 மாதங்களுக்குள் எமக்கு சமஷ்டி தீர்வை வழங்கவேண்டும் .அவர்தான் வெற்றிபெறுவார் “ எனக்கூறி அந்தர்”பல்டி”அடித்தார்.

ஆனால் ஸ்ரீதரனோ ஆரம்பம் முதலே “எனது ஆதரவு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பளருக்குத்தான் “என அறிவித்து அதில் இன்றுவரை உறுதியோடுமிருக்கின்றார். அதுமட்டுமன்றி தனது கிளிநொச்சி மாவட்ட தமிழரசுக்கட்சியின் கிளையில் தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவளித்து தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளார்.அதுபோன்றே திருகோணமலைமாவட்ட எம்.பி.யான குகதாசனும் திருகோணமலை மாவட்ட தமிழரசுக்கட்சியின் கிளையில் தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவளித்து தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளார்.

இவ்வாறாக ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதாகசுமந்திரன்அணியும்தமிழ்பொதுவேட்பாளரை ஆதரிப்பதாக ஸ்ரீதரன் அணியும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக தலைவர் மாவை சேனாதிராஜாவும் சஜித்தை ஆதரிக்கின்றேன் ஆனால் அவருக்காக மேடை ஏற மாட்டேன் என துணைத்தலைவர் சிவஞானமும் அறிவித்துள்ள நிலையில் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் யார்பக்கம் நிற்பது ,யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் விழிபிதுங்கி நிற்கின்றனர் . இன்று ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பது தொடர்பில் தமிழரசுக்கட்சியின் “வீடு’ 4 துண்டுகளாக உடைந்துபோயுள்ளது.

எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் முடிவெடுக்க ஜனாதிபதி வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து அறிக்கையிட நியமிக்கப்பட்ட 6பேர்கொண்ட குழு அறிக்கை சமர்ப்பிக்க முன்னரே இவர்கள் ஒவ்வொரு அணியினரும் ஒவ்வொரு வேட்பாளர்களை ஆதரித்து முடிகளை அறிவித்து விட்டமைதான் வேடிக்கையானது .

இவ்வாறு தமிழரசுக்கட்சி உடைந்து வீதிக்கு வந்துள்ள நிலையில் தான் கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் முடிவெடுக்க ஜனாதிபதி வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து அறிக்கையிட நியமிக்கப்பட்ட 6 பேர்கொண்ட குழுவில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பதில் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி. சிறிதரன் மற்றும் வடமாகாண சபை அவை தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் ஆகியோர் கூடிப்பேசினார் மட்டக்களப்பு முன்னாள் மேயர் சரவணபவன் கலந்துகொள்ளவில்லை.

இந்த சந்திப்பில் முடிவில் ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து எதிர்வரும் 15 ஆம் திகதி தமிழரசுக்கட்சியின் முடிவை அறிவிக்கும் இறுதி அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளதாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அறிவித்தார். வடிவேலு பாணியில் சொல்வதென்றால்”மறுபடியும் முதல்ல இருந்தா” என்று கேட்கத்தோன்றும் அறிவிப்பாகவே இது இருக்கின்றது.

“இந்த தேர்தலில் எங்களுடைய மக்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும், என்ன அடிப்படையில் வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பிலும் அதற்காக எங்களுடைய கட்சி ரீதியான கொள்கை, எங்களுடைய இனப்பிரச்சினை தீர்வு, சமஷ்டி, சுயநிர்ணய அடிப்படையிலான தீர்மானங்கள், அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வேட்பாளராக உள்ள சஜித் பிரேமதாசவின் கருத்துக்கள் தேர்தல் அறிக்கை விடயங்களையும் நாங்கள் கருத்தில் கொண்டு, அதில் எங்களுக்கும் அவருக்கும் இணக்கம் ஏற்படக்கூடிய விடயங்களை அடையாளப்படுத்தி எதிர்வரும் 14 அல்லது 15ஆம் திதிக்கு முன்னதாக எங்களால் தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கையை தமிழ் மக்களுக்காக வெளியிடவுள்ளோம். அதற்கு முன்னர் சுமந்திரன் சஜித் பிரேமதசாவை சந்தித்து பேசுவார்

இந்த தேர்தல் தொடர்பில் கொள்கை அடிப்படையிலும் இனத்தின் விடுதலை அடிப்படையாகவும் அதேவேளை சஜித் பிரேமதாசவின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் சார்பாகவும் அது தொடர்பில் எங்களுடைய கருத்துக்கள் என்ன என்பது தொடர்பிலும் அந்த அறிக்கையில் நாங்கள் குறிப்பிட இருக்கின்றோம். ஆகவே இந்த குழு மீண்டும் கூடி அந்த அறிக்கையை பத்திரிகையாளர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் வெளியிடுவோம் மாவை சேனாதிராஜா அறிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெற இருந்த மத்திய செயற்குழு கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.ஏற்கனவே கட்சியின் மத்திய செயற்குழு முடிவெடுத்ததன் காரணமாக மீண்டும் மத்திய செயற்குழுவை கூட்ட வேண்டிய தேவை இல்லை என்பதினால் அது இரத்த செய்யப்பட்டுள்ளது. தேவை ஏற்படும் பட்சத்தில் பின்னர் கூடலாம். தற்போது அதற்கான தேவை இல்லை என்பதன் அடிப்படையிலேயே ரத்து செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே நாங்கள் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு என தெரிவித்ததன் அடிப்படையில் அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண சபை விடயம், புதிய அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பான விடயம் உட்பட பல்வேறு விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான கால வரையறை தொடர்பாக சஜித்துடன் பேசி ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவது என முடிவு எட்டப்பட்டுள்ளது.இதன் அடிப்படையில் குறித்த கால வரையறைகள் தொடர்பாக சஜித் பிரேமதாசாவுடன் நான் கலந்துரையாடியதன் பின்னர் அதில் எட்டப்பட்ட தீர்மானங்களை இந்த விசேட குழுவிற்கு அறிவிப்பேன் என சுமந்திரன் எம்.பி.தெரிவித்துள்ளார்.

மலையக ,முஸ்லிம் கட்சிகள் எல்லாம் சஜித் பிரேமதாசவுடன் புரிந்துணவு உடன்படிக்கை,ஒப்பந்தங்கள் செய்தே ஆதரவளிக்கும் நிலையில் தமிழரசுக்கட்சி எந்த வித புரிந்துணவு உடன்படிக்கையோ ,ஒப்பந்தமோ செய்யாது எழுந்தமானமாக சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்தமையும் கடும் விமர்சனங்களையும் கண்டனங்களையும் ஏற்படுத்திய நிலையிலேயே தற்போது சஜித் பிரேமதாசவுடன்சுமந்திரன் பேசப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளமை பஸ் சென்றபின்னர் கைகாட்டுவதுபோன்றே உள்ளது.இது தமிழரசுக்கட்சி தலைவர்களினது அரசியல் முதிர்ச்சி ,சாணக்கியம் தொடர்பில் கேள்விகளை எழுப்பியுள்ளது.

தற்போது தமிழ் பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் மத்தியிலும் தமிழரசுக்கட்சியினர் மத்தியிலும் அதிகரித்து வரும் ஆதரவினாலேயே சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு என்ற முன்னைய ஒருபக்க தீர்மானம் தொடர்பில் சஜித் பிரேமதாசவிடம் சில உறுதிமொழிகளைப்பெற்று தமதுப்பக்க தீர்மானத்தை நியாயப்படுத்த சுமந்திரன் அணி முயற்சிப்பதாகவே தெரிகின்றது.அதேவேளை தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு என்ற அறிவிப்பை தமிழரசுக்கட்சி வெளியிட சுமந்திரன் அணி இணங்காது என்பதனால் எதிர்வரும் 14அல்லது 15 ஆம் திகதி தமிழரசுக்கட்சி வெளியிடவுள்ள அறிக்கையில் “தமிழ் மக்கள் தாம் விரும்பிய ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும்”என்ற பொதுப்பட்ட அறிவிப்பு ஒன்று வெளிவரவே வாய்ப்புள்ளது.

# “தாம் வாழும் சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்களே இலக்கியவாதிகளாக பிரகாசிக்கின்றார்கள்”

## கனடாவில் கவிஞர் ‘ஆரணி’ யின் நினைவிடைத்தோய்தல்’ கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி புகழாரம்

“தாம் வாழும் சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்களே இலக்கியவாதிகளாக பிரகாசிக்கின்றார்கள். அத்துடன் அவர்கள் சமூகத்தின் அங்கமாக விளங்கும் மாந்தர், அரசு மற்றும் அமைப்புக்கள் ஆகியவற்றை நாடி பிடித்துப் பார்த்து தமது அவதானிப்பை கவிதை போன்ற இலக்கிய வடிவங்களின் மூலம் வெளிக்கொண்டுவந்து பிரச்சனைகளுக்கான தீர்வையும் தேடுகின்றவர்களாக விளங்குகின்றார்கள். இந்த வகையில் இலக்கியவாதிகள் கூட ஒரு சமூக வைத்தியர்கள் என்ற முடிவிற்கு நாம் வரலாம்

இவ்வாறு கடந்த 14-09-2024 சனிக்கிழமையன்று மாலை கனடா மார்க்கம் நகரில் உள்ள அரச சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம் முன்னாள் அரசாங்க அதிபரும்

கவிஞர் ‘ஆரணி’ என்னும் புனைபெயரைக் கொண்டவருமான அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களின் ‘நினைவிடைத்தோய்தல்’ கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி புகழாரம் சூட்டினார்.

பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேற்படி கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களில் ஒருவருமான ஆர். என் லோகேந்திரலிங்கம் வரவேற்புரையையும் அறிமுக உரையையும், கவிஞர் அகணி சுரேஸ் அவர்கள் வெளியீட்டு உரையையும் முனைவர் வாசுகி நகுலராஜா அவர்கள் ஆய்வுரையையும் டாக்டர் போல் ஜோசப் அவர்கள் நயப்புரையையும் ஆற்றினார்கள். மேலும் திருவாளர்கள் கிருஸ்ணபிள்ளை திருவருள். சிவன் இளங்கோ. க. ரவீந்திரநாதன். சி இளஞ்செழியன். குருசாமி சுப்பிரமணியம், தென்புலோலியூர் கிருஸ்ணலிங்கம் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கினார்கள்.

விழா நிகழ்ச்சிகளை திருமதி ஜோதி ஜெயக்குமார் சிறப்பாக தொகுத்து வழங்கினார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் த னது உரையில் பின்வருமாறு தெரிவித்தார்.

கலை இலக்கியவாதிகளின் பங்களிப்புக்கள் எமது தமிழ் இனத்திற்கு தற்காலத்தில் மிக அவசியமாகத் தேவைப்படுகின்றன. பல வகையான அடக்குமுறைகளினால் நொந்து போயுள்ள எம் இனத்தின் அவலங்களையும் தேவைகளையும் அவற்றிக்கான தீர்வையும் தீர்க்க தரிசனத்துடன் படைக்க வேண்டிய பொறுப்பு எம் மத்தியில் வாழும் படைப்பாளிக்களுக்கும் கவிஞர்களுக்கும் உள்ளது. அவர்களின் எமது தாயகக் கவிஞர் ஆரணி அவர்கள் தான் வாழும் சமூகத்தினதும் இனத்தினதும் அவலங்களை நல்ல கலையம்சங்களோடு கவிதைகளாக வடித்து அங்கிருந்து நூல்களை இங்கு கொண்டுவந்துள்ளார். அவருக்கு நாம் ஆதரவையும் ஊக்குவிப்பையும் வழங்க வேண்டும்” என்றார்.

அங்கு தலைமையுரையாற்றிய பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் தனது உரையில் “எம் மத்தியில் வெளிவருகின்ற இலக்கியப் படைப்புக்களை நாம் தற்காலத்தில் மூன்று தளங்களில் வைத்து பார்க்க வேண்டும். தாயகம்- தமிழகம்- மற்றும் புலம் பெயர் தேசம் ஆகிய மூன்றுதளங்களில் எமது படைப்புக்கள் பார்வைக்கும் விமர்சனத்திற்குமாக காட்சிப்படுத்தப்பட வேண்டும். அந்த வகையில் எமது இன்றைய நூலாசிரியர் தாயகக் கவிஞர் ஆரணி அவர்கள் தனது கவிதை நூலை தாயகத்தில் வெளியிட்டு வைத்து விட்டு தற்போது நாம் வாழுகின்ற புலம் பெயர் தேசமான கனடாவிற்கு கொண்டு வந்துள்ளார். அவர் ஒரு சரியான இடத்திற்கே கொண்டு வந்துள்ளார் என்றே நாம் கருதுகின்றேன். காரணம் கனடாவில் நாம் பல இலக்கிய அமைப்புக்களை நடத்தி வருகின்றோம்.இங்கு நூற்றுக்கு மேற்பட்ட கவிஞர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். கனடாவில் உள்ள கவிஞர்கள் மற்றும் கவிதைச் சுவைஞர்கள் மத்தியில் இந்த நூல்வெளியிடப்படுகின்றது பெருமைக்குரியதும் உயர்ந்த அங்கீகாரத்தைப் பெறக்கூடியதுமாகிய ஒரு விடயமாகும். எனவே நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து கவிதை நூலின் ஆக்ககர்த்தா அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களை பாராட்டுவோம் கொண்டாடுவோம்” என்றார்

மேற்படி வெளியீட்டு விழாவில் சுருவில் சரவணை மற்றும் தீவகம் ஆகிய இடங்களைச் சேர்ந்த நண்பர்கள் உறவினர்கள் மற்றும் இலக்கியவாதிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். அவர்கள் அனைவரும் நூலின் பிரதிகளை அன்பளிப்புக்களை வழங்கி நூலாசிரியரிடமிருந்து பெற்றுச் சென்றார்கள்.

இறுதியில் பதிலுரையாற்றிய நூலாசிரியர் அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் உரையாற்றினார். தனது எழுத்துக்களுக்கும் கருத்துக்களுக்கு மதிப்பளித்து இந்த விழாவை ஏற்பாடு செய்த விழாக்குழுவினருக்கும் நன்றி தெரிவித்து தனது படைப்புக்கள் பற்றிய திறந்த விமர்சனங்களை வழங்கிய அனைத்து உரையாளர்களுக்கும் நன்றி தெரிவித்தார். சுருவில் மற்றும் சரவணை மக்கள் ஒன்றியங்கள் சார்பில் பாராட்டுக் கேடயங்கள் கவிஞர் ஆரணி அவர்களுக்கு வழங்கப்பெற்றன.

சத்தியன்














# தமிழர்கள் கோரிவந்த 'நீதி வழங்குதல்' என்ற அந்த பந்தை புதிதாக அமையவுள்ள இலங்கை அரசிடமே மீண்டும் தள்ளிவிட்ட ஐ நா மனித உரிமைகள் பேரவை.

சிவா பரமேஸ்வரன்

போர்க்காலத்தில் இழைக்கப்பட்ட அட்டூழியங்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நீதியை வழங்குதல் என்கிற கால்பந்து மீண்டும் இலங்கை அரசிடம் உதைக்கப்பட்டுள்ளது. சர்வதேச தலையீடு தேவை என்று தமிழர்கள் கோரிவந்த நிலையில், நீதி வழங்குதல் என்ற அந்த பந்தை இப்போது புதிதாக ஆட்சிக்கு வரவுள்ள இலங்கை அரசிடமே மீண்டும் தள்ளிவிட்டுள்ளது ஐ நா மனித உரிமைகள் பேரவை.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வழங்குவதில் சர்வதேச தலையீட்டிற்கான கோரிக்கையை தொடர்ந்து நிராகரிக்கும் இலங்கை அரசு இந்த விடயத்தில் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சனைகளுக்கு உள்நாட்டு பொறிமுறைகள் மூலமே கையாள தம்மால் முடியும் என்று கூறி வருகிறது.

இலங்கையில் நிலவும் மனித உர்மைகள் சூழல் தொடர்பில், வாய்மொழியாக அளித்த அறிக்கை ஒன்றில், பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்குவதற்கான பொறுப்பை அடுத்து ஆட்சியிடம் ஐ நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையர் வோல்கர் டூர்க் ஒப்படைத்தார்.

நாட்டின் அடுத்த ஜனாதிபதியை தேர்ந்தெடுக இலங்கையில் எதிர்வரும் செப்டம்பர் 21ஆம் திகதி தேர்தல் நடைபெறுகிறது. இதுவரை கொடுக்கப்பட்டு நிறைவேற்றப்படாத உறுதிப்பாடுகளை செயல்படுத்தும் பொறுப்பை, இன்னும் சில நாட்களில் ஆட்சிக்கு வரவுள்ள புதிய ஜனாதிபதியிடம் ஐ நா மனித உரிமைகள் ஆணையர் அளித்துவிட்டார். ஜெனீவாவில் நடைபெற்றுவரும் ஐ நா மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது அமர்வில் சமர்ப்பித்த தனது அறிக்கையில், முன்னர் ஆட்சியில் இருந்த அரசுகள் அந்த பேரவைக்கு கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றவில்லை என்பதை புதிதாக ஆட்சிக்கு வரவுள்ள அரசுக்கு நினைவூட்டினார்.

"இலங்கையில் ஜனாதிபதி தேர்தலும், அதையடுத்து இந்த ஆண்டின்பிற்பகுதியில்நாடாளுமன்றதேர்தல்நடைபெறவுள்ளது. இதையடுத்து ஆட்சிக்கு வருபவர்கள் பொறுப்புக்கூறல், நீதி வழங்குவது மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கு உறுதியளிக்கும் அதேவேளை அதை நோக்கிய இடைக்கால மாற்றங்களுக்கு தாங்கள் அர்ப்பணிப்புடன் இருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்"

ஐ நா மனித உரிமைகள் பேரவையில் ஆணையர்களாக இருந்தவர்கள் தொடர்ச்சியாக பொறுப்புக்கூறல் மற்றும் தவறிழைத்தவர்கள் நீதியின் முன்னர் நிறுத்தப்படுவது ஆகியவற்றை இலங்கை அரசிடம் வலியுறுத்தி வந்தாலும், அந்த கோரிக்கைகள் தோல்வியிலேயே முடிந்துள்ளன.

இலங்கை தற்போது நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் உள்ளது என்றும், அது பழைய நிலைப்பாடுகளை உடைத்தெறிந்து புதிய பாதையை நோக்கி நகர வேண்டும் என்று வோல்கர் டூர்க் தனது அறிக்கையில் கூறியுள்ளார் நீண்டகாலமாக இலங்கையில் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசுகள், போரினால் பாதிக்கபட்ட மக்களுக்கு நீதியை வழங்க தவறிவிட்டன என்று அவரது அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இலங்கை தொடர்பான அறிக்கையிடலின் போதே இது தெரிவிக்கப்பட்டது.

"இலங்கையில் மோசமாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் முடிந்து 15 ஆண்டுகள் ஆகின்றன. எனினும் அதில் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களின் குடும்பத்தார் இன்னும் உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகளுக்காக காத்திருக்கின்றனர்".

எனினும் பாரிய மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றை இழைத்ததாக குற்றஞ்சாட்டப்படுபவர்கள் மீது எப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்து அவரது வாய்மொழி அறிக்கையில் வெளிப்படையாக ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இடம்பெறும் 'கவலையளிக்கும் போக்குகள்' குறித்து சுட்டிக்காட்டி பேசிய அவர், அடிப்படை உரிமைகளுக்கான அச்சுறுத்தல் தொடருவது, பிற்போக்குச் சட்டங்கள், ஜனநாயக ரீதியில் கண்காணிப்புகள் மற்றும் கட்டுப்பாடுகளில் தேய்மானம், பொதுச் சமூகம் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான துன்புறுத்தல் மற்றும் மிரட்டி பணியவைப்பது ஆகியவற்றை காண முடிகிறது என்று தெரிவித்தார்.

அரகலய' மக்கள் எழுச்சிப் போராட்டத்திற்கு பிறகு 'புதிய தொடக்கம்' இன்று ஜனாதிபதி அளித்த உத்தரவாதம் பெரும்பாலும் 'நிறைவேற்றப்படாமலேயே உள்ளது".

"சட்டவிரோதமாக கைதுகள் மற்றும் சித்திரவதை உட்பட கடந்த காலங்களில் இடம்பெற்ற மீறல்கள் ஆகியவை தொடருகின்றன என்பதை அங்கு நடைபெறுவது வெளிச்சம் போட்டு காட்டுகிறது, மேலும் ஆழமான சீர்திருத்தங்கள் இல்லாத நிலையில், எதிர்காலத்தில் உண்மையான அபாயங்கள் இருப்பதையும் கோடிட்டு காட்டுகிறது".

தவறு செய்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல் இருக்கும் கலாச்சாரம் குறித்து தனது கருத்தை தெரிவித்த வோல்கர் டூர்க், அது அர்த்தமுள்ள முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பதோடு மட்டுமில்லாமல் மீறல்கள் தொடருவதற்கும் மேலும் ஊழல் அதிகரிப்பதையும் உக்குவிக்கும் என்றார். "பொறுப்புக்கூறல் இல்லையென்றால், வன்முறை கலாச்சாரம் தொடர்ந்து மேலும் வன்முறையை ஊக்குவிக்கும். தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்படாதது நாடுகளையும், சமூகங்களையும் பலவீனப்படுத்தும் புற்றுநோய் போன்றது".

நடைபெறவுள்ள ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல் காலத்திலும் அதற்கு பின்னரும் அரசு கருத்துச் சுதந்திரம், அமைதியாக ஒன்றுகூடுதல் ஆகியவற்றை முழுமையாக பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஐ நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையர் மேலும் கருத்து வெளியிடும் போது, தமது அலுவலகத்திற்கு தொடர்ச்சியாக, துன்புறுத்தல், கண்காணிக்கப்படுவது, ஊடகவியலாளர்கள், சிவில் சமூகத்தினர், பாதிக்கபட்டவர்கள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் ஆகியோர் அச்சுறுத்தி பணியவைக்கப்படுவது குறித்து முறைப்பாடுகள் வருகின்றன, அது ஏற்புடையதல்ல என்றும் தெரிவித்தார். பொலிசார் மற்றும் பாதுகாப்பு படைகளின் அத்துமீறல்கள் தொடருகிறது என்றும், சட்டவிரோதமாக தடுத்துவைக்கப்படுவது, சித்தரவதை ஆகியவை குறித்தும் தமது அலுவலகத்திற்கு குற்றச்சாட்டுக்கள் வருகின்றன என்றும் கூறினார்.

"நிகழ்காலம் மற்றும் கடந்த காலக்களில் இடம்பெறும் மீறல்கள் குறித்த பொறுப்புக்கூறல் இல்லாத நிலை ஒரு அடிப்படை பிரச்சனை என்றும், இதை அடையாளப்படுத்தும் வழக்குகளில் ஆக்கபூர்வமான முன்னேற்றம் இல்லாததன் மூலம் நிரூபிக்கப்படுகிறது". "மேலும் இன்று, பாரிய மீறல்களுக்கு பொறுப்பானவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், மூத்த பொறுப்புகளில் தொடர்ந்து நியமிக்கப்படுகிறார்கள்".

அவ்வகையில் தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமையானது ஆழமாக வேரூன்றியுள்ளது. அதன் காரணமாக ஊழல், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் அரச நிர்வாகத்தின் தோல்வி ஆகியவை ஏற்பட்டன. இவைகளே நாட்டின் அண்மைய பொருளாதார நெருக்கடிகளுக்கு அடிப்படை காரணங்களாக உள்ளன என்று வோல்கர் டூர்க் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டினார்.

தமிழ் தாய்மார்கள், மனைவிகள், சகோதரிகள் ஆகியோர் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது அன்பிற்குரிய உறவுகளை தொடர்ந்து கடந்த 8 ஆண்டுகளுக்கும் மேலாக தேடி வரும் நிலையில், அரசால் நிறுவப்பட்ட காணாமல் போனவர்களை கண்டுபிடிப்பதற்கான அலுவலகம் இதுவரை ஒருவரைக் கூட கண்டுபிடிக்கவில்லை என்றாலும் இது குறித்த தனது கரிசனைகளையும் அவர் பகிர்ந்து கொண்டார். எனினும் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் குடும்பங்கள் கோருகின்றபடி இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும் என்பது போன்று குறிப்பிட்ட எந்த நடவடிக்கையையும் அவர் பரிந்துரைக்கவில்லை.

"அவர்களின் குடும்பங்கள் திருசங்கு சொர்க்கம் என்ற நிலையில் சிக்கி பதில்களுக்காக காத்திருக்கின்றனர். மேலும், இதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படவுமில்லை. இது மாற வெண்டும். மேலும் அதுவே போர்க்காலத்தில் இடம்பெற்ற பாரிய மீறல்கள், அரச மற்றும் பாதுகாப்பு படையினர் நடந்துகொண்ட விதம், மற்றும் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சமூகங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளின் தொடர்ச்சி ஆகியவற்றை முறையாக ஏற்பதன் தொடக்கமாக இருக்கும்".

கடந்த காலங்களில் இடம்பெற்றவைகளை கையாள்வது மற்றும் சர்வதேச குற்றங்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தாமல் இருப்பது, பழைய மோதல்களை மீண்டும் உருவாக்கும், புதிய மோதல்களை ஏற்படுத்தும் மேலும் எதிர்கால மோதல்களுக்கும் வழி வகுக்கும் என்றும் அவர் எச்சரித்தார்.

எனினும், போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வழங்க நேரடியாக எந்த காத்திரமான நடவடிக்கைகளையும் முன் வைக்காத வோல்கர் டூர்க், கடந்த காலத்தில் நடைபெற்றவைகள் மூடப்பட வேண்டும் என்றும் மக்கள் மற்றும் சமூகங்கள் நீண்டகாலமாக எழுச்சி மற்றும் துயரங்களை எதிர்கொண்டுவிட்டனர் என்று தனது அறிக்கையில் தெரிவித்தார்.

"கடந்த காலத்தில் நடைபெற்றவைகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கு இது சரியான சமயம். மேலும் வன்முறைகளை ஏற்படுத்தி பாதிக்கப்பட்டவர்களை அதிகரிக்க செய்யும் அந்த அழிவு சுழற்சியை முறியடிக்கப்பட வேண்டும்".

இதேவேளை இலங்கையில் பொறுப்புக்கூறல் விடயத்தில் இருக்கும் இடைவெளியை நிரப்ப, ஐ நா உறுப்பு நாடுகள், தமது அலுவலகமான ஐ நா மனித உரிமைகள் ஆணையரின் அலுவலகத்தின் பணிகளுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு, ஐ நா மனித உரிமைகள் ஆணையரின் அலுவலகம் இலங்கையில் பொறுப்புக்கூறல் திட்டத்தை (ஸ்ரீடியூபீ) ஏற்படுத்தி, அங்கு இடம்பெற்ற மீறல்கள், மனித உரிமைகள் துஷ்பிரயோகங்கள் மற்றும் இதர குற்றங்கள் ஆகியவை குறித்த ஆதாரங்களை திரட்டுவதற்காக அமைத்தது.

ஐ நா மனித உரிமைகள் ஆணையருக்கு ஜெனீவாவில் பதிலளித்த இலங்கை அந்த பொறிமுறைக்கு (ஸ்ரீடியூபீ) அந்த பேரவையின் ஒருமித்த ஒப்புதல் இல்லை என்பதால் அதன் தாங்கள் நிராகரிப்பதாகவும் தெரிவித்தது.

"பொருளாதார மீட்டெடுப்பிற்கு சமாந்திரமாக, அரசு கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட காயங்களை ஆற்றுப்படுத்தவும், பல தசாப்தங்களாக பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் சமூகங்கள் ஆகியோர் எதிர்கொண்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காண அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது" என்று ஜெனீவாவிலுள்ள ஐ நா அலுவலகங்களுக்கான இலங்கை நிரந்தர வதிவிட பிரதிநிதி ஹிமாலி சுபாஷினி அருணதிலக தமது பதிலுரையில் கூறினார்.

"இந்த நடவடிக்கைகளில் முன்னாள் போராளிகள் மற்றும் சிறார் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பது, வடக்கு மற்றும் கிழக்கில் கண்ணிவெடிகளை அகற்றி மேம்படுத்துவது, இழப்பீடுகளை அளிப்பது, உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்துவது, தனியார் காணிகளை அதன் முறையான உரிமையாளர்களிடம் ஒப்படைப்பது, வாழ்வாதார உதவிகளை அளிப்பது மற்றும் காணாமல் போனவர்களை தேடுவது தொடர்பிலானவைகளும் அடங்கும்".

மேலும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காக, உள்நாட்டு பொறிமுறையாக, காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் (ழுஆீ), தேசிய ஒருமைப்பாடு மற்றும் இணக்கப்பாட்டிற்கான அலுவலகம் (ழுருசு), வெளிநாட்டு இலங்கையர்களுக்கான அலுவலகம் மற்றும் உண்ம மற்றும் பொறிமுறைக்கான இடைக்கால செயலம் (ஐளுவுசுஆ) ஆகியவை நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் ஐ நா மனித உரிமைகள் பேரவைக்கு தெரிவித்தார்.

# இந்த தேர்தலை பகிஸ்கரிப்பதன் மூலம் தமிழ் மக்கள் இந்த முறைமையை ஏற்கத் தயார் இல்லை என செய்தியை உலகிற்கு சொல்வோம்

## நா.உ.கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

தமிழ் வேட்பாளரை நிறுத்துவதன் ஊடாக சிங்கள தேசத்தினுடைய அரசியல் அமைப்பை சிங்கள தேசத்தினுடைய அந்த வட்டத்துக்குள் நாங்களும் இருக்கின்றோம் என்பதுடன் தமிழ் தேசிய அரசியலை சிங்கள தேசியவாதத்துக்குள் முடக்கும் செயற்பாடு எனவே இந்த தேர்தல் தமிழ் மக்களுடன் சம்மந்தப்பட்ட தேர்தல் அல்ல இந்த தேர்தலில் எதுவுமே சாதிக்க முடியாது சாதிக்க கூடிய ஒன்றே ஒன்று உலகத்துக்கு தமிழ் மக்கள் இந்த முறைமையை ஏற்க தயார் இல்லை இனிமேலும் ஏமாறுவதற்கும் தயாரில்லை என்ற செய்தியை தேர்தலை முழுமையாக பகிஸ்கரிப்பதன் ஊடாக நிலைநாட்டமுடியும் என நா.உ..கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பம் தனது கொழும்பு வீட்டில் 16-09-2024 அன்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஒரு சில மாதங்களாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி தங்களது நிலைப்பாட்டை தெளிவாக மக்களுக்கும் சர்வதேச மட்டத்திற்கும் அறிவித்திருந்தோம். இந்த பேர் முடிவுற்றுள்ள காரணத்தால் தமிழ் தேசிய அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து தமிழ் மக்கள் தமிழ் தேசியவாதத்தை கைவிடுவார்கள் என்ற சிங்கள தேசம் அசைக்க முடியாத ஒரு நம்பிக்கை இருக்கின்ற நிலையிலே அந்த கனவு இலங்கைதீவு வெறும் சிங்கள பௌத்த மக்களுக்கு சொந்தம் தமிழ் தேசத்திற்கு இடமே இல்லை என்ற நிலமையை தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்ளகூடிய ஒரு சூழலை இந்த இனழிப்பான பேருக்கு பின்னர் நிறைவேற்றலாம் என்ற கருத்தை 2009 ம் ஆண்டில் பேர் முடிவுக்கு வந்த காலத்திலிருந்து கொள்கை ரீதியாக மக்களுக்கு தெளிவுபடுத்தி வருகின்றோம்.
அதேவேளை சிங்கள தேசியவாதம் தமிழ் தேசியத்தை முற்றுமுழுதாக அழிக்கலாம் என்று நம்பி இருக்கின்ற ஒரு சூழலிலே அந்த தத்துவத்துக்கு ஒரு நெருக்குதல் கொடுக்க கூடிய ஒரு சூழல் தமிழ் தேசியம் வலியுறுத்துகின்றது தமிழ் தேசியத்தை அழிக்கின்ற சிங்கள தேசியத்தை நிராகரித்து தமிழ் தேசியவாதத்தை வலியுறுத்துகின்ற ஒரு நிலைப்பாட்டை உறுதியாக கடைப்பிடிப்பதன் ஊடாக மட்டும் தான் அந்த அழுத்தம் உருவாகும் என தெரிவித்து வருகின்றோம்.

பேர் முடிந்த சூழலிலே தமிழ் மக்களுக்கு ஒரு பாதிப்பு ஏற்படுத்தாமல் அதாவது ஒரு தேர்தலில் வருகின்ற போது அதில் தமிழ் மக்களுக்கு பிரதிநிதித்துவம் வரக்கூடிய அந்த பிரதிநிதித்துத்தை இழக்காமல் அதே நேரம் எமது தேசிய நிலைப்பாட்டை வலியுறுத்தியும் சிங்கள தேசியவாத போக்கை நிராகரித்தும் வெளிக்காட்டக்கூடிய ஒரே ஒரு தேர்தல் இந்த ஜனாதிபதி தேர்தல்.

பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் சிங்கள தேசியவாதம் ஊடாக உருவாக்கப்பட்ட ஒரு தேர்தல் முறையை இருந்தாலும் கூட அதில் பிரதிநிதித்துவத்தை முற்று முழுதாக இழக்கவேண்டிவரும் அதேபோன்று உள்ளூராட்சி தேர்தலிலும் அந்த பிரதிநிதித்துவம் இழக்கவேண்டிவரும். ஆப்படிப்பட்ட ஒரு நிலையிலே ஜனாதிபதி தேர்தல் மட்டும்தான் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான இழப்பும் ஏற்படாது நன்மையும் வரப்போவதில்லை சிங்களதேசத்தில் ஆட்சிக்கு வரப்போகின்ற அனைத்து தரப்புக்களும் தமிழ் தேசியத்தை நிராகரித்து கொண்டிருக்கும்.

ஒற்றையாட்சியை வலியுறுத்திகின்றனர் அப்படிப்பட்ட சூழலில் யார் போட்டியிட்டு யார் வந்தாலும் தமிழ் தேசியவாதத்திற்கு வரக்கூடிய நெருக்கடி நிரந்தரம் அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை அப்படிப்பட்ட ஒரு சூழலிலே சிங்கள தேசியவாதம் ஒரு உச்சத்திலே இருக்கின்ற ஒரு தேர்தல் முறையிலே தமிழ் தேசியவாதம் அதற்கு ஒரு நெருக்கடி கொடுக்க கூடிய ஒரு சந்தர்ப்பம் உருவாகும்.

தமிழ் வேட்பாளரை நிறுத்துவதன் ஊடாக சிங்கள தேசத்தினுடைய அரசியல் அமைப்பை சிங்கள தேசத்தினுடைய அந்த வட்டத்துக்குள் நாங்களும் இருக்கின்றோம் என்ற கோணத்தில் பார்க்கப்படும். எனவே சிங்கள தேசம் என்ற வட்டத்தில் இருந்து விலகி தமிழ் மக்கள் தங்களது தனித்துவத்தை விடாப்பிடியாக வலியுறுத்துகின்றனர் என காட்டக் கூடிய ஒரே ஒரு தேர்தல் முறை இந்த ஜனாதிபதி தேர்தலும் ஒரு பகிஸ்கரிப்பும்.
இன்று தமிழ் பொது வேட்பாளர் என்று தமிழ் தேசியத்தை வலியுறுத்தி வேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ளார் அந்த வேட்பாளருக்கு பின்னால் உள்ள சக்திகள் நேற்று வரைக்கும் ஒற்றையாட்சிக்குள் இருக்க கூடிய 13 திருத்தத்தை வலியுறுத்தி வருகின்றவர்கள் அந்த தரப்புக்குள் இரு வாரங்களுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி சிறப்பு என சொல்லக் கூடிய தரப்பும் இருக்கின்றனர் அதேவேளை நேற்று முன்தினம் ரணிலுடன் இரகசியமாக சென்று சந்தித்த தரப்புக்களும் இருக்கின்றனர்

1987 இருந்து தமிழ் மக்களுக்கு தோற்றுப் போன 13 திருத்தம் சாபக்கேடான ஒரு முறை ஆனால் பொது வேட்பாளர் ஒன்றை நிறுத்தி தமிழ் தேசிய வாதம் என்ற தத்துவத்தை காட்டி தமிழ் தேசியத்தை ஒருவகையில் கைவிடவதற்கான முறையை மக்களுக்கு திரும்பவும் திரும்பவும் காட்டுகின்றனர் எனவே தமிழ் தேசிய வாதத்தை உச்ச நலநன வெளிக் கொண்டுவரக் கூடிய ஒரு முறைமை பகிஸ்கரிப்பு

இந்த தேர்தலில் பாதிப்பு இல்லாமல் இந்த தேர்தலில் முற்றுமுழுதாக இந்த முறைமையை நிராகரிக்க கூடிய சூழலை காட்டக்கூடிய இடத்திலும் நாங்கள் இலங்கையர்கள் என்ற அரசியலமைப்பு முறைக்குள்ளே தொடர்ந்தும் விசுவாசமாக அதற்குள்ளேயே இருக்கபார்கின்றோம் என்ற செய்தியை ஒரு வேட்பாளரை நிறுத்துவதன் ஊடாக காட்டும் முறைமையைதான் அவர்கள் கடைப்பிடிக்கின்றனர்.

அவர்கள் ஒருவரும் தமிழ் தேசிய வாதத்திற்கு நேர்மையாக செயற்படுகின்ற தரப்பு இல்லை அவர்கள் வெளிநாட்டு தூதுவர்களை சந்திக்கும் ஒவ்வொரு தடவையும் 13 திருத்தத்தை ஆதரிக்கின்ற நிலைப்பாட்டை வலியுறுத்தி வந்துள்ளனர். அதேநேரம் ஏதே ஒரு விதத்தில் தமிழ் மக்களிடம் வாக்கை பெற்று அதை சிங்கள தேசியவாத கட்டமைப்புக்குள் தொடர்ந்தும் இருக்கின்றோம் என்ற வட்டத்துக்குள் வைத்திருப்பதற்கு இந்த தேர்தலில் போட்டியிடுகின்ற நிலமை வந்துள்ளதுடன் மக்களை அந்த வட்டத்துக்குள் வைத்திருக்கின்ற ஒரு சந்தர்ப்பதை ஏற்படுத்தியுள்ளனர்

தமிழ் தேசியவாம் என்ற கோணத்தில் இந்த பொது வேட்பாளரை நிறுத்தி மக்களை ஆதரிக்க செய்வது இலங்கையர் என்ற வட்டத்துக்குள் தொடர்ந்தும் தமிழ் தேசிய வாதத்தை முடக்கி வைத்திருக்கும் ஒரு சந்தர்ப்பம்

இந்த தேர்தலில் சர்வதேச சக்திகளுக்கு தங்களது நலன்கள் தேவை அந்த நலன்கள் பெரியளவில் விளையாடிக் கொண்டிருப்பதை அம்பலப்படுத்தி வருகின்றோம். தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெல்ல வைப்பதற்கு விசேடமாக மேற்கு நாடுகளும் இந்தியாவும் விரும்பிநிற்கின்றனர் என்பது தேர்தல் முறைமைகளும் உள்ளக ரீதியாக நடக்கின்ற அரசியல் நிலைப்பாடும் சர்வதேச சக்திகளின் நலன்களையும் எடுத்து பார்தால் விளங்கி கொள்ள கூடியதாக இருக்கும் ரணிலை வெல்லவைப்பது மேற்கு நாடுகளும் இந்தியாவும் வெற்றி வாய்ப்பை தேடக்கூடிய நிலமையை தேடுவார்கள்.

ரணில் கடந்த 15 வருடமாக தமிழ் மக்கள் மத்தியில் நட்பு சக்தியாக காட்டிய காலம் இன்று முற்றுமுழுதாக அம்பலப்பட்டுள்ளது அவர் தொடர்பாக எமது கட்சி ஆரம்பத்தில் இருந்து அவரை நிராகரித்து வந்ததுக்கான சுட்டிக்காட்டிய காரணங்கள் அனைத்தும் இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது ரணிலுக்கும் ராஜபக்ஸ தருப்புக்கும் இடையே எந்த விதமான வித்தியாசமும் இல்லை என்ற உண்மை இந்த இரண்டரை வருடமாக ரணில் ராஜபக்ஸ தரப்பை காப்பாற்றிய நிலையில் இருந்து நிரூபிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் வாக்குகள் ரணிலுக்கு விளமுடியாத என்ற கசப்பான உண்மை வல்லரசுகளுக்கு உருவாகியுள்ளது எனவே தமிழ் மக்களின் வாக்குகள் ரணிலுக்கு விளப்போகவில்லை என்றால் அதை வேறு ஒரு தரப்புக்கு அதாவது ரணிலின் வெற்றியை இல்லாமல் செய்யக் கூடிய தரப்புக்கு போக கூடாது என அவர்கள் அக்கறை செலுத்தியுள்ளனர். அந்த வாக்கை இன்னொரு சிங்கள வேட்பாளருக்கு போடக் கூடிய வாய்ப்பு மிக குறைவு இன்று ரணிலுக்கு பின்னால் சஜித். அனுரா 13 திருத்தத்தை வெளிப்படையாக வலியுறுத்தி வருகின்றனர்

2009 ம் ஆண்டு 13 திருத்தத்துக்குள் எங்கள் அரசியலை கொண்டு முடக்கப் போகின்றனர் அதற்கு கூட்டமைப்பு முழுமையாக உடந்தை என நாங்கள் சுட்டிக்காட்டிய நேரத்தில் அப்போது பெரிதா நம்பாம் இருந்திருக்கலாம் ஆனால் இன்று இந்த தரப்புக்கள் 13 திருத்தத்தை வலியுறித்திக் கொண்டிருக்கின்றனர்.

அப்படிப்பட்ட நிலையில் வட கிழக்கு ஈழ தமிழர்களுடைய வாக்குகள் சிங்கள வேட்பாளர்களுக்கு விழும் என்ற நிலை கேள்விக்குறியாக இருக்கின்ற சூழலிலே தமிழ் மக்கள் இந்த முறையும் தேர்தலில் அக்கறையே காட்டாமல்இருக்கின்ற நிலையில் பகிஸ்கரிப்பு வெல்லுவதற்கான வாய்ப்புக் கள் மிகப் பெரியளவில் அதிகரிக்கும் அதேவேளை ஒருபக்கம் ரணிலுக்கு அந்த வாக்கு விளாவிட்டால் அது வேறு ஒருவருக்கும் போகாது என்ற நம்பிக்கை இருந்தால் அது ஒரு பகிஸ்கரிப்பா அது மாறக்கூடாது அது தமிழ் தேசி மக்கள் முன்னணிக்கு ஒரு அங்கீகாரமாக அமையும் என்ற ஒரு பயமும் ஏற்பட்டிருக்கின்றது ஆகவே நேற்று வரைக்கும் ஒற்றையாட்சிக்குள் இருக்க கூடிய 13 திருத்தத்தை வலியுறுத்தி வந்த தரப்புக்கள் சில பேரை சேர்த்து அவர்கள் ஒற்றுமை என்ற போலி ஒற்றுமையை காட்டி 13வது திருத்தம், ஒற்றையாட்சியையும், சமஸ்டியையும் நிராகரித்து வருவதாக சொல்லி எல்லோரும் அதற்கு பின்னால் ஒற்றுமைப்பட்டிருக்கின்றோம் போலி நிலமையை காட்டி இந்த பகிஸ்கரிப்பில் இருந்து மக்களை தவிர்த்து ரணிலுக்கு மாற்றாக போககூடிய வாக்குகளையும் பகிஸ்கரிப்பு வாக்குகளையும் சேர்த்து தங்களுக்கு விசுவாசமான தரப்புக்கு எடுக்க வேண்டும் என்ற நொககத்தோடு இன்று இந்த பொது வேட்பாளர் என்ற தரப்பை உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழரசுகட்சியின் ஒரு தரப்பு சஜித்தை ஆதரிப்பதாக அறிவித்துள்ளது அந்த அணி கடந்த 15 வருடமாக சமஸ்டி என்ற வாரத்தையை உச்சரிக்க தயாரா இல்லாத இருந்த தரப்பு இன்று சமஸ்டியையும் தமிழ் தேசத்தையும் திடீரென உச்சரிக்க தொடங்கியுள்ளதுடன் அதனை சிங்களத்திலும் தெரிவித்து சஜித்துக்கு ஆதரவு தருவதாக முடிவெடுத்துவிட்டு அதேநேரம் அனுராவைப்பற்றியும் புகழாரம்.

சிங்கள மக்கள் மட்டத்தில் ரணிலுக்கு வாக்குகள் விளாமல் சஜித்துக்கு வரக்கூடிய வாக்குகளை ஏதே ஒருவகையில் குழப்பி ரணிலை விட சஜித்துக்கு வாக்குள் வரக்கூடாது என்பதற்காக தமிழ் தேசிய வாதிகள் சஜித்துடன் இருந்து கொண்டு சஜித் எந்தளவு தூரத்திற்கு சிங்கள தேசியவாதத்திற்கு நேர்மையாக நடந்து கொள்வார் என்ற குழப்பத்தை ஏற்படுத்தி அந்த வாக்குகளை ரணிலை நோக்கி செல்வதற்கான அல்லது சஜித்துக்கு போகாமல் செய்யும் முறைமை நடந்து கொண்டிருக்கின்றது

அதேவேளை தமிழ் மக்கள் மட்டத்தில் சஜித்தை ஆதரிக்கின்ற வடகிழக்கை பிரதிநிதித்து வப்படுத்துகின்ற தமிழ் அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு கிடையாது. தமிழ் மக்கள் மட்டத்தில் ஒரு குழப்பம் வரப்போவதில்லை ஆனால் அவர்களது நிலைப்பாடு சிங்கள மக்கள் மத்தியில் மட்டும் தான் குழப்பங்களை ஏற்படுத்தலாம் இதனை எல்லாவற்றையும் தொகுத்து பார்த்தால் இன்று தமிழ் தேசியத்துக்கு நேர்மையாக ஒரு செய்தியை கொடுக்க கூடிய ஒரே ஒரு வழி பகிஸ்கபரிப்பு மட்டும்தான்

ஆகவே மக்களிடம் மிகவும் பொறுப்போடு கேட்டுக் கொள்வது தயவு செய்து இந்த போலி ஒற்றுமை என்ற கோசங்களுக்கு விலை போகவேண்டாம் இந்த போலி கோசங்களுக்கு மறந்து ஏமாந்து ஆணையை கொடுக்கும் நிலமை உருவாகினால் நாளை அந்த ஆணையை வைத்து இந்த ஒற்றையாட்சிக்குள் தமிழ் அரசியலை முடக்குகின்ற சதி முயற்சிகள் முன்னெடுக்கப்படும். இனழிப்பு சதிகள் ஊடாக தமிழ் மக்கள் ஏமாறக் கூடாது என்ற மனநிலைக்கு வளர்ந்து விட்டார்கள் என்ற செய்தியை தேர்தலை முழுமையாக பகிஸ்கரிப்பதன் ஊடாக மக்கள் நிலைநாட்ட வேண்டும் என்று உரிமையோடு கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.



கனகராசா சரவணன்

# தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சிக் கிளை தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதாக ஏக மனதாக தீர்மானம்

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சிக் கிளை தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதாக ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

குறித்த கலந்துரையாடல் 09-09-2024 அன்று பிற்பகல் 3 மணியளவில் மாவட்டக் கிளை அலுவலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தலைமையில் இடம்பெற்றது.



இக்கலந்துரையாடலில், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் குருகுலராஜா, பிரதேச சபைகளின் முன்னாள் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதன்போது, ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆராய நியமிக்கப்பட்ட குழு கூடாமலே கட்சியின் ஆதரவு அறிவிக்கப்பட்டது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி கட்சி அலுவலகமான அறிவகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச வட்டாரகிளைகளின் நிர்வாகிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.





தொடர்ந்து தெரிவிக்கையில் கடந்த 18-08-2024 அன்று மத்திய குழுக்கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆராய்ந்து யாருக்கு ஆதரவு அளிப்பது தொடர்பான குழு நியமிக்கப்பட்டது.

இந்த குழு கூடி முடிவெடுக்காது முடிவு அறிவிக்கப்பட்டது. தவறு நாளைய தினம் குறித்த குழு கூடவுள்ளது. கூடி சில முடிவுகள் எடுக்கப்படலாம் என தெரிவித்தார்.

இதன் பிரகாரம் 09-09-2024 அன்று நடைபெற்ற கலந்துரையாடலை கூடியிருந்த அனைவரும் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதாக தெரிவித்தனர். ஏக மனதாக தீர்மானம் எடுத்திருக்கிறார்.








# யாழ்ப்பாணம் வடமராட்சி மண்ணிற்கு ஆதரவு வேண்டி வந்த 'தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன்!

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரன் வடமராட்சி மண்ணிற்கு 16-09-2024 அன்றைய தினம் திங்கட்கிழமை விஜயம் செய்து தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களது இல்லம் அமைந்திருந்த இடத்திற்கு சென்று பார்வையிட்டதை தொடர்ந்து பரப்புரைக்கூட்டத்திலும் பங்கேற்றிருந்தார்.







வடமராட்சிக்கு விஜயம் செய்த தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு வல்வெட்டித்துறையில் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோவிலுக்கு சென்று வழிபாட்டினை மேற்கொண்ட பா.அரியநேத்திரனுக்கு ஆலய பிரதம குரு ஆசிகளை வழங்கியிருந்தார். அங்கிருந்து வல்வெட்டித்துறை ஆலடிப்பகுதி எம்.ஜி.ஆர். சதுக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள தியாக தீபம் நினைவிடத்திற்கு சென்று தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தியதுடன் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். திருவுருவச் சிலைக்கும் மரியாதை செலுத்தியிருந்தார்.

தொண்டைமானாறு அம்மா மணிமண்டபத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் அமைப்பாளரும் வல்வெட்டித்துறை நகரசபையின் முன்னாள் தலைவருமான செல்வேந்திரா தலைமையில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்திலும் பா.அரியநேத்திரன் கலந்துக்கொண்டிருந்தார்.

இதன்போது, தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதி யரசர் க.வி.விக்னேஸ்வரன், பொருளார் பேராசிரியர் வி.பி. சிவநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் மக்கள் கூட்டணியின் அமைப்பாளர்களான த.சிற்பரன், வி.மணிவண்ணன் உள்ளிட்ட பொதுமக்கள் பலர் பங்கேற்றிருந்தனர்.



# தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து இலங்கை தமிழரசு கட்சியினரால் பிரசார பணிகள் முன்னெடுப்பு!

தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளையினரால் பிரசார பணிகள் 16-09-2024 அன்று காலை முதல் முன்னெடுக்கப்பட்டது.



இதனடிப்படையில் வட்டுக்கோட்டை, சங்கானை, பண்டத்தரிப்பு, காரைநகர், மாதகல் உட்பட்ட பகுதிகளில் பிரசார பணிகள் முன்னெடுக்கப்பட்டன.



இதன்பொழுது இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிகிளை தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் , இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிகிளை மகளிர் அணி, இளைஞர் அணியினர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, வட்டுக்கோட்டை மூளாய் வேரம் பகுதியில் செவ்வாய்க்கிழமை தொகுதிக்கிளையின் பிரசாரகூட்டம் இடம்பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.





# திருகோணமலை – குச்சவெளி பகுதியில்26 விகாரைகளை அமைப்பதாக சஜித் பிரேமதாசவே முன்மொழிந்துள்ளார் – அம்பலப்படுத்திய ஸ்ரீகாந்தா!

பு.கஜிந்தன்

திருகோணமலை - குச்சவெளி பகுதியில் சுமார் 26 விகாரைகளை அமைப்பதற்கான திட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவே முன்மொழிந்துள்ளார் என மூத்த சட்டத்தரணியான என்.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய பொதுகட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் பா.அரியநேத்திரனை ஆதரித்து 16-09-2024 அன்று மாலை யாழ். ஊர்காவற்துறை பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், “தமிழ் மக்களுக்காக சஜித் பிரேமதாச ஒருபோதும் குரல் எழுப்பியதில்லை. ஆனால், ஒரு மந்திரியாக அவர், 1000 விகாரைகள் அமைக்கப்படும் என கூறியுள்ளார்.

தமிழ் மண்ணில் 2009ஆம் ஆண்டுக்கு பிறகு நூற்றுக்கணக்கான விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. குச்சவெளியில், 26 விகாரைகளுக்காக சுமார் 3887 ஏக்கர் நிலம், அதாவது ஒரு விகாரைக்கு கிட்டத்தட்ட 150 ஏக்கர் என்ற வகையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை, இவ்வாறான ஒரு கருத்தை விதைத்தது சஜித் பிரேமதாச ஆகும்” என குற்றம் சுமத்தியுள்ளார்.



# அநுரவின் கருத்துக்களோடு ஒத்துப் போகின்றோம் யாழ்ப்பாணத்தில் எம். ஏ. சுமந்திரன் எம். பி தெரிவிப்பு!

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசநாயக்க யாழ்ப்பாணத்தில் இனவாதத்தை அடிப்படையாக கொண்ட கருத்தினை வெளியிடவில்லை என தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எம்ஏ. சுமந்திரன் ஊழல் அற்ற அரசாங்கம் என்ற மாற்றத்தினை விரும்புகின்றோம், இந்த முயற்சியில் நாங்கள் அனுரகுமார திசநாயக்கவின் பக்கம் நிற்கின்றோம் அதனை ஆதரிக்கின்றோம் என தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

தென்பகுதி மக்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றார்கள் இந்த தேர்தல் மூலம் அந்த மாற்றம் வரும். ஆனால் வடபகுதி மக்கள் இந்த மாற்றத்தின் ஒரு பகுதியாக மாறவில்லை என தென்பகுதி மக்கள் தெரிவிக்க கூடும் என யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் தெரிவித்திருந்தார்.



அவர் இந்த சொற்களை பயன்படுத்தி இதனை தெரிவித்தவேளை பலர் உடனடியாக இது கோட்டாபயராஜபக்சவின் கூற்றை நினைவுபடுத்துகின்றது என தெரிவித்தனர். அனுராதபுரத்தில் இடம்பெற்ற பதவியேற்பு நிகழ்வில் கோட்டாபய ராஜபக்ச, நான் அனைவரும் எனது வெற்றியின் பங்குதாரர்களாக இருக்கவேண்டும் என விரும்பினேன், ஆனால் வடபகுதி மக்கள் இந்த வெற்றியில் என்னுடன் இணைந்து கொள்ளவில்லை என அவர் தெரிவித்திருந்தார்.

வடபகுதி மக்களிற்கு அவ்வேளை உணர்வொன்று காணப்பட்டது. அது சரியானது என நிரூபிக்கப்பட்டது. ஏனென்றால் கோட்டாபய ராஜபக்சவை தெரிவு செய்த தென்பகுதி மக்களே அவரை துரத்தினார்கள்.

நாங்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றோம் விரும்புகின்றோம். 70 வருடங்களிற்கு மேலான ஆட்சிமுறையில் மாற்றங்கள் ஏற்படவேண்டும். கடந்த இரண்டு வருடங்களாக மக்கள் கோருகின்ற மாற்றம் இல்லை. நாங்கள் அந்த மாற்றத்தினையும் கோருகின்றோம்.

ஊழல் அற்ற அரசாங்கம் என்ற மாற்றத்தினை விரும்புகின்றோம், இந்த முயற்சியில் நாங்கள் அனுரகுமார திசநாயக்கவின் பக்கம் நிற்கின்றோம் அதனை ஆதரிக்கின்றோம்.

நாங்கள் அவருக்கு இந்த விடயத்தில் முழுமையாக ஆதரவை வழங்குகின்றோம், ஊழலை ஒழிப்பதில் அவருக்கு முழுமையான ஆதரவை வழங்குவோம். இது குறித்து எந்த கேள்வியும் இல்லை.

வெவ்வேறு பகுதிகளில் வசிக்கின்ற மக்கள், வெவ்வேறு மொழிகளை பேசுகின்ற மக்கள், அவர்கள் எண்ணிக்கை அடிப்படையில் குறைந்தவர்களாக இருக்கலாம் ஆனால், அவர்களிற்கும் அரசாங்க அதிகாரங்களிற்கான சமமான அணுகல் காணப்படும் மாற்றத்தை விரும்புகின்றோம். இதுவே உண்மையான மாற்றமாகயிருக்கும்.

தோழர் அனுரகுமார இனவெறி உணர்வுகளுடன் இந்த கருத்தினை வெளியிட்டார் என நான் கருதவில்லை.

அவரை எனக்கு நன்கு தெரியும், அவர் இனவாத உணர்வுகள் அற்ற மனிதர், அவர் இந்த நாட்டில் இனவாதத்தை ஒழிப்பதற்கு தீவிர முயற்சிகளை எடுத்துள்ளார், இந்த விடயத்தில் எங்களிற்கு வேறு உணர்வுகள் வித்தியாசமான உணர்வுகள் இல்லை,

நாங்கள் வேறு ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிக்க தீர்மானித்திருக்கலாம் ஆனால் இந்த விடயத்தில் நாங்கள் இணைந்திருக்கலாம் என தெரிவித்துள்ளார்.

# தமிழ் மக்கள் அனுராவுக்கு வாக்களிக்குமாறு 'மாற்றத்துக்கான தமிழ் மக்கள்' அமைப்பு கோரிக்கை

தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தலில் அனுர குமார திசாநாயக்க ஆதரவு வழங்கி வாக்களிக்க வேண்டும் என மாற்றத்துக்கான தமிழ் மக்கள் அமைப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை (08) கோரிக்கை விடுத்துள்ளதுடன் நாங்களும் ஆதரவு வழங்குவதாக அதன் தலைவர் சுப்பிரமணியம் கமலேஷ்வரன் (கமலி) தெரிவித்தார்

மட்டு ஊடக அமையத்தில் 08-09-2024 அன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் தற்போது மக்கள் மத்தியில் மாற்று அரசியலை கொண்டு வரவேண்டிய தேவை இருக்கின்றது அதனடிப்படையில் நாங்கள் தன் எழுச்சியாக இந்த தீர்மானத்தை எடுத்துள்ளோம்

நாடு சுதந்திரமடைந்த பின்னர் அரசியல் காரணங்களுக்காக ஜே.வி.பி புரட்சியின் பின்னர் தமிழ் தேசிய போராட்டம் ஏற்பட்டது இற்கு எல்லாம் இந்த நிர்வாககட்டமைப்பு (சிஸ்ரம்) தான் காரணம் எனவே இது மாற்றப்படவேண்டும். எனவே இந்த வாக்குவங்கி அரசியல் இலாபகரமான சூழலாக மாறியதுதான் காரணம் இதனை நாங்கள் தொடரமுடியாது இதனை முடிவுக்கு கொண்டுவரவேண்டும்

எனவே இந்த பாரம்பெரிய அரசியலை தோற்கடிக்க இந்த ஜனாதிபதி வேட்பாளர் அனுரவை கொண்டுவரவேண்டும் அதற்காக வாக்களியுங்கள். எனவே இது அரசியல் இலாபத்துக்காக தூண்டப்படுகின்ற பிரச்சனை நாட்டை பிரித்து கொடுத்தாலும் தமிழ் சிங்களம் என சண்டை பிடிக்கத்தான் போகின்றனர் எனவே தீர்வு என்றதை விட ஜே.வி.பி கட்சி இந்த நாட்டில் ஒரு சமத்துவத்தை வழங்குவதன் மூலம் இனவாதத்தை நிற்பாட்ட முடியும்.

ஒரு இன மக்களின் இனப்பரம்பலை குறைப்பதற்கான குடியேற்ற திட்டமும் சரி இருக்கின்றதை அழிப்பதும் ஒரு இனழிப்புதான். அதேவேளை வடக்கு கிழக்கு இணைப்பு சாத்தியமா என சந்தேகம் இருக்கின்றது அதேவேளை ஜே.வி.பி வடக்கு கிழக்கை பிரித்ததில் எனக்கு உடன்பாடு இல்லை மாகாணசபை முறைமையை ஜே.வி.பி. ஏற்றுக் கொண்டுள்ளது ஜே.வி.பி. ஜனநாயகமுறையை பின்பற்றும் நிலைக்கு வந்துள்ளது எனவே வடகொரியாவை வைத்துக் கொண்டு அந்த முகத்தை பார்க்கவேண்டாம் ஆகவே தமிழ் மக்கள் அனுரவுக்கு வாக்களிக்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன் என்றார்

**சரவணன்**



# வடமாகாண மாற்றுத் திறனாளிகளுக்கான மாபெரும் இசைபோட்டி நிகழ்வின் விருது வழங்கும் விழா!

புதிய வாழ்வு நிறுவனமும், சாவிகா சங்கீத அறிவாலயமும் இணைந்து நடாத்திய வடமாகாண மாற்றுத் திறனாளிகளுக்கான மாபெரும் இசைபோட்டி நிகழ்வின் விருது வழங்கும் விழாவானது அண்மையில் ராஜா சரஸ்வதி மண்டபத்தில், புதிய வாழ்வு நிறுவனத்தின் இணைப்பாளர் திரு.விஜயகுமார் விஜயலாதன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் மதிப்பிற்குரிய திரு.இலட்சுமணன் இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் திரு. வி.பி.பாலசிங்கம், மதிப்பிற்குரிய முனைவர் திரு.திருநாவுக்கரசு கமலநாதன் ( யாழ் தேசிய கல்வியியல் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி ) , கௌரவ மருத்துவ கலாநிதி திரு.திருமதி. ஜெயதேவி கணேசமூர்த்தி ( ஜெய்ப்பூர் மாற்றுவலுவுடையோரக்கான புனர்வாழ்வு நிலையத்தின் தலைவர்) , சட்டவியல் நிபுணர் திரு.ஜனகன் முத்துகுமார் , மற்றும் மதிப்பிற்குரிய திருமதி. விரி. சிவகுமார் ( ஸ்தாபகர் ஆறுமுகம் விசாகரட்ணம் அறக்கட்டளை) ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

காலை 9 .00மணி அளவில் ஆரம்பித்த இந்த நிகழ்வு மதியம் 1.00 மணி வரை தொடர்ச்சியாக இடம்பெற்றது. இதில் சாவிகா சங்கீத அறிவாலயம் மற்றும் புதிய வாழ்வு நிறுவன இயக்குனர்கள், தன்னார்வலர்கள் ,மாற்றுத்திறனாளிக் குழந்தைகள், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் இசைப்போட்டியில் வெற்றிபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.
















For All Your Traveling Needs
Cheapest Air Fare In Town
Please call Mr. Lavan

Lowfare
travels and tours

Phone: 416.261.0555
2625 Eglington Ave East
Scarborough, Ontario
M1K 2S2

# தேசம்

NATION THE THESAM


EXPERIENCE THE DIFFERENCE
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Experts In The Local Market

Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment



Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
toronto.baskaran@gmail.com

Issue - 07 Once a Month SEPTEMBER 2024




## கனடா வாழ் வர்த்தகத்துறை முன்னோடிகள் கணேசன் சுகுமார்–குலா செல்லத்துரை ஆகியோரின் சேவையைப் பாராட்டி வழங்கப்பெற்ற உயர் கௌரவங்கள்

பக்கம் 19

## மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி வழங்கிய வருடாந்த ஆதரவாளர் ஒன்று கூடல்

பக்கம் 12



## தமிழர்கள் கோரிவந்த 'நீதி வழங்குதல்' என்ற அந்த பந்தை புதிதாக அமையவுள்ள இலங்கை அரசிடமே மீண்டும் தள்ளிவிட்ட ஐ நா மனித உரிமைகள் பேரவை.

பக்கம் 22

## இம்மாதச் சிறுகதை

## "நில்! கவனி! கண்ணீர் விடு!"

பக்கம் 07

